
# தேனகச் சிறுகதைகள்



பிரதேச செயலக கலாசாரப் பேரவை

மண்முனை வடக்கு - மட்டக்களப்பு

# ஒளிக்
# கீற்றுகள்

# தேனகச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்

த. மலர்ச்செல்வன்

பிரதேச செயலக கலாசாரப்பேரவை

மண்முனை வடக்கு - மட்டக்களப்பு

# தேனகச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர் - த. மலர்ச்செல்வன்

முதல் பதிப்பு - ஜுலை 2008

வெளியீடு - பிரதேச செலயக கலாசாரப்பேரவை,
மண்முனை வடக்கு
மட்டக்களப்பு

விலை - 200/-

| | |
|---|---|
| எல்லைகள் தாண்டி | - 01 |
| பெரிய எழுத்து | - 06 |
| பரிநிர்வாணம் | - 15 |
| ஒரு நிலவுச் சிறையும் இரண்டு ஆயுட் கைதிகளும் | - 22 |
| ஆத்மவிசாரம் | - 31 |
| கறுப்பு நாய் | - 39 |
| வரம் | - 47 |
| இறக்கை விரிக்கும் மரம் | - 54 |
| கொள்ளிவாய்ப் பிசாசுகள் | - 67 |
| நெஞ்சு பொறுக்குதில்லையே | - 75 |
| மண்ணாசை | - 82 |
| அரசியின் விருந்து | - 93 |
| இது ஒன்றும் புதிய கதை அல்ல | - 97 |
| யாருமிங்கு தீர்ப்பிடலாம் | - 104 |
| அப்பா | - 109 |
| ஆசாரங்கள் | - 115 |
| உரம் | - 120 |
| நட்பொன்று நாடகமாகிறது | - 128 |



# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை வருடந்தோறும் முத்தமிழ் விழாவினையும், தேனக மலரினையும் வெளியிட்டுவருகின்றது. இம்முறை அதிலிருந்து ஒருபடி மேற்சென்று; 1994 ஆண்டுமுதல் 2007 வரையான காலப்பகுதிகளில் தேனகமலர்களில் வெளிவந்த சிறுகதைகளைத் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியீடுவது பாராட்டத்தக்கது. அது மாத்திரமின்றி ஒரு தொகுதியாக எல்லாச் சிறுகதைகளும் வெளிவரும்போது, அக்கதைகளினூடாக இப்பிரதேசத்தின் வாழ்வின் தசிசனங்களையும், யதார்த்தத்தினையும், சிறுகதைகளின் வளர்ச்சியினையும் ஒரே பார்வையில் தரிசிக்க முடியும்.

இந்தவகையில், இதுவரை காலமும் இவ்வாறான முயற்சியினை வேறெந்த கலாசாரப்பேரவைகளும் மேற்கொள்ளாத சூழலில் எமது மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை மேற்கொண்டிருப்பதை நினைத்து மகிழ்வதோடு இக்கைங்கரியம் சிறப்புற வாழ்த்துகிறேன்.

திருமதி கலாமதி பத்மராசா
பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத்தலைவரும்,
பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு
மட்டக்களப்பு

# வெளிப்படுகை

1994 ஆண்டிலிருந்து 2007 வரையிலான 'தேனக மலர்' களில் பிரசுரிக்கப்பட்ட கதைகளின் தொகுப்பே இது இக்கதைகளில், முத்தமிழ்விழாவிற்கான திறந்தமட்டப் போட்டியில் முதல்பரிசுபெற்ற சிறுகதைகளும் சிறப்புச் சிறுகதைகளும் அடங்குகின்றன.

இந்தத்தொகுதிக்காக இக்கதைகளைத் திரும்பப்படித்தபோது அவற்றில் பல கதைகள் மொழியிலும் கதை சொல்லலிலும் வடிவத்திலும் வெவ்வேறு தளங்களைக் கொண்டிருந்தபோதும் அவற்றிற்கிடையே தமிழ்புனைகதைகளின் உடைப்புக்களை உணரமுடிந்தது. அந்த உடைப்பு பழைய கதை சொல்லியிலிருந்து கடந்துசெல்லும் தருணங்களாகயிருந்தன.

தமிழ் இலக்கியப்பரப்பில் புதியகதை சொல்லும் பாணி எழுந்து நிற்கின்ற காலங்களில் தேனகமும் அதற்கான களத்தினையும், உடன்பாட்டினையும் கொண்டிருந்தன. இது வாசகப்பரப்பில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தத் தொடங்கின அது எதிர்குரல்களாகவும், உடன்பாட்டுக் குரல்களாகவும் வலுப்பெற்றது. இது தமிழின் தட்டையான முறையில், பழைய கதைசொல்லும் பாணியிலிருந்து விடுபட்டுக் கொள்ளமுடியாத வாசகர்களின் எதிர்க்குரல்களாக அமைந்தன. எனினும் அவர்களுக்கான வெளிச்சத்தை ஏற்படுத்தும் முயற்சியில், நவீன பாணிக் கதைகள் பற்றிய கலந்துரையாடலோ கதையாடலோ நிகழாதது துரதிஷ்டமானது.

எப்படியிருப்பினும் பலத்தாலும் பலவீனத்தாலும் கட்டமைக்கப்பட்டு கதைசொல்லலில் ஒருகாலகட்டத்தின் தடயங்களைப் பேசியுள்ளன. அது வரலாற்றின் மீட்டுறுவாக்கத்தில் புதியமைல்கற்களை உருவாக்கியிருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் இப்படைப்பினூடாக உறவாடிய படைப்பாளிகளுக்கும், ஓவியர்களுக்கும், சிறுகதைகள் தொகுப்பாக வெளிவரக் காரணமாகயிருந்த பிரதேச செயலாளர், கலாசாரப்பேரவை உறுப்பினர்களையும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கின்றோம்.

**த. மலர்ச்செல்வன்**

**தொகுப்பாசிரியர்.**



# எல்லைகள் தாண்டி

கி. கலைமகள்

**ச**னி பகையாம் எண்டு சொல்லி சனிக்கிழமையும் முடிஞ்சுது. புடிச்ச சனிதான் இன்னும் முடியல. கிழமை புடிச்சதே அம்மாக்குத்தான். மாப்பிள்ளைபார்த்தே அவவுக்கு வயது போயித்தாம். "சீதனம் தர என்னட்ட காசில்ல. நான் குடும்பக் காரன்" அண்ணன் சொல்லுறான். "இப்பத்தான் எனக்குப் பிள்ள பிறந்திருக்கு. செலவப்பா" சின்னண்ணன் சொல்லுறான். "நானா உழைக்கன் அவர் சொன்னாச் செய்வன்" அக்கா சொல்லுகிறதும் பிழல்ல. தம்பி சத்தமே போடமாட்டான். அவனும் படிச்சு முடிச்சா சீதனத்தோட கலியாணம் முடிப்பான்.

"இருபத்தெட்டு வயது முடியப்போகுது. அவளுக்கு கலியாணம் முடிச்சுக் கொடுக்கிற நினைப்பு ஆருக்காவது இருக்கா" அம்மா தொடங்கினா. நான் சும்மாவா இருக்கன் மாப்பிள்ளை கிடைக்கணுமே அப்பா தன்ரபங்குக்கு கதைப்பார். "இவள் வீட்டில பொம்புளப்பிள்ளை மாதிரி இருந்தா மாப்பிள்ளை பாக்கலாம். புதினமா படிப்பு படிச்சு நாடகம் போட்டென்ன திரியுறாவு" எனக்கேசாட்டி அண்ணனுக்கு நித்திர வராது.

நானும் எனக்கு விரும்பின பாடத்தத்தான் படிச்சனான் மூத்த அண்ணனுக்கு எப்படி கொமஸ் படிக்க விருப்பமோ அப்படி எனக்கு நாடகம் படிக்க விருப்பம். படிச்சன் வேல செய்யிறன். நாடகம் போட்டன் என்ரவிருப்பப்படி நான் இருக்கிறதில ஒருத்தருக்கும் விருப்பமில்ல வாயாடியா, சண்டக்காரியா, சொல்லுக்கேக்காதவளாத் தெரியிறன் இது இப்ப நேற்று தொடங்கினதில்ல நான் பிறக்கும் முன்னே தொடங்கி இருக்கணும்.

அம்மாவ முதல் முதல் பொம்புள பார்க்க வந்தது அப்பாதானாம். அம்மா நல்ல வெள்ள, நல்ல நீட்டு முடி, நல்லாச் சமைப்பா. பாத்தோடனே அப்பாவுக்கு புடிச்சிருந்ததாம். அம்மாக்கு ஆரம்பத்தில விருப்பமில்ல. போகப்போக சரிவரும் எண்டு எங்கட தாத்தா முடிச்சுக் கொடுத்ததாம். நான் நல்லாத்தானே இருக்கன். உன்ட வயதில எனக்கு ரெண்டு பிள்ளைகள் எண்டு அம்மா சந்தோசமா சொல்லுவாவு. அம்மாக்கு எதிர்மாறா நான் பிறந்திருக்கன். அம்மாட நிறம்தான் இல்ல. ஆனா அம்மா மாதிரி எனக்கு முடிநீட்டுத்தான். முடி நீட்டா இருக்கிறதில எனக்கு விருப்பமில்ல எண்டு அரவாசிய வெட்டினனான். அதுக்கு நடந்த பிரச்சன பெரிசு. என்ட முடியவெட்டிறதுக்கும் எனக்கு உரிமையில்ல. முடிவெட்டினா கலியாணம் நடக்காதாம்.

சின்னண்ணன் வருகுது, "சுமி நாளை பொம்பிளபாக்க வாறாங்க நேரத்தோட வந்திடு, ஊர் வேலெல்லாம் பாத்துத்திரியாம" என்னைவிட அண்ணனுக்குத் தான் சந்தோசம். "வந்திடும்மா" அப்பா பாவம்தான். என்னோட படிச்ச புள்ளைகளுக்கெல்லாம் கலியாணம் முடிஞ்சு எனக்கு முடியல்ல எண்டுதான் அப்பாக்கு கவல.

பின்னேரம் வீடு களகட்டிருக்கு. மாப்புள்ள வரல, மாப்புள்ளட அம்மா பாத்தா சரியாம். போட்டோ கொடுத்தனிப்பிருக்காம், எண்டு அம்மா சொன்னவ. எண்டைக்குமில்லாம இண்டைக்கு ரீ கொண்டு போறன். எல்லாரையும் பாத்து சிரிச்சிடு எண்டு அண்ணன் சொல்லுறான். எல்லாரும் சொன்னவ பதட்டம் வருமெண்டு. ஆனா எனக்கொண்டையும் காணல.

பச்சக்களறில சாறிகட்டியிருக்கிறதானாம் மாப்பிள்ளட அம்மாவாம். பக்கத்தில அப்பாவாம். சின்னண்ணனுக்கு தெரிஞ்சாக்களாம். குடும்பம் நல்லமாம். இதெல்லாம் எப்ப நடந்ததோ தெரியல்ல. ஏதோ றீமோட்டில இயங்கிற ஆளப் போலயிருக்கன்.

"பேரென்னம்மா"

"சுமித்திரா"

"சமப்பிய"

'ஓரளவு சமைப்பன்'

"பெயின்ரிங், தையல் வேறெதாவது தெரியுமா?"

"எனக்கதில விருப்பமில்ல"

எனக்கு எழுதிறதான் விருப்பம். "இப்பெல்லாம் எழுதிறத்தால என்ன உழைப்பு. மிஞ்சிப்போன ஒரு கவிதைக்கு ஐந்நூறு ரூபா தருவாங்க" எனக்கு விருப்பமானத நான் தீர்மானிக்க ஒருத்தருக்கும் விரும்பமில்ல. இருக்க விரும்பாம எழும்பிப்போறன். எனக்கு தெரியும் வீட்டில ஒரு பூகம்பம் வெடிக்குமெண்டு. பரவால, இது என்ர வாழ்தலுக்கான போராட்டம்.

ஒரு முடிவும் சொல்லல்லையாம். சந்தோசம்தான் தலைக்கு வந்தது தலப்பாவோட போச்சு. இவமட்டும்தான் புதினமான பொம்பிள. எவ்வளவு கஸ்ரப்பட்டு பேசினனான். கலியாணம் முடிச்சா நாடகம் போடுறன் சமூகசேவ செய்யிறன் எண்டு திரியமாட்டாள், எண்டெல்லாம் சொல்லி கூட்டிவந்தா மகாராணி எழும்பிப் போறாவு. கலியாணம் முடிக்காம இருந்து எங்கடமானத்தையுமென வேண்டுறாவு. எப்ப இவள் இந்த வீட்ட விட்டுத் தொலையிறாளோ அப்பத்தான் இந்த வீட்ட நான் வருவன். சின்னண்ணண் போறான். ஏன்ரீ எங்களப் போட்டுக் கொல்லுறா. நல்லதுக்குத்தானே சொல்லுறம். லவ் பண்ணுறா வேறசாதிப் பொடியன. அந்த பிரச்சினை முடிய வேறொரு பிரச்சின. அப்பா ஒண்டுமே பேசல. தம்பி என்னக் கண்வெட்டாம பாத்துக்கொண்டே இருக்கான்.

எனக்கு விருப்பமானது, என்ர கொய்யாமரம் தான். என்ர பூனையும் அதிலதான் ஏறிப்படுக்கும். எனக்குப் பத்து வயதாயிருக்கும் போது மாமா தந்த மரம் இது. அப்பெல்லாம் இத வளக்கிறதுதான் என்ரகனவு. மாமா செத்ததக் கேள்விப்பட்டதும் இஞ்ச வந்துநிண்டுதான் அழுதநான். மாமா இந்தக் கொய்யாக் கம்புட நிறந்தான். என்ன, கறுப்புக்குட்டி எண்டுதான் கூப்பிடுறவர். எனக்கும் அது விருப்பம். அதுக்குப் பிறகு கறுப்புக்குட்டி எண்டு ஒத்தரும் என்னைக் கூப்பிடல்ல. எனக்கு முதல் முதலில்ல சுகம் இல்லாம வந்தோணே என்னண்டு தெரியாம இதில நிண்டுதான் அழுதநான்.

தம்பிவாறான். இப்பெல்லாம் அவனும் கதைக்கிறதில்ல. எண்ட பூன ஒண்டும் பேசாம எண்ட மடியில் வந்து படுக்குது. அது பெட்டப்பூனதான். இந்தப் பூனைய வளக்கிறதில ஒத்தருக்கும் விருப்பமில்ல. அது குட்டிபோட்டா நான்தான் ஏச்சும் வேண்டுற. கண்ண இறுக்கி மூடித்துப் படுக்குது. “ஏனக்கா இப்படிப்பண்ணின, அவங்க நம்மட குடும்பத்தப்பத்தி என்ன எண்ணுவாங்க” “எனக்குப் புடிக்கல்லடா ஏதோ நான் பரீட்ச எழுதிற மாதிரியும் அவங்க கேள்விகள் கேட்கிற மாதிரியும்”. இப்படியே இருக்கப் போறியா? இல்லடா என்னப் புரிஞ்சிருக்கிறவன முடிக்கப் போறன். அண்ணன் தான் விரும்பின பிள்ளையத்தானே முடிச்சவன். நானும் எனக்கு விருப்பமானவன ஏன்டா முடிக்கேலாது? இது இந்த வீட்டில நடக்கிற காரியம் இல்லெண்டு தெரியும். ஆனா எனக்குள்ள ஒரு நம்பிக்க.

எங்கட வீட்டில மூலையில இருக்கு சைக்கிள். அக்கா சைக்கிளத்தான் பாக்காள். நான் பள்ளிக்குப் போகக்குள்ள அக்காதான் என்ன ஏத்திப் போறவள். பத்தாம் ஆண்டிலதான் எனக்கு சைக்கிள் வேண்டித் தந்தவங்க. அதுவர நான் அவளோடுதான் போனனான். இந்த ஊரில சைக்கிள் றேஸ் வைச்சா அக்காதான் பெஸ்ரா வருவாள். நானும் அக்காவும் எந்த நாளும் கடக்கரரோட்டாலதான் போவோம். அண்ணனுக்குத் தெரிஞ்சா ஏசுவான் எண்டு நாங்க சொல்லுறதில்ல. நாங்க ரெண்டு

பேரும் சேர்த்து சைக்கிளோடி மூண்டுவருசமிருக்கும். அண்ணன் ஏச ஏச அக்கா சைக்கிள் ஓடுவாள். அவளுக்கு அதுதான் விருப்பம்.

இந்த வீட்டில என்னோடையும் சைக்கிளோடையும் கொய்யாமரத் தோடையும் அந்தப் பூனையோடையும் தான் விருப்பம் எண்டு சொல்லுறவள். நான் தான் இந்த அண்ணனுகளப் பாத்துப் பாத்துக் கெட்டுப் பொயித்தன். அக்கா, வாவன் சைக்கிளில ஒரு றவுண்ட் பொயித்து வருவம்.

அவளுக்கு இது புதினம் தான். நான் மாறியிருக்கன் எண்டு அவளுக்கு விளங்கியிருக்கு, ஒண்டும் பேசாம சைக்கில தள்ளுறாள். கடக்கர ரோட்டாலா போகக்குள்ள கட்டாயமா என்னோட கதைப்பாள். அக்கா கேற்றத்தாண்டிதாள் நானும் என்ட சைக்கிளோட பின்னால, என்ட பேரச்சொல்லி அண்ணன் கூப்பிடுறான். நான் திரும்பிப் பாக்கிறதில்ல எண்டு முடிவெடுத்திட்டன். சத்தமா கூப்பிடுறான்.

எங்கட சைக்கிள் எங்கட வீட்டுக் கேற்றத்தாண்டி வளவத்தாண்டி றோட்டத்தாண்டி வேகமாப் போகுது. சந்தோசமான பயணம் தான் இது.

- **2007** -



# பெரிய எழுத்து

த. மலர்ச்செல்வன்

அவனுக்கு எழுத்துப்பிடிக்காமல் போய் பல ஆண்டுகளாகி விட்டன. சுவரொட்டிகளைக்கூட வாசிப்பதில்லை. அதில் இருக்கும் எச்சரிக்கை களைக்கூட, அவன் பெரிது படுத்துவதில்லை. வீட்டில் சீனிச்சுருளில் வரும் எழுத்துக்களைக்கூட அவன் ஒரு மாதிரியாகப் பார்த்துக் காறுவான். அ,ஆ,இ... எனத்தன் பிள்ளை உச்சரிக்கும் போதுகூட முதுகில் ஒரு குத்து வைப்பான். ஆனால் எழுத்துக்கள் ஏதும் செய்ததில்லை. வரிவரியாய் வளர்ந்து கொண்டே இருந்தன.

நேற்றுப் பின்னேரம் ஒரு புது எழுத்தைக் கண்டான். கீழும் மேலுமாய் எழுதியிருந்தது. கொம்புகள் கூட முளைத்திருந்தன, வால்கள்கூட வளர்ந்திருந்தன. அதைக்கூட அவனால் ஜீரணித்துக்கொள்ள முடிய வில்லை. அழிறப்பர் கொண்டு அழித்தான். நீண்ட நாளைக்குப்பிறகு அவன் செய்த மிகப்பெரிய காரியம். ஆனால் எழுத்துக்கள் மெல்ல மெல்ல முளைத்து வந்தன. ஆத்திரம் கொண்டவன், வீதித் திருத்த வேலைக்காக கொதித்துக்கொண்டிருந்த தார்ப்பீப்பாவில் கொதித்தவியும் தாரை அள்ளியெடுத்து எழுத்தின்மீது ஊற்றினான். எழுத்துக்கள் துடித்தன.

பின், சில எழுத்துக்கள் எந்தவித உணர்ச்சியுமின்றி அடித்தபாம்பாய் சுருண்டு படுத்தன. சில எழுத்துக்கள் துள்ளிக் குதித்து வெடிப்பட்டவனாய் அடங்கின. அவனுக்கு நிம்மதி.

இந்தப் பிசகு அவனுக்கு சில ஆண்டுக்கு முன்னரே வந்திருக்க வேண்டும். அவனுடைய எழுத்துக்களில் முன்னர் கொம்புகளும், வால்களும் முளைக்காமலில்லை. ஆனால் அவன் தொன்மங்களும், வரைபடங்களும், குறியீடுகளும், சமன்பாடுகளும், சற்சதுரங்களும் இன்னும் சில எழுத்துக்களுடன் வரும்போது எழுத்துப் பெரிதாகும் என அக்கட்டுரையில் வந்த பின்பே தன் பாட்டில் பேசித்திரிந்தவன் ஆறுமாதங்களாய் நீரைமட்டும் பருகி வாழ்ந்தான். இப்படி இப்படியே காலத்தை ஓட்டினான்.

*         *         *

சித்திரபானு வருடம் தை முதலாந்திகதி ஒரு மணிக்கு ஜே.பி.சாவின் 'என்வீட்டு வரை படத்தை' பெரிய எழுத்துக்காரன் ஒருவனிடம் வாசிக்குமாறு கொடுத்திருக்கிறான் அரிச்சந்திரன். மறுநாளே பெரிய எழுத்துக்காரன் அவனிடம் திருப்பிக் கொடுத்து, வேலையில்லை என்று இருக்கிறான். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்திருக்கிறது. வரைபடம் சம்பந்தமான விடயத்தை ஜே.பி.சாவின் தலைப்பு இருந்ததால் அவனுக்குப் பிடிக்குமென நம்பினான். இவனுகள் நினைப்பது போல இல்லை ஜே.பியின் எழுத்து. மொழியை சோதித்துக் கொண்டிருக்கும் புதுவகை எழுத்து. எழுத்துக்களில் காணக்கிடைக்காத நேசத்தை, தன்னெழுச்சியை, நுட்பத்தை முன்வைக்கும் எழுத்து, சமூகத்தின் ஆதிக்க மதிப்பீடுகளால் தமது கௌரவத்தைப் பறிகொடுத்த மனிதர்கள் ஜே.பி.சாவின் எழுத்துக்களின் ஊடாக ஊடுபாய்கிறார்கள். இதைப்போய் வேலை இல்லை என எண்ணுறானுகளே?

1. பிளாக் டிக்கெட் கதையில் வரும் மலரின் பாத்திரம். சண்முகத்தின் சரடு அவிழ்க்கும் புனைவு. அலிபாபாவும் சகாக்களும், பாரியும், வசந்தியும் எனக்கதைப்பின்னல் வாழ்வின் நிதர்சனங்களைக் கொட்டுகின்ற அற்புதமான படைப்பு இப்படியொரு கதை எழுத முடியுமா? அதேபோல்

என் வீட்டின் வரைபடம், ஊருக்குச் செல்லும் வழி, மிகுமழை, தனிமையின் புகைப்படம், உருவங்களின் ரகசியம், ரிஷப வீதி, புவியீர்ப்புவிசை - (இந்தக்கதை கூடப்பிடிக்கும் என நினைத்தேன். ஏனென்றால் நியூட்டனுடன் தொடர்புபட்டதால் அதுவும் அவனுக்குப் பிடிக்க வில்லையாம்) ஆட்டத்தின் விதி முறைகள், உடைந்த புல்லாங்குழல் இவையும் பிடிக்காத பாத்திரங்கள்தான் அவனுக்கு.

எழுத்து என்றால் என்ன? அவன் யோசிக்கத் தொடங்கினான். கோடுகளும், வளைவுகளும், வரைபடங்களும், சமன்பாடுகளும், சற்சதுரங்களும், நிறங்களும் மட்டுமா எழுத்து? அவனுக்குப் புரியவில்லை. ஏதோ புரியாமல் எழுத வேண்டும். அது மட்டும்தான் உண்மையெனப் பட்டது. ஆனா பெரிய எழுத்தான் ஆங்கில எழுத்துக்களை விரும்பிப்படிப்பதாகச் சொன்னான். ஃப்ரான்ஸ் காஃப்காவின் எழுத்து மிகப்பிடிக்கும் என்றான். இறுதியாகப் படித்த ஒரு பட்டினிக் கலைஞன் 'சுப்பர்' கதை என்றால் 'பட்டினிக் கலைஞன் பட்டினி கிடத்தலை ஆத்மார்த்த சாதனையாக நம்புகிறான். அதே நேரம் மக்கள் அதனை ரசித்துப் பாராட்ட வேண்டும் என்றும் விரும்புகிறான். இறுதியில் இரண்டு மற்றுப்போய் இறப்பு நேரிடுகிறது. முதலில் பட்டினி இருப்பது சாதனையல்ல, அது அவன் விரும்பிய உணவு கிடைக்காததால் அவன் செய்து கொண்ட தெரிவு. தெரிவு மேற்கொண்டபின் அதனைச் சாதனையாக்க வேண்டும் என்று முயல்கிறான். அந்தச் சாதனை சில நாட்களே எடுபட்டது. பின்னர் சாதாரண விடயமாகப் புறக்கணிக்கப்படுகிறது."

இப்படி எழுத்து ஊடுபாய வேண்டும் என்றான். எழுத்து பெரும் இமையமாக இருக்க வேண்டும். இருட்டுக்களை அகற்றி வெளிச்சத்தைத் தர வேண்டும். பூனைகள் பிரமிக்க வேண்டும். மனிதர்கள் நிலத்தில் படாமல் நடக்க வேண்டும். நிகழ்வுகள் 'ஜில்' என விரிந்து விரிந்து போக வேண்டும். தமிழ் எழுத்தில் பெரிய எழுத்துக்கள் இல்லை யென்றான்.

அரிச்சந்திரனுக்குத் தெரியும் "பிளாக் டிக்கெட்" கா∴ப்காவின் ஒரு பட்டினிக் கலைஞனைவிட உச்சமென்று இவனுக்கு எங்கு இது புரியப்போகுது?

அரிச்சந்திரனுக்குப் பெரிய எழுத்துக் கூட்டங்கள் பற்றி வெறுப்பு அதிகரித்துக் கொண்டே போனது. அவனுகள் காற்தடங்கள் அற்று நடந்து போனார்கள். "என்ன எழுத்து எழுதுறானுகள்" முகத்தைச் சுருக்கிப் பெரிய எழுத்தாளனுகள் ஏதோ ஏதோ தங்களுக்குள் குசுகுசுத்தானுகள். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை.

பெரிய எழுத்தாளனுகளிடமும் தரம் 1, தரம் 2,3,4,5,6,7,8.... எனக்குறிப்புக்களும் இருப்புக்களும் இருந்தன. தரம் 1, தரம் 2,3,4,5 ஐயும் மெச்சிப்பேசுவான். தரம் 5, தரம் 6,7,8.... மெச்சுவான். இன்னும் சில ஆய்வாளர்கள் என்பவர்கள் இவனுகளை மெச்சிமெச்சியே காலம் ஓட்டினர்.

திடீரென ஒருநாள் பழைய எழுத்து அவனைச் சந்தித்து ஒப்பாரி வைக்கத் தொடங்கியது. பெரிய எழுத்துக்கள் தங்களை விழுங்குவதாகவும், பழுத்துவிட்டது, பழுதாகிவிட்டது என 'ஹின்ட்' அடிப்பதாகவும், கூட்டம்வைத்துக் கேலி செய்வதாகவும் பழைய எழுத்து முறையிட்ட போது உச்சி நிலா சரிந்து எரிந்து கொண்டிருந்தது. அவனால் ஏதும் செய்யமுடியவில்லை. பழைய எழுத்துப் பற்றி அவனுக்கு நிறையக் கேள்விகள் உள்ளன. கி.மு. வடிவம் கொண்ட எழுத்துக்களை வைத்துக் கொண்டு உருட்டி உருட்டிக் காலம் தள்ளுவது அரிச்சந்திரனுக்குக் கசப்புத் தான். அவன் ஏதும் பேசவில்லை.

அவன் உடலில் ஊர்ந்து திரிகின்ற நசநசப்புக்களை அகற்றுவதற்கு அவன் உருண்டு திரிந்தான். பழைய எழுத்துக்களையும் தட்டித் தட்டித் தாள்களை ஓட்டினான். அவனை ஒத்த எழுத்துக்களையே முளையிட்டுக் கொண்டிருந்தான். இக்காலத்திலேயே அவனுக்குத் திருமணமாகியது. அவள் பற்றி அவனுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவள் எந்த

எழுத்தாள்? அல்லது எந்த எழுத்துச் சுவையாளி? அல்லது எந்த நிலையாள் ஒன்றுமே தெரியாது. அவன் ஒரு மாதமாக ஒன்றுமே செய்யவில்லை. எழுத்துப் பற்றி அவன் சிந்தித்ததில்லை. எழுதியதில்லை. பேசியதில்லை.

01.01.01 அன்று 01.01 க்கு எழுதத் தொடங்கினான். அவள் ஒருக்கெழிந்து படுத்தாள். அவன் எழுதிக்கொண்டே போனான். 'என்னப்பா செய்யிறீங்க' என்றாள். அவன் ஏதும் பேசவில்லை. மங்கிய வெளிச்சத்தில் பார்த்தாள். வெள்ளைத்தாளில் கறுத்த உருவங்கள் முளைத்துக் கொண்டு போயின. அது அவளுக்கு கரப்பானாய், நட்டுவக்காலியாய், தேளாய் வளர்ந்து போவதாகத் தெரிய, பயந்து வீறிட்டாள். அவன் திடுக்கிட்டு எழுந்தான்.

'என்ன? என்ன?' என்றான்.

பேப்பரில் கையைக் காட்டி ஏதோ சொன்னாள். அவனுக்கு மண்டை விறைத்தது. அவன் எழுதியதை நிறுத்திவிட்டான்.

ஒருநாள் வேலை அசதியால் 'காப்டே'' எடுத்து வீடுபோனான். அவள் சிறிய எழுத்துக்களை வாசித்துக் கொண்டிருந்தாள். அவனுக்குச் சற்று நிம்மதி. 'என்ன' என்று கேட்டான். அவள் 'வோர்' அடிக்குது, அதுதான் இதை வாசிக்கிறன் என்றாள். 'தாரும்' எனப் பார்த்தான். அது மிகச் சின்ன எழுத்து அவனுக்கு வாந்தி வந்தது. அடக்கிக் கொண்டான்.

'இப்பிடியான எழுத்துச் சுவைப்பாயா?' என வினாவினான். 'இல்ல. இதவிடச்சற்றுப் பெரிய எழுத்துக்களையும் படிப்பன்' என்றாள்.

சந்திரமதி இரு நாட்களாய் ஏதும் அவனுடன் பேசவில்லை. சிறிய எழுத்தையும் சற்றுப் பெரிய எழுத்தையும் வாசித்துக் கொண்டிருந்தாள்.

சந்திரமதியை அவன் தொந்தரவு செய்யவில்லை. தலையணையை இறுகக் கட்டிப்பிடித்து இரவுகளைக் கழித்தான். இடைக்கிடை எழுந்து பார்த்தான். அவள் எழுத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். காலையில் எழுந்து பார்த்தான் தாள்கள் ஒற்றை ஒற்றையாய்க் கழன்று

இருந்தன. சில எழுத்துக்கள் உதிர்ந்து இருந்தன. அவள் கீர் கீரென ஓசை எழுப்பி தூங்கிக் கிடந்தாள். மின் விசிறியை நிறுத்தி கதவைத் திறந்தபோது, ஒளி அறைக்குள் பாய்ந்தது. சந்திரமதி திடுக்கிட்டு எழுந்து தாள்களைப் புறக்கினாள். எழுத்துக்களை ஒட்டினாள். மீண்டும் வாசிக்கத் தொடங்கினாள்.

துன்பப்பட்டானின் நூல் வெளியீட்டு விழாவிற்கு சந்திரமதியும் சென்றிருந்தாள். அவனை புளுகு புளுகென "மைக்"கை ஒருவர் சூப்பிச் சூப்பி பேசிக் கொண்டிருந்தார். அவளுக்கு சகிக்கவில்லை. "யார்இத வாசிக்கப்பபோறா! அதுக்குள்ள பெரிய புளுகு வேற" அவள் இப்படித்தான் எழுத்துக்களை நினைத்தாள். புளுகுவதும் தூக்கிவைப்பதும் தானா? எனச் சிந்தித்தாள். சிரித்தாள். பின் சந்திரமதி தன் கணவனுக்கும் நூல் ஒன்று வெளியிட வேண்டுமென மனதிற்குள் அடித்தளம் போட்டாள். பிறகு என்ன நினைத்தாளோ மனதிற்குள் மாற்றுத் திட்டம் புதைத்தாள். அவள் வயதில் ஒத்த யாரும் அங்கு வரவில்லை. அவள் மட்டும் வந்திருப்பது அவளுக்கு ஒரு மாதிரியாய் இருந்தது. எழும்பி நடந்தாள். அரிச்சந்திரன் பின்னுக்கு ஓடினான்.

'இரு இரு முடிஞ்சுபோவம்' என்றான்.
"நீ இரு நான் போறன்" என்று நடந்தாள்.

அவனுக்கு அவளுடைய நடத்தை பிடிக்கவில்லை. என்ன செய்வான் அவன்?

* * *

அவன் சற்று உசார் ஏற்றியிருந்தான். எல்லாமே இரண்டாகத் தெரிந்தன. அரிச்சந்திரன் கேற்றைத்தள்ளி மேடையில் கால் வைத்தான். யாரோ தள்ளுவது போல் இருந்தது. சற்று உசாராகி முன் விறாந்தைக்கு வந்தான். அவள் சிறியதும், பெரியதுமான எழுத்துக்களை வாசித்துக் கொண்டிருந்தாள். புத்தக அறைக்குள் சென்றவன் ஜே.பி.சா.வின் கனவுப் புத்தகத்தை எடுத்து வந்து சந்திரமதியிடம் கொடுத்தான். அவள் எனக்கு வாசிப்பதற்கு நிறைய இருக்கிறது என்றாள்.

'இல்ல இத வாசித்துப்பாரன்' என்றான்.
அவள் அதை வாசிக்கத் தொடங்கினாள்.

ஒரு மூன்று மணித்தியாலம் எடுத்திருப்பாள். எழுத்துக்கள் அங்கும் இங்கும் தொங்கியிருந்தன. தெளிவு பெற்றவளாய் கனவுப் புத்தகத்துடன் கடப்பில் நின்றாள். அவன் தனித்தே வெளியில் சென்று வந்திருந்தான். கொஞ்சம் மிதப்பாய் இருந்தான். கண்கள் சற்று சிவந்திருந்தன. முன்னர் ஏற்றிருந்த உசார் தணிந்து இப்போ நிதானம் கூடியிருந்தது. அவளை அவன் அண்மித்ததும்,
'என்ன புத்தகம் என்றாள்? ஆண்களின் படித்துறை' என்ன கதயோ? செக்ஸ் வரிகளோ. இதயாரு வாசிக்கிற. இதெல்லாம் எழுத்தா? எனப்பாய்ந்தாள்.

என்னடியம்மா அதில என்ன தப்பா எழுதியிருக்கு என்றான்.

"விசறா உனக்கு, பொம்புள்ளயளப்பற்றி ஜே.பி.சா. என்ன நினச்சிருக்கான்?... செருப்பால அடிப்பன் அவனுக்கு" ஏன்றாள்.

அவனுக்கு அதற்கு மேல கதைக்க முடியவில்லை.

ஆனா அவன் அதைப்பற்றிப் பெரிதாக யோசித்ததேயில்லை. அவன் தன்னையே நொந்து கொண்டான். இப்படியான நேரங்களில் பண்டிதர் கணபதிப்பிள்ளை மிக முக்கியமானவர். இப்படிப்பிரச்சினைப்பட்ட ஒருநாள் எழுத்தின் தோற்றுவாய் பற்றி அவனைக் குழப்பிவிட்டார். வரிவடிவில் இருந்து இன்று இந்த நிலைக்கு வந்தும், இன்னும் எழுத்து ஒழுங்கா வரவில்லையென பண்டிதர் கணபதிப்பிள்ளையின் கருத்தில் உடன்படாவிட்டாலும் உண்மையும் இல்லாமலில்லை என்பது அவனுக்குத் தெரிந்தது.

அன்று பண்டிதர் கணபதிப்பிள்ளை கோணங்கியின் பாழியைக் கொடுத்து நல்ல எழுத்து வாசி என்றார். புத்தகத்தை வாசிக்க வாசிக்க இரவுகள்

மறைவதே தெரியவில்லை. நித்திரை கண்ணுக்குள் அற்று நீண்டநாளாய் போயிற்று. சந்திரமதி கோபம் கொண்டு ஏசத்தொடங்கினாள். பாழியைத் தூக்கி வீசினாள். அடுத்த நாள் பெரிய எழுத்துக்காரனிடம் பாழியைக் கொடுத்தான். இரு திங்களாய் சாம்பிராணிப்புகை விடுவதாக அறிந்தான். பிறகு ஒரு நாள் எதிர்த்திசை வாசல் கடை அருகில் அவனுகளைக் கண்டபோது அவனுகள் யாருக்கும் விளங்கவில்லையாம், புரியவில்லையாம்... திகைத்து நின்றானுகள். கோணங்கி கோணங்கித் தனமாக எழுதியிருக்கிறான். என்றானுகள். 'என் வீட்டின் வரைபடம் பிடிக்காத பெரிய எழுத்தான், இதைவிட வெயிலைக் கொண்டு வாருங்கள்' சூப்பர் என்றான். அவன் ஆரம்பத்தில் கேட்டான். அதில் அப்படி என்ன இருக்கு? பெரிய எழுத்தான் சற்று நேரம் ஏதும் பேசவில்லை. பின், அது ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஓடுகிறது என்றான். அரிச்சந்திரன் அவனை உற்றுப்பார்த்த போது, அவன் குனிந்து கொண்டான்.

'பாழியில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஓடவில்லையா?" மீண்டும் கேட்டான்.

"அது... அது" திக்குமுக்காடினான். "என்ன? சொல்" என்றான்.

'அதில் ஒரு தர்க்கம் விழுந்தது போதாது" என்றான்.

'தர்க்கம் என்றால் என்ன?' என்றான்.
அவனால் மேலதிகமாகப் பேசமுடியவில்லை. இப்படித்தான் தமிழவன்ட 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' பலருக்குக் கேலியானது. இளம் தலைமுறை என்பவர்களுக்கு சந்திப் பேசு பொருளானது. விளங்காவிட்டால் 'ஹிண்ட்' பொருள். பின் நவீனத்துவம் என்பார்கள். ஆனால் இப்படியான எழுத்தை என்னப்பா எழுதியிருக்காணுகள். நீங்களும் "சும்மா வாய்க்கு வந்தமாதிரி உளறாதீங்க, உங்களுக்குள் ஒரு ஒளிவட்டத்தை வளர்த்து கதைக்காதிங்க. முதலில, நல்லா வாசிங்க. அதுக்குப் புறகு மிச்சத்தைச் செய்யுங்க. அதவிட்டு......"

அவன் நடந்து போனான்.

பெரிய எழுத்தானுகள் அவனை வச்சகண் வாங்காது பார்த்து நின்று புறுபுறுத்தானுகள். 'இவரெல்லாம் எப்ப வெளிக்கிட்டவர்? போடா... நீயும்....?

அரிச்சந்திரன் ஏப்ரல் 2006 உயிர்மையைத் தட்டிக்கொண்டிருந்த போது பக்கம் 22யில் ஜே.பி.சா. வின் முத்தத்தைப் போல எங்கள் மரணத்தைக் கண்டான். சிலகால இடைவெளியில் ஜே.பி.சாவின் படைப்பைக் கண்டதும் உள்ளூர கொப்பளித்தது. இன்றைக்கு ஒரே மூச்சில் படித்து முடிக்க வேண்டுமென்று வாசிக்கத் தொடங்கினான். அவனுக்குத் தொடக்கமே மிக அலுப்பாய் இருந்தது. மூன்றிற்குப் பிறகு கதை ஓட்டம் சற்று சூடு பிடித்தது. கனவுப் புத்தகத்தைப் போல, பின் பழைய வளவளாதான். ஜே.பி.சா வின் என் வீட்டு வரைபடமும், கனவுப்புத்தகக் கதைகளும் தந்த ஒளியை, விறுவிறுப்பை, அகப் பாய்ச்சலை இந்தக்கதை தரவில்லை. அரிச்சந்திரனுக்கு காதல் மீது நம்பிக்கையில்லை. பற்றில்லை, வெறுப்பு...வெறுப்பு இது அவனுக்கு பிடிக்காமல் போயிருக்கலாம். எப்படியும் இதில் காதலும், கனவும், அதிஉவமானமும், விபரணமும், தேவையில்லாத கதை நீடிப்பும் அவனுக்கு முதல் வாசிப்பில் ... ஊன்றிப் போக முடியவில்லை.

ஜே.பி.சா. நீண்டு நீண்டு கனவுப் புத்தகத்தினுள் இருந்து காணாமல் போய்க்கொண்டிருந்தான். ஆனால், அவன் காணாமல் போகும் பட்டியலைச் சேர்தவனில்லை. அவன் பீனிக்ஸ் பறவை. மீண்டும் உயிர்ப்பான். இப்போ எழுந்து எங்கும் ஓடிக்கொண்டிருந்தது அவனுள்.

**- 2006 -**



# பரிநிர்வாணம்

அ.ச. பாய்வா

மனதின் திக்பிரமைகளும், அதன்வழியே என்னுள் வியாபித்திருக்கும் உள்ளுணர்வுகளும், விடுபட முடியாத ஒருவித விசித்திரக் கட்டுக்குள் என்னை இறுக்கிப் போட்டிருப்பது மட்டும் புரிகிறது. இனம் என்கிற கோதாவில் நித்தியத்துக்கும் நான் பந்தாடப்பட வேண்டிய ஒரு பொருளென்பது மட்டும் சர்வ நிச்சயம்.

இந்நாட்டின் ஈனப்பிரஜையென்கிற முத்திரைகளோடும், வாழ்வியலின் வெறுமைகளோடும், நான் இதுவரை பெற்ற போதமும், ஞானமும், இன்னும் நான் கற்கவேண்டியவைகளின் பட்டியலாய் எனக்குமுன் நீண்டு கிடக்க, பரிநிர்வாணந்தான் எனக்கெப்போது?

அநுராதபுரத்துக்குப் போய்த்தீரவேண்டிய மிக அவசரமான காரியம், பிரயாணம் செய்ய வேண்டிய நாளும், எந்த வழியால் போக வேண்டுமென்பதெல்லாம் தீர்மானமானபிறகு, எனக்குத் தெரிந்த சிங்களத்தை வைத்துக்கொண்டு ஓரிருநாள் தனிமையில் ஒத்திகை பார்க்கிறேன். வேறொன்றுக்காவு மல்ல, நானொரு தமிழனென்பதைக் காட்டிக்கொள்ளக் கூடாதென்பதற்குத்தான்.

பிரயாணத்துக்கு முந்தின இரவு எனக்கு வீட்டில் நிகழ்த்தப்பட்ட கீதோபதேசமும் இதுதான்.

தமிழில் எழுதப்பட்டிருந்த எனது தேசிய அடையாள அட்டை பிடுங்கப்பட்டு, சிங்களத்திலிருந்த தொழில் அடையாள அட்டை எனக்கு வழங்கப்படுகிறது. எனது பிரயாணப்பை முற்றுமுழுதான சோதனைக்குள்ளாக்கப்பட்டு, பிரயாண அலுப்பைப்போக்க வாசிப்பதற்கென நான் வைத்திருந்த தமிழ் சஞ்சிகையும் பிடுங்கப்பட்டுவிட, எல்லோர் பார்வையிலும் நானிப்போது ஓர் ஆபத்தில்லாத மனிதன்.

இந்த லட்சணங்களுடன் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுப் பொலனறுவையில் வந்திறங்கி அனுராதபுரம் பஸ்வண்டியை இனங்கண்டு ஏறிக்கொள்கிறேன். 'குமாரோதய' வில் நான் கற்ற சிங்கள எழுத்துக்கள் எனக்குதவியதில் மட்டற்ற மகிழ்ச்சி. வாழ்க 'குமாரோதய'.

சாரதிக்குப் பின்னாலிருந்த இருக்கை வெறுமையாயிருக்கிறது. இருக்கைக்குமேல், வீட்டில் நடந்த ஒத்திகைக்குஏற்றவாறு 'குருமாருக்கு', 'கர்ப்பிணிகளுக்கு' என்று ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதாவெனப் பார்க்கிறேன். அப்படியொரு எழுத்து இருந்ததற்கான அடையாளமே அங்கில்லை. வருவது வரட்டுமென்று அதில் அமர்ந்து கொள்கிறேன். அவ்வளவு வசதியான பேரூந்தாய் அது தெரியவில்லை.

அவசியமின்றி ஒரு வார்த்தைதானும் பேசுவதில்லையென்றிருந்த எனக்கோ பொறுமை எல்லை மீறுகிறது. 'எத்தனை மணிக்கு வண்டி புறப்படும்' என்று சிங்களத்தில் எனக்குள் பலமுறை, பலவாறும் சொல்லிப்பார்க்கிறேன். தோல்விதான் மிஞ்சுகிறது. காரணம், அங்கு பிரயாணிகள் நிகழ்த்திய உரையாடல்களின் மொழிப் பிரவாகம்தான்.

"நீங்க அம்பாறைப் பக்கமெண்டு நினைக்கிறன்."
"எப்பிடிக் கண்டு பிடிச்சிங்க........"
"உச்சரிப்பிலிருந்துதான். அம்பாற, திஸ்ஸமகராம பக்கத்தாக்கள்தான் வசனத்த இளுத்திளுத்து முடிக்கிறவங்க. நானங்க வேலசெய்தனான்"

எனக்குப் பின்னாலிருந்த இருவரின் உரையாடலுக்குப் பிறகும், நான் சிங்களத்தில் உரையாடுவதன் பொருத்தமின்மையைப் புரிந்து கொள்ள இதைவிட வேறென்ன வேண்டும். ஆனாலும், நான் நினைத்ததைவிட சிறிது முன்னதாகவே வண்டிபுறப்படுகிறது.

மௌனமும் ஒருவகைத் தோல்வியின் அடையாளந்தான். இந்த வகையான சுதந்திரமற்ற சூழலும், கேள்விக்குறியான வாழ்வியலும், என் ஆன்மாவை ஊடறுத்துச் செல்லும் ஈரரிவாளுக்கு ஒப்பானதாகப் படுகின்றன எனக்கு.

வண்டி, நகர எல்லையைக் கடக்கும் வேளை நிறைந்து விட்டிருந்தது. அங்கு தொங்கிக் கொண்டு நின்ற வயதான பிக்குவைக்கூட யாரும் கவனித்ததாய்த் தெரியவில்லை. நான் கண்களை மூடியவனாய்ப் பொய் நித்திரைத் தியானத்திலிருக்கிறேன்.

திடீரென என் மடியில் ஏதோ விழுவது போலிருக்கிறது. கண்களைத் திறந்தால் மூன்று சிறிய சிங்களப் புத்தகங்கள், பார்வைக்கு அவை பாடப்புத்தகங்கள்போல் தெரிந்தன. என் மடியில் புத்தகத்தைப் போட்டவனுக்கு பத்து அல்லது பன்னிரண்டு வயதிருக்கும். தனது கையிலிருந்த புத்தகங்களைப் பிரயாணிகளிடம் திணித்துவிட்டு, பிரயாணிகளை நேருக்குநேர் பார்க்கக்கூடியவாறு நின்று கொண்டு சிங்களத்தில் முழங்கிக் கொண்டிருக்கிறான். "ஐயாமாரே அம்மாமாரே, நானொரு ஏழை, எனக்கு மூன்று சகோதரிகள், தந்தையார் படுக்கையாய் கிடக்கும் ஓர் நோயாளி. அம்மா மிகவும் கஷ்ரப்பட்டுத்தான் எங்களை வளர்க்கிறாள். இந்தப் புத்தகங்களை வாங்கி எங்கள் கல்விக்கு உதவுங்கள்" இதுதான் அவன் யாசகத்தின் சாராம்சம்.

அவனது தோற்றமும், அவன் யாசித்த விதமும் எனக்குப் புதியதாக விருந்தாலும் உள்ளத்தைத் தொட்டது. இனம், மொழியென்கின்ற பிடிவாதங்களெல்லாம் என்னை விட்டகல, அவனுக்கு உதவ வேண்டுமெனத் தீர்மானித்துக்கொள்கிறேன். இருபது ரூபாய்த்தாளொன்றை எனது கைக்குமாறுகின்றது.

அவன் தனது யாசகத்தை முடித்துப் பிரயாணிகளிடம் சென்றபோது, அவனது புத்தகங்களையவர்கள் திருப்பியவனிடம் கொடுத்தார்களே தவிர, எவருமே அவனுக்குப் பணங்கொடுக்கவில்லை. இதுவும் வழமையானதொரு பிரயாணத்தொல்லையென்று வாழாவிருந்தார்களோ என்னவோ.

எனது முறைவந்த போது, அந்த இருபது ரூபாவை அவனுக்குக் கொடுக்கின்றேன். 'இல்ல மாத்தையா. ஒரு புத்தகம் இருபது ரூபாய் மூன்றுக்கும் அறுபது ரூபாய்'. என்கிறான். திரிசங்கு சொர்க்க நிலையில் நான். எனக்கோ அந்தப் புத்தகங்கள் தேவையற்றவை. எதற்கும் பாதுகாப்புக்காகவாவது இருக்கட்டுமென்று ஒன்றை விரல்காட்டி 'அத்தி' யென்று ஒரு புத்தகத்தை மாத்திரம் எடுக்கிறேன்.

மிகச்சரியான சிங்கள வார்த்தையொன்றையுதிர்த்த சந்தோஷமெனக்கு. அவன் முகமோ வாடியிருந்தது.

வண்டி ஐயந்திரபுரவை எட்டுவதற்கு முன் அவன் இறங்கிக் கொள்கிறான். வண்டி ஒரு சோம்பேறியைப் போல் ஊர்ந்து கொண்டிருக்கிறது. யன்னலுக்கு வெளியே பார்வையை வீசுகிறேன். எவ்வித மாற்றங்களுமற்ற அதே சிங்களக் கிராமங்கள்.

சிறிய சிறிய ஓலை ஓச்சாய்ப்புக்களின் கீழ் சாய்வான வரிச்சுத்தட்டுக் களின்மேல், மேலிருந்து கீழாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மெலன், கத்தரி, கெக்கரி, பூசணியென ஒரே வகையான மரக்கறி வகைகள். அவைகளை விற்பனை செய்ய, சீத்தைக் கவுணும், அரைவாசி மார்பு தெரியத்தக்கதான சட்டைகளுடன் சிங்களத்திகள், வயல்வெளிகள், பொட்டல் வெளிகளென மனதுக்கு ரம்மியமாகத்தானிருந்தது.

இருந்தும், ஏதாவதொரு பாடலைப் கேட்டால் கவனத்தை ஒருமுகப்படுத்தலாம் போலிருக்கிறது. ஆனால் அந்த வண்டியோ, அதனையெல்லாம் கடந்தவோர் இத்துப்போன பண்டமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

வண்டி மின்னேரியாவை அடைந்ததும், ஒருவனத்தில் ஏறிக்கொள்கிறான். மிகவும் பழக்கப்பட்டவன் போல், அதுவும் வண்டியின் முன்பக்கத்தால் அவனேறியவிதமிருக்கிறதே அருமை. ஆறடி உயரமிருக்கும். சிங்கள நடிகன்போல் தலையைப் பின்நோக்கி 'பம்ப்' வைத்து வாரியிருந்த அவனது சுருள்கேசம் அவனுக்கு எடுப்பாயிருந்தது. தோளில் இடம் வலமாகத் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பையைத் தவிர அவனிடம் வேறொன்றுமில்லை. வண்டியின் பின்நோக்கிப் படிப்படியாய்ச் சென்ற அவனை அதன்பிறகு நான் காணவில்லை. எனது எண்ணமெல்லாம், ஒரு பாட்டுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது. வண்டி மின்னேரியாவை விட்டுப் புறப்பட்ட பின்னரும் அதற்குள் நிலவிய மகாமசான அமைதி, என்னை மட்டுமல்ல, இன்னும் பலரையும் கொன்றிருக்கும். மீண்டும் கண்களை மூடியிருந்த என்னை, 'பறக் பறக்....' என்கிற சப்தம் தட்டியெழுப்புகிறது. 'ட்றம் பேட்' (Drum pad) டிலிருந்தெழும் ஒலிபோலதானது எனக்குப் படுகிறது. சாரதியின் பக்கமிருந்து ஏதாவது ஒலிபரப் பாகிறதாவெனப் பார்க்கிறேன். என்றோ ஒரு வானொலியிருந்த தற்கான பெட்டியொன்று மட்டும் தெரிகிறது.

மீண்டும் அதே 'பறக் பறக்....' சப்தம். மெல்லத் திரும்பிக் பார்க்கிறேன். அதே வாலிபன் கையில் ஓர் 'பிளாஸ்ரிக் றவ்வாணத்துடன்'. சிறு சாவியால் அதனைச் சுருதி கூட்டிக் கொண்டிருக்கிறான். எனது சங்கீத அறிவுக்கெட்டியபடி அந்த றவ்வாணம் சுமார் ஐந்து அல்லது ஐந்தரை கட்டைக்கு சுருதி சேர்க்கப்பட்டிருந்தது.

றவ்வாணத்தின் விளிம்பில் தட்டுகிறான். 'ணங்' என்ற ஒலி, நடுவில் தட்டுகிறான். கிட்டத்தட்ட அதே ஒலி. தனது பைக்குள்ளிருந்து பசை போன்ற ஒரு 'ஸ்ரிக்கரைப்' பிரித்து ஒட்டித் தட்டிப் பார்க்கிறான். 'தொம்' என்கிற நாதம். மீண்டும் றவ்வாணத்தின் விளிம்பிலும் நடுவிலும் தட்டி 'ணங்', 'தொம்' என்கிற இசை வகுதிகளைச் சரிபார்த்துத் திருப்தியடைந்தவனாய், சிறியதொரு அலங்கரிப்புச் செய்கிறான். றவ்வாணத்தின் வட்டமான சட்டத்தின் இடையிடையேயிருந்த சல்லாரியும் அந்த அலங்கரிப்பில் கலந்தாலும், அவனொரு கேள்விஞான முற்றவனே என்பதைப் பிசகிய அவனது அலங்கரிப்புகள் காட்டிக் கொடுத்தன.

"ஆயுபோவன் சியலுதெனாம (அனைவருக்கும் வணக்கம்) அனுராதபுர கடவுளின் கருணையால் உங்கள் பயணம் நல்லதாக அமையட்டும்" என்று சொல்லிவிட்டு, 'ஒபே ராஜீவன கெலம் பேதோ...' என்ற அங்குலிமாலாப் படப்பாடலை, மொஹிதீன் பெய்க்கின் அதே குரலில் ஆலாபனம் செய்கிறான். எனக்கோ புல்லரிக்கிறது. உச்சஸ்தாயியில் அவன் பாட்டை முடிக்கும் போது கழுத்து நரம்புகள் விம்மிப் புடைத்தெழுந்து, பிசிறற்ற அவனது தொனி காற்றில் நிறைந்து பரவுகின்றது.

வண்டியில் நிலவியிருந்த வெம்மையும் வெறுமையும், சென்ற இடம் தெரியாமல், இனம் புரியாதொரு இன்பமென்னைத் தழுவுகிறது. இடையிடையே சில பாடல்களில் தேவையான அளவு வெளிப்பட்ட அவனது "பிர்காக்கள்" அவனது குரல்வளத்தைத் துலாம்பரமாய் எடுத்துக்காட்ட, வெறுமனேயொரு பஸ்வண்டிப் பாடகனாய் மின்னி மறையப் போகும் இவனது எதிர்காலத்தை நினைக்கப் பரிதாபமாகவும் இருந்தது.

இவனுக்கொரு நல்ல தொகையைக் கொடுக்க வேண்டுமென்கிற கற்பனையில் மிதந்து கொண்டிருக்க, திடீரென அவனது பாடல்கள் தடம் புரண்டு, அபஸ்வரமாய் ஒலித்து என்காதுகளில் நாராசமாய்ப் பாய்கின்றது.

இது ஒரு பௌத்த சிங்களநாடு என்றும், தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும், நாட்டைக்காக்கப் புறப்படுங்கள். என்று இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தவாறும் இனவாதத்தின் இன்னொரு குரலாயிருந்தானவன்.

வண்டி ஹபரனையை நெருங்க, றவ்வாணம் ரூபாய்களால் நிரம்புகின்றது. எனக்கும் அவனுக்குமிடையில் இதுவரை நிலவிய இறுக்கம் கலைய, ஒட்டவே முடியாத இருவகைத் திண்மங்களாய் நாங்களிருவரும், இதுவரை என்காதுகளை வருடிச் சென்ற அவனது பாடல்களை நிராகரித்து என்மனம், கோடையின் வெப்பத்தில் தகிக்கிறது.

எனது பக்கமும் றவ்வாணத்தை நீட்டுகிறான். 'ஒன்றுமில்லை' என்பதாய் கைச்சைகையால் வெடுக்கெனப் பதிலுரைக்கிறேன்.

ஹபரணையில் தேனீருக்காக வண்டி தரிக்க அவனுமிறங்குகிறான். தேனீர்ச் சாலையில், வேண்டுமென்றே அவனுக்கெதிரில் அமர்ந்து இரண்டு தேனீருக்கு உத்தரவிடுகிறேன். வந்த தேனீரில் ஒன்றை அவன்பக்கம் நகர்த்துகிறேன். அவனோ அன்றைய வசூலை எண்ணும் பணியில்,

'உமக்குத்தான் தேனீர்' என்கிறேன். 'நன்றி' என்கிறான். உரையாடல் எல்லாமே சிங்களத்தில் தான். அவன் பணத்தையெண்ணிப் பார்த்துவிட்டுத் தேனீர்க்கோப்பையில் ஒரு மிடறு குடித்தபின் அவனிடம் கேட்கிறேன், 'அதுசரி மற்றவருக்கு உபதேசம் செய்யிறதவிட்டிற்று இராணுவதத்தில் நீரேன் போய்ச் சேரக்கூடாது' என்று,

தேனீர்க் கோப்பை எடுத்துக் பருகும் பாவனையில் வாயருகில் வைத்துக் கண்ணடித்து, "எல்லாம் பொய் மாத்தையா. நிக்கங்நே" என்றவாறு வயிற்றைத் தட்டிக் காட்டுகிறான்.

ஆனாலொன்று "அப்பாவைப் புலிசுட்டுப் போட்டுது. வயதான அம்மாவையும் தங்கச்சிகளையும் காப்பாத்திறத்துக்காகத்தான் என்ர படிப்பையும் விட்டுப்போட்டு இப்படிக் கிளம்பினனான்" என்று சொல்லாதவரை அவனை எனக்குப் பிடித்திருந்தது.

எழுந்து கொண்டவனாய் பையைத் தோளில் மாட்டி, 'தேனீருக்கு நன்றி. நீங்கதமில்தானே. அதாங் நமக்கு சல்லிதரல்ல போல' என்று சலாம் போட்டவாறு அடுத்த பஸ்வண்டியை எதிர்பார்த்து நடக்க, அவனென்கிற அந்தப்போதி மரத்தின் கீழ் பரிநிர்வாணத்துக்காகக் காத்திருக்கிறேன் நான்.

**- 2006 -**



# ஒரு நிலவுச் சிறையும் இரண்டு ஆயுட் கைதிகளும்

அ.ச. பாய்வா

நான் அழகாய்த்தான் இருப்பேன் என்று அடம்பிடிக்கும் அந்த வசந்தகுமரியின் பேரழகில் கட்டுண்டுகிடந்தது பூமி. முன்நிலவுத்திலகமிட்டு நிர்மலமானவானமோ சௌந்தர்யலாகிரியெனும் போதையூட்டி, உன்மத்தங்கொண்டு பூமியின் ஜீவராசிகளிலெல்லாம் மென்மையான தன் ஆக்கிரமிப்பைச் செலுத்திக் கொண்டிருந்தது.

அப்பழுக்கற்ற வானத்தின்கீழ் குடிசை முற்றத்தில் பரவியிருந்த வெண்மணல் மீது அவனுமவளும். பருவம் தன் பாலியல் விளையாட்டின் விளிம்பில் நிற்கும் அத்தனை உயிரினங்களையும் வீழ்த்தப்புரியும் சாகசங்களை உணராதவாறு வீழ்ந்து போனவர்களின் பட்டியலில் சேர்ந்தவர்தான் இருவரும்.

திருமணத்தின் புதுமணம் மாறாதவோர் சொர்க்கபுரிச் சூழ்நிலை. வாழ்வின் அர்த்தவியாபகம் புரியாத வெறும் பாலுணர்வு உந்தலில் தம்பதிகளான அவர்களிருவரும், இன்னமும் பதினாறைத் தாண்டாதவர்கள்.

தாம்பூலதாரியாய், புதிய தாம்பத்யகிறக்கத்தில் அவன் தனது சுய பிரதாபங்களை உளறிக்கொண்டிருந்த ஓர் பலவீனகணத்தைத் தேர்ந் தெடுத்து, "ஊர்ல இண்டெக்கிக் கோவலன் கூத்தாம்.... போவம.." என அவள் சொன்ன போது, அக்குரலிலிருந்த ஏக்கமும் தாபமும் அவனை என்னவோ செய்தது.

மாதவிலக்கிலும் தானில்லை என்கின்ற அவளின் சூசகமும், அவளோடு ஒரு நிலவுப்பொழுதில் தனது சைக்கிளில் செல்லப்போவதில் உண்டான உற்சாகமும் என எல்லாஞ் சேர்ந்தவனை உசுப்பிவிட்டாலும், அவனது சட்டைப் பையின் கனம் அந்தச் சுருதியை குறைத்தே விட்டது.

திருமணமான இந்தப் பத்து நாட்களும் அவனின்னமும் தொழிலுக்குச் செல்லவில்லை. சென்றமாதம் கருவாட்டுத் தொழிலுக்குச் சென்றுவந்த தெல்லாம் முடிவாகிக் கையறுநிலை. சட்டைப் பைக்குள்ளிருந்து பணத்தை எத்தனை தடவைதான் எண்ணுவது? சம்சாரியானதிலிருந்து, தனக்கிருக்கப்போகும் பாரிய குடும்பப் பொறுப்புக்களுக்குத் தன்னைத் தயார் செய்யப் போகுமொரு மூலதனமாகவே நம்பியதை வைத்திருந்தான்.

ஆனால், புது மனைவியின் முதல் கோரிக்கையை எவ்வாறு எதிர்கொள்வது? ஏற்றுக் கொள்ளவதா அல்லது நிராகரிப்பதா? இல்லை தான் சொல்லப் போகுமொரு பதிலில்தான் அவர்களின் தாம்பத்திய உறவின் நீடிப்பேயிருக்கப்போகிறா? அவனுக்கு எல்லாமே குழப்பமாயிருந்தது.

தனது கையறுநிலையைப் புரிந்து கொள்ளக் கூடியவளென்றால் கவலையில்லை. ஆனால் அதற்கு எதிர்மறையான குணவியல்புடையவ ளென்றால்... அவனால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

கிராமங்களில் கூத்தென்றால் சும்மாவா? களரியைச் சுற்றிக் கடைகளாயிருக்கும். என்ன வாங்குவது... எதை வாங்குவது!

தனது பதிலையே ஆவலுடன் எதிர்பார்த்து நிற்குமவளின் மனநிலையை ஒரு நுகட்பொழுதில் புரிந்து கொண்டவனாய், "வெளிக்கிடு..." என்று சொன்னது அவனா... இல்லை வேறொன்றா... அவனுக்கே தெரியாது. கன்னிகழியாத காட்டைப் போலிருந்தது அவள் முகம்.

நிமிர்ந்து பார்த்தான். நிர்மலமாயிருந்தது வானம். அவனிதயத்தின் ஒவ்வொரு அதிர்வுகளும் அவனுக்கே கேட்கும் படியான அமைதி.

கால் முளைத்த நிலவும் நடந்து கொண்டிருந்தது. வழியின் இரு மருங்கிலும் சடைத்து நிற்கும் மரங்கள், பனை வடலிகள், பொட்டல்வெளி, எனக் கடந்து அசமந்து கிடந்த அந்தப் பால் வீதியில் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்தது.

இடைக்கிடையே அவனது சைக்கிளில் இருந்து எழுந்த "மறக்... மறக்..." என்கிற சப்தம், அமானுஷ்யமான அந்தப் பரந்த வெளியில் அவளுக்குப் பயஉணர்வினை ஏற்படுத்த, கண்களை இறுக மூடியவாறு சைக்கிள் ஹன்டிலைப் (Handle) பற்றியிருந்த அவனது வலது கரத்தில் சாய்ந்து கொண்டாள்.

இடுகாட்டைப் பற்றிய அதீத கதைகளும், பஞ்சமிச்சாவு, பேயாயலைதல், நடுநிசியில் ஒலிக்கும் விநோத ஒலிகள் என அனைத்தும் அவன் நினைவில் வர, இடுகாட்டைத் தாண்டும் போது தான் அவனுமதைப் பார்த்தான். நெஞ்சில் "சுரீ" ரென்றது. அனைத்தும் நெக்குவிட்டுப் போனதைப் போன்றிருந்தது உடல். கால்களோ அவனையறியாமல் விரைவாக மிதித்தன பெடல்களை. சிறிது தூரம் சென்றவனுக்குள்ளும் இன்னுமொரு சந்தேகம். "இந்தக் காலத்திலும் பேயும் பிசாசும்" என அவன் சொன்னது அவளுக்குக் கேட்கவில்லை.

இடுகாட்டைத் தாண்டி இயல்பாகச் சென்று கொண்டிருந்தாலும், அவனது மனம் மட்டும் இங்கில்லை. முப்பத்து முக்கோடித் தேவர்களையும் சாட்சியாய் வைத்து நடந்தேறிய திரமணமல்ல அது. கிராமியமாய்,

சாதாரண பிள்ளையார் மடைமுன் "சோறு போட்டு" நடந்தேறிய அந்தப் பந்தமும், அந்தச் சடங்கினூடே இழையோடிய ஒருவித இன்பலா கிரியையும் மீறிய எச்சரிக்கையும் அவன் மனதினில் சோர்வினை ஏற்படுத்த, இருமனச்சுழற்றி என்பது வெறுமனே ஆலிங்கனம் மாத்திர மல்ல, அதனையும் மீறிய ஏதோவொன்று என்பது மட்டும் அவனுக்குப் புரியத் தொடங்கியது.

எங்கிருந்தோவந்து மேகமொன்று நிலவை மறைக்க, அப்பிராந்தியமே இருண்மையை போர்த்திக்கொண்டது, அவனது மனதைப் போல்.

"சிங்களவன்ர வாடி வந்திற்று... இனிமே கண்ணத் தொற" மூச்சிரைத்தவாறு அவன் சொல்லவும், அவனது கையில் சாய்ந்திருந்த அவள் தன்னை விடுவித்துக் கொண்டாள். அவனது கைப்பகுதியின் வியர்வையால் நனைந்து போயிருந்த அவளின் விலா உள்ளிட்ட முதுகுப் பிரதேசம், சீதளக் காற்றில் சிலிர்த்துக் கொண்டது. அவள் மனம் போல்.

"ஊர் மனைக்க வந்தாச்சி, இனிமே நானேன் பயப்பிட"
"அப்ப எறங்கி நடந்து போ. ஒன்ர ஊர் ஒனக்கினிப் பயமுமில்லத்தானே"
"ஆ.. சும்மா சொன்னநான். கனநேரமா சயிக்கிள்லருந்து காலும் வெறெக்கி... நடந்தாச் செரியாகும். இனியென்ன கிட்டத்தானே."

அவனுக்கும் புகைத்தவனமாயிருந்தது. சைக்கிளில் இருந்து இறங்கி இருவரும் நடக்கத் தொடங்கினர். ஊர்ச்சந்தியிலிருந்த பெட்டிக்கடையைத் தட்டித்திறந்து அவளுக்கு வெற்றிலையும் தனக்கு இரண்டு பீடியும் வாங்கிக் கொண்டான். தீக்குச்சியைக் கிழித்து பீடியைப் பற்றவைத்த போது மௌனத்தின் மொழியாய் அவனது மூக்காலும் வாயாலும் புகை வெளியேறிக் கொண்டிருந்தது.

* * *

கூத்துக்களரியைச் சுற்றித்தான் எத்தனைவகைக் கடைகள். இள முள்ளங் களைத் தூண்டில் போட்டிழுக்கும் அவைகளால் ஊரே திமிலோகப்பட்டது. வாய்பிழந்து நின்றாள் அவள்.

அந்த பலூண் வியாபாரிதான் எத்தனை சமர்த்தன். தனது கையிலிருந்து சிறிய 'என்பிலேட்டரால்' விதை சுருங்கிய ரப்பர்பையை நிரப்பி, நகாசு வேலைகளால் விதவிதமான உருவங்களைச் சமைத்துத் தலையிலே பொருத்தி, நடமாடும் கடையாயவன் நிற்க, அவனது தோளிலும் சங்கராபரணச்சர்ப்பமாய் பலூன்கள் நெளிந்து கொண்டிருந்தன.

"பாம்பு வல்லுவனொண்டு வாங்கித் தரட்ட... கையில வெச்சிக்கவன்" "எ... நானென்ன... கொளந்தப்புள்ளய....? எனக்கு... வேறொரு சாமான்தான் ஓணும்"

செல்லமாய் அவன் விலாவிலிடித்தாள். அவனுக்கோ இதயத்தில் வலித்தது. களரியில் மத்தளக் கட்டு தொடங்க அதுவரை சோம்பிக்கிடந்த சனத்திரள் சிலிர்த்தெழுந்து. தங்களுக்கு வேண்டியவர்களின் வருகைக்காய் களரியைப் பார்த்து வாய்பிளந்து நின்றது. கட்டியக்காரனின் கம்பீரத் தொனியும், நூறு சதங்கைகள் ஒன்று சேர்ந்து அந்த இராப் பொழுதில் புரிந்த ரசவாத ஒலிகளும் அவனை என்னவோ செய்ய, எவ்வளவு நேரம்தான் அமர்ந்திருந்து கூத்தை ரசிப்பது. அவளது மனமோ வளையல்களையே வலம்வர, கூத்தில் மனம் லயிக்கவில்லை. வளையல் வாங்குவதற்கு கூத்து ஒரு சாட்டுத்தானே அவளுக்கு, பொறுமை யிழந்தவளாய், "எழும்பன், கடவளவச் சுத்திப் போட்டுப் போவம்" என்றவளின் நச்சரிப்புத் தாங்காமல் எழுந்து கொண்டான். அவள் முன்னே. இவன் பின்னே பலியாடும் பூசாரியும் போல்.

* * *

நிறைந்திருந்த கடைகள் ஒவ்வொன்றையும் தாண்டி வளையல் கடையொன்றில் முன்வந்து நின்றாள். வளையல்கள் நிலைக்கண்ணாடியில் வரிசையாய் பரவப்பட்டுப் பெற்றோல்மெக்ஸ் ஒளியில் இரண்டாய்ப் பலவாய் ஜாலங்கள் செய்து கொண்டிருந்தன. பொய்மையும் அதன் பிம்பங்களின் சேர்க்கையுமாய் சேர்ந்தவளைக் கிறங்கடிக்க, கண்ணாடியில் தெரிந்த வளையல்களின்பிரதிமைகளில் மனம்பறிகொடுத்தவளாய், அவனை விரலால் சுரண்டி வளையல் பக்கம் கையை நீட்டினாள்.

மூளியாயிருக்குமவள் கைகளுக்கு கில்ட் வளையல்கள் எடுப்பாய்த் தானிருக்கும். இருந்தாலுமவன் நிதிநிலைமை இடந்தரவில்லையே. கருவாட்டுக்குச் செல்வதற்கான ஒரு கிழமைச் செலவுக்கே இருநூறு ரூபாய்க்கு மேல் வேண்டும். அவனிடமுள்ளதோ இருநூறுதான். ஒருநாள் கூத்துக்காயவன் மீசையிழக்க விரும்பவில்லை. கூத்துக்கா பஞ்சம். அவனது மனது திடமானது. அதற்குள் அவளின் ஆவலை மிகச் சரியாக அளவெடுத்த வியாபாரி, "புதுயோடி போலயாக்கும். புள்ளக்கித்தான் வளையல் எடுப்பாரிக்கும். 'கரெக் சைஸ்'. தங்கத் தண்ணியிலொருக்காப் போட்டலம்பினா... ச்சா... தங்கந்தான்"

வாடிக்கையாளன் மனோநிலையைப் புரிந்துகொண்டு அவனது பலவீனத்திலடித்துவீழ்த்தும் வித்தைதான் வியாாபரமென்றால், அதன்லாவகத்துக்கும், நளினத்துக்கும் அவள் இரையாகிப் போனது கூட ஒருவகை விபத்துத்தான். "புதுப் பொஞ்சாதிக்கு வாங்கிக் குடன்... தோளே... என்ன யோசிக்கிறா... இளுத்தெறியன். இதென்ன பெரிய விலைய... எம்பது நுவாதான்.

கண்ணாடியில் தெரிந்த வளையலின் பிரதிமையோடு அவள் கண்கள் பேசிக்கொண்டிருந்தன. "செரி.. அஞ்சக் கொறச்சி எளுவத்தஞ்சாத்தா" வளையலில் கைவைக்கப் போன வியாபாரிக்கு "கொஞ்சம் பொறு" என்பது போல சைகை செய்து, அவளைத் தனியே அழைத்துப் போனான்.

"புள்ள என்னட்ட கருவாட்டுக்குப் போறதுக்குச் சாமான்வாங்கிற காசிதானிருக்கி. இப்ப சின்னதாப்பாத்து எதெண்டாலும் வாங்கு. நம்மட பெரியசாமிச்சடங்கில வளைல் வாங்கித் தாறன்."

அவன் முடிக்குமுன்னே, விசும்பியவளாய் கூட்டத்துக்குள் காணாமல் போனாள் அவள். கூத்துக் களரியில் கோவலனுக்காய் கண்ணகி ஏங்கிக் கொண்டிருக்க, துவிச்சக்கர வண்டியடியில் அவளுக்காயவன் காத்துக் கிடந்தான்.

திருமணமாகிப் பத்தே நாளில் ஓரற்ப விடயத்துக்காய்த் தன்னுடன் கோபித்துக் கொண்ட அவளை நினைக்கும் போது ஒரு புறம் வருத்தமாயும் மறுபுறம் சிரிப்பாகவும், அவளது ஆழ்மனதில் வடுக்களை ஏற்படுத்திய தனது ஒரு பக்க நியாயத்தை நினைக்க அருவருப்பாகவும் இருந்தது அவனுக்கு. பாவம் பலவீனமானவள் என்பதற்காகவாவது விட்டுக் கொடுத்திருக்கலாமென இன்னொரு மனது சொன்னது.

எங்கிருந்தோ மிதந்துவந்த தென்றலைத்தழுவிவந்த தேற்றாப்பூவின்வாசம் அவனைக் கிறங்கடித்து, அவனுள் விரகதாபத்தைத் தூண்டிவிட, "இந்நேரம் அவளுமிருந்தா…" என மனம் எண்ணிக் கொண்டது. தன்னைச் சித்திரவதை செய்யுமந்தத் தனிமையை வெறுத்து அவளைத் தேடினான்.

* * *

"வாவனூட்ட போவம். கூத்துமுடியநேரமாகும்." என்றவளைத் தொட்ட அவன் கையைத் தட்டிவிட்டவளாய், "நீ முந்திக்க. நான் பின்னால வாறன்" என்றவளாய் சீற்றத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஊரொழுங்கையைத் தாண்டிப் பிரதான வீதிக்கு வந்ததும் இருவரும் சைக்கிளில் ஏறிக் கொண்டார்கள். ஆனால் அவளிப்போது பின்கரியலில். அவன் அவளை அவள் போக்குக்கே விட்டுவிட்டான். இரவைக் கிழித்து மௌனத்தில் கரைந்து கொண்டிருந்தது பயணம்.

ஊர்ச்சந்தி, சிங்களவன்ரவாடியென வண்டி கடந்துகொண்டேயிருக்க, இரவின் மயான அமைதியில் இயற்கையெழுப்பிய அத்தனை ஒலிகளும் துல்லியமாய்க் கேட்டவளின் மனதில் பய உணர்வை விதைத்துக் கொண்டிருந்தது.
சைக்கிள் இடுகாட்டை அண்மிக்க, கரும்பூதங்களாய் நெடுத்துநின்ற பனைமரங்களொன்றிலிருந்து காவோலையொன்று சடசடத்து வீழ்ந்தது. அவளோ எதையும் பார்த்துவிடக் கூடாதென்று கண்களை இறுக மூடிக் கொண்டாள். அப்படியென்றால் அங்கு கிடப்பது?

"பஞ்சமில செத்தவன்ட பாடய வே.... ச.... மக்கள் முளிவியளத்துக்க போட்டிருக்கானுகள்" என அவன் தன்னையுமறியாமல் உளறிவைக்க, சைக்கிள் பின்கரியரின் அந்தத்திலிருந்தவள் பயம்மிகுந்தவளாய், இதுவரை நடந்த அத்தனையையும் மறந்து அவனோடு ஒட்டிக் கொள்ளும் நோக்கோடு முன்னோக்கி நகர, சைக்கிள் குலுக்கலுடன் நிலைகுலைந்து விட்டிறங்கிச் சரளைக்கற்களுக்குள் புகுந்து, சில்லு, "படீ" ரென்று சப்தத்துடன் நிலத்தில் கடகடக்க, "என்ட சாமீ..." என்றலறியவளாய் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

இதற்காகவே காத்திருந்து, எங்கேயவள் பிடிதளர்ந்து விடுமோவென்கிற ஐயத்தில் நின்றவன், "பஞ்சமில செத்தவன்ட வேலதானிது. இல்லாட்டி சயிக்கல் வெடிக்கும..." என மேலுமவள் பயத்துக்கு மெருகூட்டி அவள்மீது தன்பிடியை மேலும் இறுக்கினான். அவ்வேளை, ஏதோவொன்று இரைந்தவாறு அவனை உராய்ந்து செல்வதுபோலிருந்தது அவனுக்கு. உடலோ ஒருகணம் சிலிர்த்து ஓய்ந்தது.

"அரண்டவன் கண்ணுக்கு... என்று சொல்வார்களே, அப்படி எதுவுமாயிருக்குமோ? நின்று நிதானிக்க நேரமின்றியிருந்தஅவன், எதற்கும் "தூ.." வென நீளமாய்க் காறித்துப்பினான். அந்த வெளியில் வியாபித்துநின்ற அத்தனை ஒலிகளும் அடங்கியதான தோருணர்வு.

ஒருவரையொருவர் அணைத்தவாறு இருவர்மட்டுமே தனித்து நின்ற அந்த வெளி, ஒரு ஊடலின் முடிவின் சாட்சியாய் உருகித் தணித்து கிடந்தது.

* * *

"என்னோட கோவம...?"

"இல்ல. பெரிய சாமிச்சடங்கில வளயல் வாங்கித்தருவா எண்டு... எனக்குத் தெரியும்" தீடீரென எதையோ எண்ணியவளாய், "அது செரி... சவுக்காலடில ஏன் காறாப்பித்துப்புன நீ?"

"அது… ஒண்டுமில்ல"
"ம்… பேயக்கண்டநீ தானே?"
"ச்சே… நானொண்ணயுங் காணல"
"பொய்... நான் கண்டனான். மானந்தட்ட.. வெள்…ளையா"
"ச்சே, ஆரொனக்குச் சொன்னது பேயண்டு. நீ… கினாக் கண்டிருக்கா சயிக்கிள்ளவரக்க."
"ம்… எங்கட சேதர்பெத்தப்பா சொல்றவர். அவரெத்தினபேய உறுக்கிருக்காரெண்டு தெரியும…? அவருக்கு… நல்லா மந்திரம் தெரியும்"
சிறிது மௌனித்து நின்ற அவன், அந்த ஒரு சிறு கணத்தை மனத்திரையில் கொண்டுவந்தான். "சுரீ"ரென்றது அவனுக்கு. மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க, உடல் "குப்"பென்று வெயர்த்தது.
"நாளைக்கிப் பூசாரிப் பெத்தப்பாட்ட தண்ணியோதிக் களுவணும்" என்றவாறு விபூதியைத் தொட்டு தனக்கும் பூசி அவளுக்கும் பூசிவிட்டான்.

* * *

"பசிக்குதுடீ…"
"எனக்குந்தான்… தேயில வெக்கய…"

* * *

முறுக்கேறிய தசைப்பாம்புகளின் விசைமுற்றிப்படமெடுத்து விளக்கணைக்க, யாவும் மறந்து, இரு உடல்களும் உருகி ஒருதிரியாய் எரிந்து கொண்டிருந்தன. குடிசைக்குள்..

**- 2005 -**



# ஆத்மவிசாரம்

**அ.ச. பாய்வா**

அமானுஷ்யமான சூழல்களில்தான் மனிதனுக்கு ஞானம் பிறக்குமென்பதையும், மனிதனின் வாழ்க்கை வட்டமே மிகமிகச் சிறியதுதானென்பதையும் நானிப்போதுதான் முதன்முதலாக உணர்கின்றேன். சுழன்று செல்வதாய்ச் சொல்லப்படும் காலச்சக்கரத்தின் சுழலொலிகூட கேட்காதளவுக்கு என் பிரக்ஞை முற்றுமுழுதாய்க் காவுகொள்ளப்பட்டது கூடத் தெரியாமல்... வழுக்குமரத்தில் ஏறுவது போல், வாழ்க்கை பிடிபடவேயில்லை. பிரபஞ்சம் ஒரு சிலருக்கு மட்டுந்தான் திறந்துவிடப்பட்ட 'ஏதேன்' தோட்டமோவென்கின்ற ஐயப்பாடு குறித்தும் நானடிக்கடி கலங்கிப் போவதுமுண்டு. இப்போதெல்லாம் இந்த உலகின் வல்லடிவித்தைகளுக்கப்பாலும், ஒரு சமாந்தரமனதின் யாசகனாய் ஆகவேண்டியதே என் உள்ளுணர்வுகள் எனக்கிட்ட கட்டளை போலுணர்கிறேன்.

மன்னம்பிட்டிப் பிரதான வீதியிலிருந்து, தெரியாதவன் தலைவகிடுழுத்தாற்போலமைந்த ஒடுங்கியவோர் ஒற்றையடிப் பாதையின் அந்தத்திலிருக்கும் சேனைத்திடலில், கடந்துபோன என் இருபதுவருட வாழ்க்கையின் அர்த்தங்களைத் தேடிக் கொண்டிருப்பதே ஒரு சுகந்தான். வேண்டுமென்றால் உங்கள் வசதிக்கேற்றவாறு எனக்கொரு பெயரிட்டுக் கொள்ளுங்கள். ஒரே பெயர் பலருக்கிருப்பதால், பெயர் கூட "ஒரு அடையாள" மில்லையென்பது என்வாதம். கடவுள் பெயரில்கூட கொலைகாரனிருப்பதில்லையா? இப்போதைக்கு அதை விட்டுவிடுவதே உத்தமம் போல் தெரிகிறது.

எனது குடும்பம், பிறந்த களிமண் வீடு, வேலியேயற்ற அந்தரித்தவளவு, பேர, தெம்பிலி மரங்கள், இரண்டு பெட்டி நெல்விதைக்கும் பள்ளத்துத்தரை, சிறிசேன, பந்துல என்கிற உயிரற்ற உயிருள்ள பிண்டங்களென்று சுருங்கி, அன்பு பாசமென்கிற சாரசரி உணர்வுகளோடு என் சாதாரண வாழ்க்கை முடியப்போகிறதே என்பதை நினைத்தால் வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கிறது.

முரட்டுப் பச்சைக் காக்கித்துணிக்குள், வியர்வையில் மசமசத்துப் போகுமுடலில், "ஏகே" (47)யும் "கோல்சரும்" ஏந்திக் கொண்டு, நானிந்த வன்னிக்காட்டில் நிற்பதில்கூட எனக்கு உடன்பாடில்லைத்தான். யாரோவொரு பஞ்சத்திலடிபட்ட தொத்தல் ஆமிக்காரென்று என்னைக் காணும் எந்தவொரு தமிழனும் கேலிசெய்யவே செய்வான்.

இந்த விமர்சனங்கள் கூட, அவனுக்கு எங்கள் சிங்கள இராணுவத்தின் மீது இயற்கையாய் ஏற்பட்ட வெறுப்பாலும் சலிப்பாலுங்கூட இருக்கலாம். ஆனால் நான் தோளில் சுமந்து கொண்டிருப்பது வெறுமனே துப்பாக்கி மட்டுமல்ல, என் குடும்ப வறுமையும்தான் என்பதை என்னைப் புரிந்தவர்களைத் தவிர வேறு எவருமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். என்னாலும் இவர்களைப் பற்றிக் கவலை கொள்ள முடியாதுதான்.

ஒட்டையாய் வெட்டப்பட்ட தலைமுடி, ஹாமதுறுவால் வரைந்து ஓதிக் கொடுக்கப்பட்ட கறுத்த நாடாவில் கழுத்தில் தொங்கும் செப்புத் தகட்டுக்கூடு, வெல்லநாரால் கோர்த்து இடுப்பில் கட்டப்பட்ட, முன்பக்கம் "கோள்பீ" திறந்த நிலையில் அரைக்காற்சட்டை, பருவகாலத்திற்கேற்ப மாங்காயோ, 'திவுலோ', சுட்ட தாமரைக் கிழங்கோவென ஏதோ வொன்றைக் கார்ந்து கொண்டு சிறிசேனவுடனும் பந்துலவுடனும் ஊர்மனை யிலுள்ள குளத்திலோ வாய்க்காலிலோ நீச்சலடித்தல், எருமையேற்றம், கள்ளப்பால் கறத்தலெனக் கடந்து போன என் சிட்டுக்குருவி வாழ்க்கையை எண்ணிப் பார்க்கின்றேன்.

இவ்வாறானதோர் கோலத்தில்தான் எங்கள் மூவரையும் சேர்த்து, எங்களூருக்கு ஏதோவொரு ஆராய்ச்சிக்குவந்த "சுத்தா" (வெள்ளைத் தோலுள்ளவன் எல்லாருமே எங்களுக்குச் "சுத்தா"தான்) ஒருவனெடுத்த

புகைப்படமொன்று ஏதோவொரு ஆங்கில நாளேட்டில் பிரசுரமாகி, அவனுக்குப் பரிசு பெற்றுக் கொடுத்தாக எங்கள் "ஸ்கோல மாத்தயா" சொல்லக் கேள்விப்பட்டுப் பெருமையடைந்தோம். அந்த "சுத்தா"வுக்குக் கிடைத்த பரிசில் எங்களுக்கும் ஒருவேளை பங்கு கிடைக்கலாம் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பி, நெடுஞ்சாலையில் தவங்கிடந்து, வந்துபோன "சுத்தா"க்களுக்கெல்லாம் கையசைத்து ஏமாந்து நின்ற கதை வேறு. ஆனாலந்தச் 'சுத்தா' எங்களைப்பற்றி என்ன எழுதியிருப்பான் என்பதை இப்போதுதான் என்னால் உணர முடிகின்றது. அவனுக்கு நாங்கள் விநோதப் பொருளாகத் தெரிந்திருப்போம் போல.

ஆனாலிப்போது எனது கழுத்தில் கிடப்பதோ அந்தப் பழைய கறுத்த நாடாவில் கோர்த்த செப்புத்தகட்டுக்குப் பதிலாக, மற்றை எல்லா இராணுவ வீரர்களையும் போல தங்கச் சங்கிலியில் கோர்த்த வெள்ளரசு இலை. ஆனாலும் எனது அப்பா நம்பிக்கை விசுவாசத்தோடு எனது கழுத்தில் ஒரு நிறைபொசன்தினத்தன்றுகட்டிவிட்ட அந்தத் தாயத்தை (கூடு) நினைத்தால், இப்போதுமெனக்குக் கண்ணில் நீர் முட்டும்.

அது பார்வைக்குச் 'சயனைட்' குப்பியைப் போலிருந்ததால் நண்பர்கள் மூவரும் சேர்ந்து அந்த விளையாட்டு விளையாடுவோம். ஆம் "கொட்டி" விளையாட்டில் நாங்கள் அதை சயனைட் குப்பியாகப் பாவிப்போம். அந்த விளையாட்டும் சலித்துப் போன ஒருநாள், "கிறெனைட்" விளையாட்டு விளையாடுவோமன பந்துல கொடுத்த யோசனைதான் அதற்கு எமனாய் மாறியது.

எல்லைக் கிராமங்களை "கொட்டி" தாக்கப் போவதாய்க் கூறி, எங்களூரில் முகாமிட்டு இராணுவம் இளைஞர்களுக்குக் கொடுத்த பயிற்சியின் போது பார்த்ததைப்போல, "கிளிப்" எறியும் போது "டு..ம்.." என்று சொல்லிக் கொண்டு எறிந்தவர் தரையில் நிலையெடுக்க வேண்டும் என்பது நிபந்தனை. இவ்வாறு செப்புத்தகட்டுக் கூட்டின் மூடிக்குமேலே நாடா கோர்ப்பதற்காக வைக்கப்படும் கொழுக்கியை வாயில்வைத்துக் கடித்து மூடியைக்கழற்றி எறிந்த அன்றே அது தொலைந்துவிட்டது. அதன்பிறகு நான் அப்பாவிடம் வாங்கிய அடிகள், அவரதைத் தேடியலைந்த நாட்கள், தாயக்கூட்டை அவமதித்ததன் பரிகாரமாக விகாரைக்குக் கொடுத்த "தான", என யாவும் நினைவுக்கு வருகின்றன.

அதுமட்டுமா, அருங்கோடைகளில் மன்னம்பிட்டிப் பாலத்தடியில், வரண்டு கிடக்கும் மாவலித் தாயின் மடியில் எங்களுக்குள் நாங்கள் விளையாடிய தென்னம்மட்டை, காட்டு மாங்கொட்டை கிரிக்கட் போட்டிகளையும், மாரியில் பாலத்தின் மேலிருந்து வியந்து நின்று அவளின் ஜலப்பிரவாகத்தையும் எண்ணிப்பார்க்கின்றேன். காலமெவ்வளவு பொய்யானது. நிரந்தரமென்று எதுவுமில்லையா? அப்படியென்றால் எதற்காக இந்த யுத்தம்? 'புரியவில்லையே தெய்யனே....'.

அதென்ன தேவையோ... நாட்டுப் பற்றோ... ஏதோவொன்று என்னைப்பிடித்துப் பலவந்தமாயத் தள்ளிவிட்டாலும், இராணுவத்தில்சேர எனக்கு எந்தவித அடிப்படைத் தகைமையுமிருந்ததில்லைதான். 'சமூக பரிசஷண' வின் போதுதான் தெரிந்தது எனது உண்மையான உயரம் ஐந்தடி ஓரங்குலமென்று

விசுக்கோத்துக்காகவே ஒரு சில நாள் ஸ்கூலுக்குப் போன எனக்கு, அப்பா எப்படியோ 'ஸ்கோல மாத்தயா'வைக் கெஞ்சிக் கூத்தாடி, அவர் வயலில் வேலைசெய்து நான் ஆறாம் வருடம் சித்தியடைந்தவ னென்று விடுகைப்பத்திரத்தில் எழுதி வாங்கித்தந்தாலும், நான் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதே இங்குதான். படிப்பில்லாமல் நான் எப்படி சங்கிலி சப்பாத்தென்று அணிய முடியும். ஏனைய சிப்பாய்களைப் போல,நீட்டுக் களிசானை மாட்டிக்கொண்டு நானொரு தடவை ஊரில் கடிதம் வாசிக்கத் தெரியாமல் முழித்தமுழி எனக்கெல்லவா தெரியும்.

இதற்குமப்பால், இராணுவத்தின் கட்டுப்பாடுகளோ எனக்கு விசித்திரமாய் இருந்தன. இதயமற்ற, வெறும் கட்டளைகளுக்காக எதையுஞ் செய்யப் பழக்கப்பட்ட இயந்திர மனிதர்களுடன் வாழும் நான், முதல் நியமனம் பெற்று வவுனியாவுக்கும் முருங்கனுக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசத்தின் நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் காடுகள் அழிக்கப்பட்டு இருநூறு யாருக்கொன்றாய் இரண்டுபேர்கொண்ட சிறுசென்றிகள்சகிதம் நிறைந்திருக்குமிந்த ஆளரவமற்ற சூனியத்தில் இன்னுமெத்தனைநாள் வாழவேண்டும் 'தெய்யனே..!"

காற்றின் சிறு அதிர்வையும் எதிரியாய்க் குறி வைத்தபடி, ஆபத்தின்றிக் கடந்து போகும் ஒவ்வொரு வினாடியையும் வாழ்வதற்குக் கிடைத்த

கணங்களென அற்பசந்தோசத்துடன், ஒரு பள்ளம், நான்கைந்து பனைவடலிகளாலான கூரை, மணல்மூட்டைகள், அவைகளுக்கிடையே துப்பாக்கிகளுடன் நாங்கள்.

அந்தப் பிரதேசத்தின் இயற்கை வளங்கள், வீடுகள், குடியிருப்புக்கள்தான் என்ன பாவஞ் செய்தன. எங்களைப் போன்றவர்களை அழிவுக்குப் பயன்படுத்தி, அதிலிருந்து லாபங்களையெல்லாம் உயரதிகாரிகள் அனுபவிப்பதெல்லாம் உலகறிந்த விடயங்கள். ஒருவன் இரத்தத்தை வியர்வையாகச்சிந்திஉழைத்ததை அடக்குமுறையால் இன்னொருவன் அபகரிப்பதை புத்த பகவான் எவ்வாறு அனுமதிப்பார்?

என்னை மிகவும் பாதித்த, மனித அநாகரிகத்திற்குச் சிகரம்வைத்தாற் போலமைந்த இன்னொரு விடயம், எங்கள் சென்றிக்கும் தூர்ந்துபோன குழாய்க்கிணற்றுக்கமிடையிலமைந்த பழமைமிக்க பிள்ளையார் கோவில்தான். இந்தக் கோவில்தான் இவர்களுக்கென்ன செய்தது? ஒரு கொடூரமான ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாகவே நானிதைக் காண்கிறேன்.

காலங்காலமாய் அரசோச்சி, பூசை புனஸ்காரங்களால் மகிமையுற்று, எத்தனையோ பக்தர்களின் வேண்டுதல்களையெல்லாம் தன்னுள் சுமந்துநின்ற பிள்ளையார் சிதைந்து புழுதியில் கிடக்க, நேற்றுவந்த புத்தபகவான் சிலையை பிரதிஷ்டை செய்தது என்ன நியாயம். எங்கள் கிராமத்தில் சேனையை அழிக்கவரும் யானையைக் கூட "கண தெய்யோ" என்று அம்மா கையெடுத்துக் கும்பிடுவாளே.

இராணுவத்திலுள்ள அநேகர், பின்தங்கிய ஏழைக் கிராமத்திலிருந்து வந்தவர்கள் தானே. இவர்களால் கூட இப்பண்புகளை எவ்வாறு நிராகரிக்க முடிந்தது. இல்லை, வேறெதைத்தான் இவர்கள் சாதித்துவிட்டார்கள். புத்தர் சிலைகளைத் தாம்கைப்பற்றிய இடங்களில் பிரதிஷ்டை செய்தால் எல்லோருமென்ன பௌத்தர்களாகி விடுவார்களென்ற எண்ணமா. இல்லை எல்லாமே பௌத்தமென்றாகிவிடுமா?

யுத்தத்தில் தர்மம் கடைப்பிடிக்கப்பட்டதாமே ஒரு காலத்தில். எங்கள் ஹாமதுறு கூட 'சில்' ஓதும்போது, கொலைசெய்தல் பாவம் என்பார்.

ஆனாலிங்கு என்னதான் நடக்கிறது. பௌத்தர்கள் பௌத்தர்களல்லாத வரைக் கொலைசெய்யலாமென்று தவறாகப் புரிந்து கொண்டார்களோ என்னவோ, நாங்கள் புரிவது கூட நியாயமற்ற யுத்தந்தானே. உரிமையை மறுப்பது பாவமல்லவா.

தனிமையென்பதே ஒருவனுக்குக் கிடைத்த மகத்தான தண்டனைதா னென்பதை நான் முற்றாக உணர்கின்றேன். காலையிலும் மாலையிலும் பவுசரில் தண்ணீர் கொண்டுவரும் கிழக் கோப்ரல்கள், சாப்பாடு கொண்டுவரும் அருவருப்பான சமையல்காரன், ஒரு நாளைக்கு இருதடவை 'ட்ரக்' வண்டியில் கையசைத்துச் செல்லும் முகந்தெரியா சகவீரர்கள். காய்ந்து வரண்ட வனாந்தரச் சூழல். புழுதி படிந்த வானம். தார்வீதியை ஊடறுத்துக் கானலாய் வெம்பியெழுந்து காற்றில் கலந்து முகத்திலறையும் உஷ்ணம். அதற்குமேல் வாசிப்பதற்கு ஒன்றுமில்லையென்றாகிப்போன பழைய பத்திரிகை, சாப்பாடுசுற்றிவரும் கடதாசி என சலித்துப்போன இவைகளைவிட்டால், மனதுக்கு ஆறுதல் தரும் ஒரே விடயம், எனது சென்றிக்கு நேரே நீண்டுவளர்ந்த இரண்டு நாணற்புற்களை இணைத்து, ஆபத்தான அதன் விளிம்பில் கூடு கட்ட எத்தனிக்கும் அந்தப் பெயர் தெரியாத சிட்டுக் குருவிச் சோடிதான்.

இப்போது என்னுலகமோ, மணல்மூடை இடுக்குகளுக்குள்ளே ஒளிந்திருக்கும் மரணத்தைக் கூட அறியாது கடந்த ஒரு வாரமாக அவையிரண்டும் அந்த இரு நாணல்களையும் இணைத்துக் கூடுகட்டச் செய்யும் பெரு முயற்சியையெண்ணி வியந்து போவதுதான். இரண்டு நாணல்களையும் இணைக்கும் முயற்சியில் அவை தோற்றுப் போன ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொண்டு வந்த மூலப் பொருட்களைச் சேர்த்தால் மூன்று, நான்கு கூடுகள் கட்டலாம். சளைக்காத அந்தப் போராட்டத்துள் அவை தமக்குள் என்னதான் பேசியிருக்குமோ. 'ச்சா' பறவைகளின் மொழி தெரியாமற் போனதே எனக்கு.

நான்கூட ஒருதடவை அந்த இரண்டு நாணல்களையும் சிட்டுக்களுக்குத் தெரியாமல் இணைத்து வைக்க எண்ணியதுண்டு. ஆனால் சிட்டுக்களின் கூட்டில் மனிதர் கைமணம்பட்டால் மீண்டுமவை அந்த இடத்துக்கு வராதென அம்மா சொன்ன ஞாபகம்.

அதேவேளை இரண்டு நாணல்களையும் இணைப்பதிலவை வெற்றிகண்ட அந்த நாளைத்தான் எப்படி என்னால் மறக்க முடியும். நானடைந்த சந்தோசத்தை சென்றியிலிருந்த என சகாவிடம் கூறியபோது, முகத்தை அஷ்டகோணலாக்கி, "உம்பட்ட வெடக்நே ஓய்... மந்தவசக் மே குருல்ல ஹு"த் தெக்கம மரணவா" (உனக்கு வேலையில்ல ஓய். இந்த ஓ... ரெண்டு குருவியையும் நானொருநாள் கொல்லுவன்) என்று கெட்ட வார்த்தையில் சலித்துக் கொண்ட அவனைப் போன்ற ஏராள ஜடங்களின் மத்தியில் நான் வந்து மாட்டிக் கொண்டதே துர்ரதிஷ்டவசமான நிகழ்வுதான்.

என்னால் நம்பவே முடியவில்லை, உண்மையிலேயே எனது சகா இவ்வளவு மூர்க்கத்தனமாய் நடந்து கொள்வானென்று. சிட்டுக்களின் கீச்... கீச்... சப்தம் தனது பகல் தூக்கத்திற்கு பங்கம் விளைவிப்பதாய்க் கூறி, முற்றுப்பெறாத அதன் கூட்டை முந்திய தினம் என் கண்முன்னா லேயே பிய்த்தெறிந்தபோது, அவை தூரத்திலிருந்தும் கூட்டுக்கு அருகில் வந்தும் இரண்டு நாட்களாய் அவல ஒலி எழுப்பிப் பறந்துபோனதும், ஒற்றை நாணலில் பிய்ந்து தொங்கிய அந்தப் பாதிக் கூடும், எனது மரணபரியந்தம் என்மனதை விட்டுப் பிரியப் போவதில்லை.

நமது இராணுவம் நாசவேலைகளில் பேர்போனதென்கிற உண்மையை மெல்ல மெல்ல என்மனம் உள்வாங்கத் தொடங்குகிறது.

மூர்க்கனான என் சகாவின்முன் கோழையாகிப் போனதில் வெட்கமும், ஒருவேளை இவ்வாறானவொரு தனிமை எனக்குள் விரக்தியையும், என் சகாவைப் போன்றே என்னையும் ஆக்கிவிடுமோ என்கின்ற பயமும் என்னை ஆட்கொள்கின்றது.

இவ்வாறந்தச் சிட்டுக்களைப் போல்தானே இந்தத் தமிழர்களும் வேதனைப்படுவார்கள். திக்கொன்றும் திசைக்கொன்றுமாய்ச்சிதறி எங்கெங்கெல்லாம்மிருந்து தங்கள் வீடுகளையெண்ணி ஏக்கப்பெருமூச்சு விடுகிறார்களோ. இந்தப் பாவமும் பழியுமெல்லாஞ் சேர்ந்தொரு நாள் என்னையும் என் சந்ததியையும் கருவறுக்கத்தான் போகிறதோ...? அதற்குள் நான் விடுதலையாகவேண்டும்.

அன்றைய கடமையை முடித்துச் சீருடைகளைக் களைந்துவிட்டு முகாமில் எனக்குத் தந்த 'கஹட்ட'வைப் பருகுகிறேன். இருள் சூழ்ந்த வனாந்தரத்துக்கும், வழித்துத் துடைத்துவிட்டதைப் போன்றிருந்த வானத்துக்குமிடையே, அழித்தல்தான் கருமமென்றில்லாதவொரு புதிய பாதையைத் தேடுகிறேன். நிர்மலமான என் மனத்திரையினுள் அது நன்றாகவே தெரிகின்றது.

என்ன விலைகொடுத்தாகிலும் இதிலிருந்து நான் விடுதலையாக வேண்டும். என் பெற்றோர்கள் நிச்சயமாய் என்னுணர்வுகளைப் புரிந்து கொள்வார்களென மனது நம்புகின்றது. களுஹாமினேயின் பெட்டிக் கடையில் குந்தி சிறிசேன, பந்துலவுடன் 'கஜால்' போட்டு, மாவலியில் மீண்டும் நீந்திச் சேற்றின் மணம் குடிக்க வேண்டும் போலிருக்கிறது. இதுவுமென்ன, ஒருவகை நிஷ்கரண அவஸ்தையோ!

அந்திவானக்கரைசலுக்கு மேலும் மெரு கூட்டிக் கறுப்புப் புள்ளிகளாய் இரண்டு சிட்டுக்கள் உயரப் பறக்கின்றன. அவைகளேன் என்சிட்டுக்களாய் இருக்கக் கூடாது? இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் அவைகளுக்கு இரண்டு நாணற்புற்களில்லாமலா... என்ன. உழைப்பும், அந்த உழைப்பின் மீதான உரிமையும், உரிமைவழி உயிராகிப்போன ரோஷமும், இன்றில்லா விட்டாலும் என்றோஒருநாள் இதேகாட்டில் மீண்டுமவற்றைப் பாதுகாப்பான சூழலில், ஏன் துப்பாக்கிச்சனியன்களின் சுடுகுழல்களுக்குள்கூட கூடுகட்டி வாழவைக்குமென்கிற நம்பிக்கை பிறக்கிறது.

முனைப்புறும் தீர்மானங்களை, வீரியங்கொண்ட மனதின்வெண்திரை சலனமற்ற கோடுகளாய் வரைந்துதள்ள, எழுந்து, மங்கிய சிமினி விளக்கின் முன்னமர்ந்து எழுதத் தொடங்குகிறேன்.

"ஆரணிய அம்மா வெத்த...."

**- 2004 -**



# கறுப்பு நாய்

த. மலர்ச்செல்வன்

இந்த நாய் பற்றிச் சொல்வது உங்களுக்குக் கேலியாக இருக்கலாம். அசண்டையாகக் கருதலாம். அல்லது உங்களது நிறுவனத்தின் சோம்பேறித்தனத்தை நினைத்துப் பரபரப்பாகலாம். எப்படியோ?

இந்த நாய் மிகப் பயங்கரமானது. வாலைச் சுருட்டி ஒரு சஷண கணத்தில் குதறிவிடும். யாரும் இதுபற்றிக் கேட்பாரில்லை. முறையிடாத இடமேயில்லை. ஏலவே உங்களுக்கு ஒரு மடல் வரைந்திருக்கிறேன். எந்தப் பதிலும் வரவில்லை. நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆமிக்காரன் நாய்போல் சுட்டுத்திரியமுன்னர் உங்களது சேவை தரமாயிருந்திருக்கிறது. அப்போ எனக்குப் பதிமூன்று வயதிருக்கும். “நாய்பிடிக் காரனுகள் வந்திட்டானுகள்” என்று ஒவ்வொருவீட்டிலும் சங்கிலியுடன் நாய்கள் கட்டப்பட்டிருக்கும். கறுப்பு நாய் பற்றி எனக்கு அப்ப பயமோ இருந்ததில்லை. நாயை ரோட்டில் கண்டால் கல்லால் அடிப்போம். லூயிபாச்சரின் முதல் சீடன் கூட பாராட்டி எனக்கும், எனது நண்பர்களுக்கும் கடிதம் எழுதியிருந்தார். “சீனாவில் கரப்பான் ஒழிப்பதற்கு லூயிசின் எவ்வளவோ கரிசணையுடன் வேலை செய்கிறாரோ

அதுபோல் நீங்களும் ஈடுபடுகிறீர்கள். எனது குருவின் பாய்ச்சர் முறையான சிகிச்சைக்கு உதவுகிறீர்கள் என எழுதியிருந்தார்.

பின்னர், பள்ளிக்கூடம் விட்டு மதியம் 1.30 மணியிருக்கும். நானும் எனது நண்பர்களும் கோவிலடி வெட்டையைக் கடந்து நாற்சந்திக்கு ஏறினோம். நான்கு நாய்கள் கோச்சி போல் ஒன்றையொன்று ஒட்டி, இழுபட்டு நின்றன. நண்பன் சாராவும், வீராவும் கல்லாலடித்தனர். சுரா பொல்லாலடித்தான். நாய்க்கூட்டம் ஓலமிட்டு எமைநோக்கித்தாவின. ஒரு நாய் விரிச்சென்று இமைவெட்டும் நேரத்தில் சிறு புள்ளியாய் மறைந்தது. அது கறுத்தநாய். ஏனைய நாய்களை 'லைட் போஸ்டில்' கட்டி மரண தண்டனை வழங்கினோம்.

<u>காரணம்</u>

1. கட்டாக்காலியாய்த் திரிந்தமை
2. நடுறோட்டடில் புணர்ந்து இச்சையைத் தூண்டியமை.
3. சுந்துவைக் கடித்து விசராக்கியமை. பின் மரணிக்கச் செய்தமை.
4. லூயிபாச்சரின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்டமை.
5. வரியிறுப்பாளர்களை அசௌகரியப்படுத்தியமை.
6. வாகன விபத்துக்கு காரணமாயிருந்நமை.

என்று பல காரணங்கள் அறிவிக்கப்பட்டு 'கட்டாக்காலிக்கு எதிரான நாயடிக்குறாப்' என உரிமை கோரியிருந்தோம். அப்போது உங்கள் நிறுவனமும் எமைப் பாராட்டியிருந்தது. பொன்னாடை போர்த்திப் பணப்பரிசும் தந்து கௌரவித்துமிருக்கிறீர்கள்.

யாரோஒரு முட்டாள் தாந்தாமலைச் சாமியாம். அம்மாவிடம் எனது நண்பர்களின் வீட்டிலும் ஏதோ ஓதிவிட்டான். அம்மாவும் எனது நண்பர்களின் தாய்மாரும் பதறிவிட்டார்கள். நாய் வைரவரின் வாகனமாம். வைரவர் பொல்லாதவராம். அதில் காடேறியும், கம்பளி வைரவர்களும் மிகப் பொல்லாதவர்களாம். வானம்தட்டச் சுருட்டுப்பற்றவைத்து உலா வருவார்களாம். நாய்க்கெதிராக ஈடுபடுபவர்களைக் கழுத்தைநெரித்துக்

கொலை செய்வார்களாம். எப்படியிருக்கிறது கதை? ஏங்களது சாமிகளுக்கு காகம், பன்றி, எலி, புலி, யானை... எல்லாப் பறவைகளும், எல்லா மிருகங்களும் வாகனமாம்.

வைரவருக்குச் சடங்கு செய்ய வேண்டும். அம்மா ஆயத்தமானாள். கஞ்சாரொட்டி, சாராயம் இன்னும் அவிபண்டங்கள் வைத்து அவரை திருப்பதிப்படுத்தவேண்டும். இல்லாட்டி பொலி எடுத்திடுவாராம். அம்மா கொஞ்சத்தை கையால தொலைத்தா.

நாய் விரோதம் சற்றுத் தணிந்து போயிற்று. கலிபிறந்து பிரேமாதூத வருஷத்திற்குப் பின்னர் இன்னும் தணிந்தது. தம்பி எம்மீது கறுத்தச்சாயம்பூசி ஆற்றைக் கடந்து போனபின், ஆமிக்காரனும், மற்றவர்களும் எனது வீட்டைச்சுற்றி சோதனை செய்வதும், எனது உடம்பில் சரிபிழை பார்ப்பதும் நாளாந்த நாட்களில் ஒரு அங்கம். அப்போதெல்லாம் சோமாதியக்காட நாய்தான் குரைக்கும். ஆமிக்காரன் வருவதைச் சேதிசொல்லும். அது என்னில் ஒரு மரியாதையை ஏற்படுத்திற்று. அதைப்பிடித்து வருடி, உண்ணி அகற்றி, குளிப்பாட்டி, காலையில் இறைச்சியும், மாலையில் பாலும் கொடுத்து வந்தேன். கலிபிறந்த வெகுதானிய வருஷம் புரட்டாதி பத்தில் கூற்றுவன் என்னிடம் வந்து 'ஜிம்மி'க்கு (சோமாதியக்காட நாயின் பெயர்) விசா முடிந்திற்று. அதை அழைத்திற்றுப் போகப்போறேன் என்றான். நான் அவனிடம் விசாவை நீடிக்க முடியாதா என வினாவினேன். இல்லை. பூவுலகுக்கு நிறையவே சேவை செய்திருக்கிறார். அடுத்தமாதம் பதினொராம்திகதி வெள்ளிக்கிழமை வைரவர் சுவாமி 'ஜிம்மி'க்கு பாராட்டு ஒன்றை ஏற்பாடுசெய்திருக்கிறாரென்றான். நாம்தான் பாராட்டவில்லை. அங்கேயாவது கிடைக்கட்டும் என்று அவனுடன் அனுப்பி வைத்தேன். ஒன்று, ராமன் வைகுண்டம் வரும்போது பெரும் ஆற்றைப் பெருக்கெடுக்கச் செய்து புழுத்த நாயை அனுப்பி பரிசோதனை செய்திருக்கிறீர்கள். அதுபோல் இந்த 'ஜிம்மி'யை எக்கணமும் அசிங்கமாகவும், குரோதமாகவும், கட்டாக்காலியாகவும் பயன்படுத்தக்

கூடாது. சரியென்றான் கூற்றவன். ஜிம்மி என்னைவிட்டு அகன்றது துக்கம்தான். என்ன செய்ய?

அதன் பின் வனவாசம் முடிந்து இரு பின்னிரவுகள் கழிந்து, மறுநாள் காலை திடீரென ஒரு கருவுருவம் ஜன்னலிடுக்கினால் குறுக்கிட்டது. எழுந்து முன்னறைக் கதவினூடாக எட்டினேன். நாலுகால் கொண்ட கறுவுருவம். மங்கலாய் மறைந்தது. அது கறுப்பு நாயாக இருக்குமோ? எத்தனை வருடங்கள் கடந்துவிட்டன. அதுவாக இருக்காது. ராமனுக்கு முன் தோன்றும் ராவணனின் கருவுருவமாயிது... சீ.. இராது. அது மறைந்து போயிற்று.

ஆரம்ப நாட்களில் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. புதிய பண்ணை போன பின்னர் நான் முதன் முதலில் சந்தித்ததும், நான் பதிமூன்று வயதில் அடித்துத் துரத்தி, கண் இமைக்கும் சஷ்ண நேரத்தில் தப்பிய கறுத்தநாய் போல் ஒன்றைத்தான். கொஞ்சம் பயமாக இருந்தாலும் எல்லோரும் அந்த நாயில் கருணை காட்டினார்கள். மதியச் சாப்பாட்டில் கொஞ்சம் கொடுத்து வந்தார்கள். ஆரம்பத்தில் நான் காகத்திற்கு அன்னமிட்டு வந்தேன். பின் கறுப்புநாய்க்கு கொடுக்க வேண்டியதாயிற்று. காலை பண்ணை வரும்போதும், போகும் போதும் வாலையாட்டும். ஆனால் அதன் பார்வையில் ஒரு வெறியிருந்தது. அது மானைக் குதறித்தின்னும் வேங்கையைப் போல்.

ஆர்வம் தாளாத நாள் ஒன்றில் என் கவட்டுக்குள்ளால் புகுந்து உரசியது. திடிரென சுதாகரித்து ஒரு உதைவிட்டேன். "லொல்லென்று" மறைந்தது. அடுத்தநாள் காலையில் போர்வீரன் நாறியிருந்தான். ஐந்தறிவு ஜீவனில் கருணைகாட்டாமல் காட்டுமிராண்டியாய் நடந்ததாக காற்று மண்டலம் முழுவதும் துர் வாடையடித்தது.

கண் ஒழுக, நியாயம் கற்பித்திருக்கிறது. அடித்துக் கொல்ல வேண்டும். நாத்த நாயை. ஒரு நிமிடம் கூட தங்கவிடாமல் உலையில் கணகணக்கின்ற இரும்புப் பாளத்தை பின்பக்கம் பிடித்து ஜனனிக்கும் பாதையை தீயாக்க

வேண்டும். எனக்கு ஆத்திரம் கூடிவிட்டதென்று தெரியும். மேல் படியில் மேலும் கீழுமாகயிறங்கி தனித்துக் கொண்டேன்.

முகம் சுழித்த மாந்தரெல்லாம் இரு நாட்களில் உண்மை புரிந்தாலும், மூன்று பேய்கள் "தாந்தியெண்டேன். தோந்தியெண்டேன். தந்தாள் வாழியை போட்டுக்கிட்டேன்" என்று கூத்தாடின. ஒரு மசிரையும் போர் வீரனிலிருந்து உதிர்த்த முடியாது. மூக்கைத் தோண்டியவன் மணந்த வரலாறுமில்லை. அவ்வாறு நடக்கவும் மாட்டான்.

காகக் கூட்டம் வளையமிட்டுக் கொண்டிருந்த பாதையில் நடக்க ஆரம்பித்தேன். என்ன ஒற்றுமை. இரை மீட்பதற்கு எத்தனை ஆர்வம். சகசபட்சியென்று அழைப்பதில் என்ன பொருத்தம். சனியனின் வாகனமென்றாலும் என்னில் ஒருபோதும் குரோதம் காட்டவில்லை. இவைகளைப் போலத்தான் என் நண்பர்களும் இருந்தார்கள்.

என் பாலிய காலத்து நண்பர்களே! எங்கு போனீர்கள்? எனக்குக் கைகொடுக்க யாருமில்லை. ஊரோடி விசரைக் காப்பாற்றக் கல்லெடுத்தோம். தடியெடுத்தோம். மரண தண்டனை கொடுத்தோம். தப்பிய கறுத்த நாய் மீண்டும் என்னில் பாய்கிறது. கைதட்டியழைத்தேன். ஒரு சஷணகணத்தில் நேரிருக் கோட்டில் சமாந்தரமாய் பயணிக்கும் எங்களால் சந்திப்புக்கள் சாத்தியமற்றுப் போயிற்று. என் குரல் அவர்களைச் சென்று சேர்ந்திருக்காது. மீண்டும் திரும்பியது.

மூன்றாம் நாள் மீண்டும் கறுப்பு நாய் தோன்றி பின்னிடைக் காட்டினுள் மறைந்தது. மீண்டும் அது எப்போது வருமெனக் காத்துக் கொண்டு நின்றேன். தெருக்கள் முழுதும் இருட்டையே உருவாக்கிக் கொண்டிருந்தன. பின்னிடைக் காட்டின் அந்தத்திலிருந்து தீப்பிளம்பாய் வரப்போகிறதா? என அனுமானிக்க முடியவில்லை. கைகள் விறைத்தன. வலது கை, தூக்கிப்பிடித்திருந்த கைக்கோடலியின் பாரத்தால் இன்னும் அதிகம் வலிப்புத் தந்தது. வாழ்வின் கடைசிக் கூறுக்காய் நானா? அதுவா? தீர்மானித்தேயாக வேண்டும். அன்று ஏமாற்றம் தோய்ந்த

புள்ளிகளை அடுக்கிக் கொண்டு வீடு திரும்பினேன். எப்படி நித்திரை வரும்? இரவு முழுவதும் என்னைக் குதறியது. வீரிட்டு, வீரிட்டு பல தடவைகள் நித்திரையைக் குலைத்தது. எனது ஜன்னல் இடுக்கின் ஓரத்தினால் கண்ணை அலையவிட்டேன். அதைக் காண்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் தென்படவில்லை.

நாட்கள் அவிழ அவிழ அதுபற்றி எந்தப் பதிவும் என்னில் இல்லத்துப் போயிற்று. அன்று கறுத்த நாய் செத்துப் போயிற்று என்று ஒரு பெட்டி மீன்காரன் குரலெடுத்துக் கூவிப்போனான். அவனுக்கு எந்த சம்பந்தமுமில்லை. என்னை நெருங்கி நெருங்கி புன்னகைத்துப் போனான். அவனின் முகத்தில் கறுத்த நாயின் சாயல் இருந்தது. ஆனால் அவனுக்கு இரண்டு கால்களும், இரண்டு கைகளுமிருந்தன. அவன் கூரான மூக்கும், பூனைக்கண்ணும், நெடிய நாடியும் கூடியவனாகயிருந்தான். அவன் என்னை பின்நோக்கிப் பார்த்தவாறே கடந்து, மறைந்து போனான்.

அது நிகழ்ந்து திங்கட்கிழமை மாலை. செவ்வாய் காலை பண்ணைக்கு நேரம் போயிற்ரென்று பதறியடித்து மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மித்த போது கறுத்த நாய் இரண்டு காலையும் உயர்த்தி நாக்கையும் தொங்கப்போட்டு நின்றது. நான் 'சைக்கிளை' வாவிக்கரை வீதியால் திரும்பி முச்சந்தி வீதிக்கு ஏற்ற 'பெரிலை' சற்று அமுக்கி உளக்கினேன். ஒரு கருவுருவம் திடீரென என்னை நோக்கி மின்னல் வெட்டும் ஒளிக்கீற்று நேரத்தில் தாவியது. காதைப் பொத்தினேன். புகுபுகுவென ரெத்தம் அடித்தது. கைலேஞ்சால் அமுக்கி விழுந்துகிடந்த சைக்கிளை சரிபடுத்த முதல் தலையைத் தூக்கிப் பார்த்தேன். கறுப்பு நாய் தேய்புள்ளியாய் மறைந்தது. இரு முழங்கால் சில்லும் தேய்ந்து பீய்த்தோல் கிளம்பியிருந்தன.

பண்ணை பரபரப்பாயிற்று மீன் சந்தையைப் போல. பின் அச்சமூட்டும் கதைகள் வரத்தொடங்கின. (அது உங்களுக்கு அவசியமான செய்தி) கறுப்பு நாய் நகரத்தில் வாழ்ந்த காலத்தில் பல குட்டிகளைச் சிதைத்தாகக் கூறினார்கள். கலி விக்கிரம வருஷம் மார்கழித் திங்கள் முதலாம் நாள்

முதல் நிகழ்வு நடந்திருக்கிறது. அது ஆட்டுக்குட்டி மீது நடந்த மிலேச்சத்தமான தாக்குதல். ஆறுமாதமாயிராத வெள்ளையும், கறுப்புப் புள்ளியும் சேர்ந்த கொழுத்த ஆட்டுக் குட்டியாம்.

வீரகேசரி மார்கழித்திங்கள் இரண்டாம் நாள் இப்படிச் செய்தி வெளியிட்டிருக்கிறது. "மர்மம் தொடர்கிறது சமாத்தியமான ஆறறிவுயில்லா மர்ம கரிய உருவத்தின் தாக்குதலினால் ஆறுமாதமாகாத ஆட்டுக்குட்டி வலது காது கடிக்கப்பட்டு அடிவயிற்றுக்குக் கீழ்ப்பகுதி குதறப்பட்டு மரணம்" (பத்திரிகை நறுக்கின் போட்டோப் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

மர்மக் கரிய உருவம் தேடப்படுகிறது. கண்டவர்கள் 5555555 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். இது கறுப்பு நாயின் முதலாவது தாக்குதல்தான் என்பது என்னுடைய கணிப்பு. புழுதி தட்டி ஆராய்ந்து பார்த்த பத்திரிகைகளின் நறுக்கின் தீர்மானமும் என்னுடன் ஒத்துப்போகிறது.

பின் இருமாதம் கழித்த பங்குனி முதலாம் திகதி முயல் குட்டியொன்று அதே பாணியில் கொலை செய்யப்பட்டுள்ளது. (தினகரன் நறுக்கு இணைக்கப்பட்டுள்ளது) உயர்நீதிமன்ற நீதிபதி அபயசேகர கருத்துத் தெரிவிக்கையில் இது ஒரு நாயின் வேலையாகத்தானிருக்க வேண்டும். கட்டாக்காலி நாய்களைச் சுட்டுத் தள்ளும்படி ஆணையாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

உத்தரவு பிறப்பித்து ஒரு மணி நாலு நிமிடம் இருபத்தைந்து செக்கன் கழிந்திராது, தவளும் ஒரு வயதுப் பாலகனின் ஆணுடம்பும், வலது காதும், வலது கையும், மாயமாக மறைந்திருந்தன. பிள்ளை அழுத ஈனக்குரலில் தாயும் அயலவரும் உசாராகி விட்டனர். சுற்றமே சுற்றி வளைத்துத் தேடியது ஒரு கறுத்த நாய் சிறு புள்ளியாய் மறைந்ததாக (தினக்குரல் மூன்றாம் திகதிப் பத்திரிகை நறுக்கிலுள்ளது.)

அச்சமூட்டும் கதைகள் என்னை உசுப்பின. நான் அசையவில்லை. போர்வீரன் பயப்படுவானா? ஏதிரிகளின் கோட்டைகளைத் தகர்த்தெறிந்தவனுக்கு இது ஒரு துச்சம்.

கனம் ஐயா அவர்களே!

மேற்படி விபரிப்புக்கள் உங்களுக்குப் போதுமென நினைக்கின்றேன். இதற்கு மேலும் தாங்கள் நடவடிக்கை எடுக்காவிடின் சிலநேரம் கொரில்லாத் தாக்குதலுக்கு எனது இடது காதையும் இழக்க நேரிடலாம். ஆனால் போர்வீரன் சும்மா இருக்க மாட்டான். எரிமலை வெடிக்கும் திரவக் குழம்புகள் எழுந்து சாம்பலாக்கும், கடலும் ஆறும் ஒன்றாகும். ஏன் இந்த வம்பு? தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

குறிப்பு:- ஆனால் ஒன்று கறுத்த நாய் மாயா ஜாலம் செய்வதில் கெட்டிக்காரி, நீர்த்திவலைகளை வரவழைப்பதில் சாமத்தியகாரி, நாய்க் குணம் பொல்லாத குணம் நன்றியுள்ள மிருகமென்று நாசமாகாதீர்கள். திருக்குர்ரான் அத்தியாயம் இருபத்தைந்தில் இருபத்தி மூன்றாம் பந்தியினையும் படியுங்கள். அப்போது விளங்கும் கறுப்பு நாய் பற்றியும்....

**- 2003 -**



# வரம்

வி. மைக்கல் கொலின்

அந்தக் கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே ஒரு கல். அது மனதின் சறுக்கல் வாழ்க்கை தந்த வழுக்கல். மாமுனியின் கோபக்கிறுக்கல், அதுவே சாபக்கருக் கல்லாகியது.

ஒன்றல்ல, இரண்டல்ல... கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களாய் அந்தக்கல் அந்தப்பாதையில் தான் தவம் கிடக்கிறது. இயற்கையின் எழில் கொஞ்சி விளையாடும் அந்த அழகிய கானகப் பிரதேசம் பல வருடகாலமாக பாழடைந்த நிலையில் ஏதோ ஒரு சோகம் சொல்லியது.

தூரத்தே தெரியும் ஒரு குடிசை. முனிவர்கள் தங்கும் ஆசிரமத்தைப் போல் அழகாக வேயப்பட்டிருந்தாலும் இன்றைய அதன் தோற்றமும் மோசமாகவே இருந்தது.

சூரியன் விழித்து தன் கதிர்களை பரப்ப முன்னமே தன் விழிக்கமலம் திறந்து தன் கணவனுக்கு வேண்டிய கடமைகள் செய்து அவரது இறைவணக்கத்திற்கான ஒழுங்குகளை செய்து ஆற்றங்கரையில் தண்ணீர் கொண்டுவர அன்னநடை நடந்து செல்லும் அந்த அழகிய பாதங்களின் அசைவுகளின் போது கேட்கும் அந்த சலங்கைகளின் சப்தம் காலை நேரத்து புள்ளினங்களின் இனிய கானத்துடன் சேர்ந்து ஒரு ரம்மியமான சூழலை உருவாக்கும் நிலை இன்றில்லை.

ஆற்றுக்குள் இறங்கி தன் ஆடை களைந்து அவள் நீராடும் அழகைப்பார்க்க... இல்லை இல்லை அவள் மேனி அழகை ரசிக்க ஆற்றங்கரை ஓரத்திற்கு மேய வரும் புள்ளி மான்களும், கவரி மான்களும் அவள் நீராடி, தான் கொண்டு வந்த மண் குடத்தில் தண்ணீர் அள்ளிச் செல்லும் வரை அவளுக்கு துணையாக நிற்கும்.

வானத்து மின்னல் ஒன்று மாநதியில் இறங்கியது போல் அவள் நீராடிச் செல்வாள்.

அந்தக் கானகத்து மான்களைப் போலவே அவள் அழகை அவளுக்கும் தெரியாமல் அவனும் ரசித்தான்.

பனிமூட்டம் நிரம்பிய அந்த விடிகாலைப் பொழுதில் வானத்து நிலவு மண்ணில் உலாவருவதைப் போல் அந்த மஞ்சள் மேனி அழகி ஆம்... அவள் தான் அகலிகைப் பெண் தினமும் நீராடும் வேளை இந்திரலோகத்து அதிபதி சித்தம் கலங்கி நின்றான்.

மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை என்று அழகிகள் கூட்டம் அவன் அந்தப்புரத்தை அழகு செய்தாலும் அழகு மயிலாள் அகலிகையின் உடல் வனப்பும் மேனியழகும் அவனை சித்தம் தடுமாற வைத்தது.

ஒரு நாளேனும் ஒரு பொழுதேனும் அவளுடன் கலந்திட வேண்டும் என்ற வெறி அவனுள் கிளர்ந்தெழுந்து நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருந்தது.

இது இன்றல்ல நேற்றல்ல... தேவலோக அழகுச் சந்தையில் என்று அகலிகையை அவளது தந்தை பந்தயப் பொருளாய் ஆக்கினானோ அன்றிலிருந்து எழுந்தது இந்தத் தீ...

தந்திரக் கௌதமன் பந்தயத்தில் வென்று அகலிகையை பூமிக்குக் கொண்டு வந்த நாள் முதல் அந்தத் தீ மேலும் மேலும் பற்றி எரியத் தொடங்கியது.

அவள் ஒரு ரிஷி பத்தினியாய் மாறிப் போனாலும் காட்டில் எறித்த நிலவாய் கடலில் கரைத்த உப்பாய் அவள் இளமை முதுமையைத் தாலாட்டி அவள் கணவன் கௌதம முனியின் காலடியில் கொட்டிக் கிடப்பது அவனுக்கு வேதனை அளித்தது.

தேனைப் பருகியவனுக்குத்தானே தேனின் சுவை தெரியும். எத்தனை வகைத் தேனை ருசிபார்த்தவன் இந்திரன். இது கொம்புத் தேனல்லவா!....?

அதன் சுவை அறிய அவன் மனம் துடித்தது. ரிஷி பத்தினிதான் என்றாலும் அவள் இளமை, அவள் அழகு, அவன் சிந்தையை மயக்கியது. நேரம் பார்த்து இருந்தவனுக்கு காலம் கூடிவர பொறுமை இருக்கவில்லை.

விடியற்காலை எழுந்து தன் கடமை முடிக்க ஆற்றங்கரை செல்லும் மாமுனியின் பழக்கம் அவர்தம் வழக்கமாக இருப்பதை அறிந்தான்.

அன்று சித்ரா பௌர்ணமி. வானில் வெண்ணிலவு பவனி வரத்தொடங்கி நாழிகைகள் ஆகிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு சேவல் கூவியது, சேவல் வடிவில் வந்து கூவியது இந்திரன். முற்றும் துறந்த முனிவர் எழுந்தார். தன் அருகில் துயிலும் அகலிகையைப் பார்த்தார்.

மேலாடை விலகிப் படுத்திருக்கும் அவள் மேல் தன் போர்வையை போர்த்திவிட்டு எழுந்து தன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அது அர்த்தஜாம நேரம். ஆனால் விடிகாலைப் பொழுதைப் போல் நிலவு வெளிச்சம். சேவலைப் போல் கூவி கௌதமனை ஏமாற்றிய இந்திரன் கௌதம வேடம் கொண்டு ஆசிரமத்திற்குள் நுழைந்தான்.

வாசல் நிலை அவன் நெற்றிப் பொட்டில் இடித்தது. 'அம்மா...' என தன் நெற்றியைத் தடவியபடி உள் நுழைந்தான். விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த தூண்டாமணி விளக்கை மெல்ல ஊதி அணைத்தான். எங்கும் இருள் போர்வை.

அகலிகையை நெருங்கி அவள் தோள் தொட்டு திருப்பினான். அந்த ஸ்பரிசம் பட்ட கணத்தில் அவள் மேனி துடித்தது. நீண்டநாள் தவம் கலைந்து தன் கணவன் தன்னைத் தீண்டுகிறான் என்ற நினைப்பு. அந்த ஸ்பரிசம் அவளுக்குப் புதிதாய் இருந்தாலும் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னான தீண்டுதல் அது. அதனை இழக்க அவள் தயாராக இல்லை. அதன்பின் அங்கு நடந்தது ஒரு மாபெரும் யுத்தம். ஒருவரை ஒருவர் வெற்றி கொள்வதல்ல ஒருவரிடம் ஒருவர் தோல்வி அடைவதை முன்னிலைப்படுத்தி ஆரம்பிக்கும் யுத்தம்.

இத்தனை நாள் தவம் கலைந்து அவள் தன்னுள்ளே உருகினாள். இந்த சுகம் இனிமேல் எப்போது? ஓ.. இதுதான் என்ன சுவை. அந்தக் காட்டுத் தேனைப் பருகிய மயக்கத்தில் அந்த இந்திர வண்டு களைத்துப்போய் படுத்துக் கிடந்தது.

வாசலில் யாரோ வரும் அரவம். கௌதம மாமுனி உள்ளே நுழைந்தார். தன் மஞ்சத்தில் இன்னுமொரு கௌதமரா? அவரது ஞானதிருஷ்டி அவனை இந்திரனாய் அடையாளம் கண்டது. பாவம் அகலிகை அசல் எது? நகல் எது? எனத்தெரியாமல் விழித்தாள். அசலைக் கண்டதும் நகல் ஓடி மறைந்தது.

அகலிகையின் கோலம் அங்கு என்ன நடந்தது என்பதனைச் சொன்னது.

'முறைதவறி மாற்றானோடு இன்பம் கொண்டவளே பிடிசாபம்! இன்று முதல் நீ உணர்ச்சியே இல்லாத வெறும் ஜடம். ஆம் இனி மேல் நீ ஒரு கல், வெறும் பாறை..'.

சாபம் இட்ட முனி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார். திகைத்தாள் அகலிகை இவ்வளவு நேரமும் தன்னுடன் இன்பம் அனுபவித்தவன் தன் கணவனில்லையா? இந்திரனா? இந்திரனுடனா நான் காம சுகம் கண்டேன்?

இத்தனை நாள் இல்லறத்தில் இறைவா இதென்ன சோதனை? முக்காலமும் அறிந்த முனிவரே வெறும் சேவல் கூவும் சத்தத்தில் நிகழ்காலம் அறியாது போனது குற்றமல்ல? ஆனால் கணவனைப் போல் உருமாறி வந்த இந்திரனை பேதை நான் அடையாளம் காணாதது எனது பிழையா? கேட்க வாய் துடித்தது. ஆணாதிக்கத்தின் பிரதிவிம்பமாய் செல்லும் கௌதமனை நோக்கி வாசலைத் தாண்டி வீதிக்கு ஓடியவள் கல்லானாள்.
இது அன்று நடந்தது
இனி இன்று நடப்பது
தொடர்கிறது.

அந்த கானகத்து வீதி வழியே மூவரின் வருகை. ஆளரவம் அற்றிருந்த அந்த பிரதேசம் ஒரு புதிய வரவுக்கு கட்டியம் கூறியது. காலடிச்சத்தம் எதிரொலிக்க எதிரொலிக்க அந்தப் பாறையின் நரம்புக்குள் உயிர் துடித்தது.

தன் தந்தை சொல்லை சிரமேற்கொண்டு வனவாசம் சென்றிருந்த மிதிலையின் மைந்தன், கோசலையின் புதல்வன் ஸ்ரீ இராமபிரான் தன் ரிஷிபத்தினியுடனும் தன் தம்பி இலக்குமணனுடனும் அப்பாதை வழியே வந்தார்.

பாறை மேல் பட்டது ராமரது பாததுாளி, உடனே வெட்டி எழுந்தது அகலிகை எனும் மின்னல் ஊசி, பாதங்கள் பட்டதா? இல்லை படவைக்கப்பட்டதா? இது விதி. ராமனின் கால்பட்டு அகலிகை மீண்டும் பெண்ணாக வேண்டும் என்பது விதி. எல்லாமே விதிப்படியே நடந்தது.

தனக்கு விமோசனம் தந்த பாதக்கமலங்களில் விழுந்து வணங்கினாள் அகலிகை. 'அம்மா' என்றழைத்தான் ராமன். உள்ளம் அறியாது உடல் செய்த குற்றம் குற்றமல்ல என்று நம்பியராமன் அவளை 'அம்மா' என்றழைத்து உலகுக்குக் காட்டினான்.

காலம் மனிதனை மாற்றுகிறது. ஆம், தான் கொடுத்த சாபம் தன்னையே சபித்ததை உணர்ந்தான் கௌதமன். தனிமை அவனை வாட்டியது. பூஜை புனஸ்காரம் முதல் ஆகாரம் செய்வது வரை பார்த்துப் பார்த்துச் செய்வாளே அகலிகை இப்போ அவளில்லாத் தனிமை அது மிகப்பெரும் கொடுமை. தன்நிலை உணர்ந்தான் கௌதமன். காலம் கனிவது அவனுக்குத் தெரிந்தது முக்காலமும் உணர்ந்த முனிவனல்லவா அவன்.

கௌதமன் மீண்டும் அங்கு வந்தான். வந்தவன் கண்டான் ராமனின் காலில் விழுந்து எழும் தன் பத்தினியை. அகலிகையை ராமன் 'அம்மா' என்றழைத்தது கௌதமனின் காதிலும் விழுந்தது. பக்கத்தில் நிற்கும் சீதையைப் பார்க்க அவனுக்கு பாவமாய் இருந்தது. பூமி விழுங்கப் போகும் பெண்ணல்லவா அவள். தன் பத்தினியின் சாபம் போக்கிய ராமன் தன் மனைவிக்குச் செய்யப் போகும் கொடுமை அக்கினிப் பிரவேசம், என்பது அவன் கண்களில் தெரிந்தது. சிரித்துக் கொண்டான்: தான் கல்லாக்கியது மட்டுமே. ஆனால் ராமன் காட்டுக்குள் அலையவிடப்போகிறான் தன் பத்தினியை என்பதை சொல்ல முடியுமா? அகலிகையைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது.

என்ன இருந்தாலும் தனது ரிஷி பத்தினியல்லவா?

இந்திரன் செய்த தவறுக்கு அவளைத் தண்டித்தது என்ன நியாயம்? இந்திரனை அல்லவா தண்டித்திருக்க வேண்டும்? அவன் இப்போதும் எத்தனை அகலிகைகளின் வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருப்பானோ?

ஆனால் அவன் ஆண் மகன்.

'அகலிகை'
கௌதம முனிவர் மெல்ல அழைத்தார்.

ராமனும், சீதையும், இலக்குமனும் போகும் பாதையைப் பார்த்துக் கொண்டிருந்த அகலிகை திரும்பிப் பார்த்தாள். நீண்ட நெடுநாட்களுக்குப்பின் தன் கணவனின் அழைப்பு.

"அகலிகை உனக்கு ஒரு வரம் தருகிறேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள்... இவ்வளவு காலமும் என் சாபத்தால் நீ கல்லாகிப்பட்ட துன்பம் போதும்"... அன்போடு சொன்னார் கௌதமர்.

அவர் அருகில் வந்து அவரது பாதங்களில் விழுந்து வணங்கியவள், எழுந்து பார்த்தாள். பழைய ஞாபகங்கள் வந்தன. அவள் வாயசைத்து தனக்கான வரத்தைக் கேட்டாள்.

'நாதா... நீங்கள் ஒரு முறை இந்திரன் வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்..'

அந்த கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே இப்போது இரண்டு கற்கள் கிடந்தன....

**- 2002 -**



# இறக்கை விரிக்கும் மரம்

திசேரா

அது ஒரு மரம். பெரிதாக அடர்ந்திருந்த மரம். புத்தனும் பிள்ளையாரும் குந்தியிருந்து ஞானம் பெறவும், பெண் பார்க்கவும் மறந்துபோன மரங்களில் இதுவுமொன்று. அவர்களைக் குந்தவைக்க யாருக்கும் தோணாமல் போனதுதான் அதிசயமாகவும் இருந்தது.

வேதாளங்கள் தலைகீழாகத் தொங்கிக் கீச்சிடும் இரவுகளில், கேட்டல் புலனுக்கு அப்பாற்பட்ட ஒலியை எழுப்பிப் பறந்தும் திரிந்தன. இவைகளைக்கூட சுட்டுத் தின்னவெனவும் ஒரு கூட்டம்.

இந்த மரம் அப்பாவித்தனத்தினதும், பயங்கரத்தினதும் குறியீடாகவும் இருந்தது. இதில் குடியிருந்த காக்கைகளையும், ஊர்ந்து திரிந்த எறும்புகளையும், பொந்துகளுக்குள் கிடந்த பாம்புகளையும் எண்ண முடியாது. பருவ மாற்ற காலங்களில் வந்து தங்கிக் கிடக்கும் கொக்குகளும், சிவப்பு வெள்ளையிலான பறவைகளும் ஏராளம். என்னதான் அடைக்கலம் கொடுத்தாலும், இந்தமரம் பயங்கரமாய்த்தான் இருந்தது. முன்னமொரு காலப்பகுதியில் காக்கை எச்சங்களுக்கு மட்டும் பயந்து நிழலாறிய இடம். இந்நிழலே வெயிலேற்றத்தில் பரந்து எல்லோரையும் கவ்விப் பிடிப்பததாக ஓடி மறைந்தார்கள்.

இதற்குப் பல பெயர்கள் இடப்பட்டிருந்தாலும் இது அரச மரம்தான் என அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனாலும் அதைப் பேய்மரம் தூக்குமரம் எனவே அறிந்து கொண்டேன்.

காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்த வெள்ளிக்கிழமை இரவொன்றில் பேயாட்டம் ஆடி ஆணிவேரையும் பிடுங்கிக் கொண்டு துரத்தி வந்தது. அதைவிட தலைதெறித்துப் போக நானும், அண்ணனும் ஓடிவந்து விட்டோம். அன்றிலிருந்து இரண்டு தினங்களாகக் காய்ச்சல் பிடித்திருந்தது. அன்றைய தினம் முதல் அந்தப் பாதையைத் தவிர்க்க வேண்டுமென எண்ணினாலும் அது முடியாததாகவே இருந்தது. அம்மரம் அருகாமையிலும் பெரியம்மாவின் வீட்டு ஒழுங்கைக்கு முன்னாலும் இருந்தது.

இன்னுமொருமுறை தலையில் பாதிப்பந்தளவில் இருந்த கட்டை ஆஸ்பத்திரியில் வெட்டிவிட்டு வரும் போது அந்த மரத்துக்குக் கீழ்ப்போக நேர்ந்தது. ஏற்கனவே கட்டு வெட்ட வைத்திருந்த கத்தியாய்ப் பார்த்துப் பயந்து கத்தத்தொடங்கியிருந்ததால், வெட்டி முடிந்த பின்னரும் அந்த அழுகையும் பயமும் தொடர்ந்திருந்தது. மரத்தைக் கண்ட பின்னர் அழுகை இல்லாவிட்டாலும் பயம் இருந்தது. என் அழுகையைத் தணிக்க, அப்பா பலூன் வாங்கித் தருகிறேன் என்றார். வேண்டாமென்று தூக்கி வைத்திருந்த அம்மாவினது கழுத்தை இறுகப்பற்றிக் கதறினேன். பரவாயில்லை வாங்கித் தருகிறேன் என மரத்துக்குக்கீழ் நின்ற வண்டிக்காரனிடம் வாங்கித் தந்தார். தரும்போது பயமாக இருந்தாலும் பலூனின் மீதிருந்த ஆசையினால் வாங்கி வைத்துக் கொண்டேன். அண்ணன், அக்கா எல்லோரும் கேட்டாலும் கொடுக்கக்கூடிய மனப்பாங்கு வளராமையினால், அப்பாவிடம் சொல்லி ஊதி நான் மட்டுமே விளையாடினேன். தட்டித்தட்டியும், விரலை அமத்தி அமத்தியும் விளையாடிக் கொண்டிருக்கும் போதே தூங்கியும் போவேன்.

இரவு மிகவும் கோர இருளுடன் கூடிய நடு இரவு. வேட்டைப்பல் முறைத்த வெள்ளை முயல்கள் ஆடிக்கொண்டும் தாவிக் கொண்டும் திரிந்தன. என்னைக் கடிக்க வாயையும் திறந்தது. பயம் உச்சிக்கேறியது.

கத்தினேன் வீரிட்டுக் கத்தினேன். அப்போதுதான் ரெத்தம் வடியும் பற்களுடன் அவை அங்குதான் நின்றன. எனது வீரிடலில் அப்பாவும் அம்மாவும் எழுந்தனர். பயம் குறைந்தாலும் வேட்டைப் பல்லுடன் ரெத்தம் வடியும் வெள்ளைநிற முயலைக் காட்டிக் கத்தினேன். அம்மா குப்பி லாம்பைப் பத்தவைக்க அப்பா என்னவெனக் கேட்டார். கையினால் சுட்டிக் காட்டும் வேளை முயல்கள் அங்கில்லை. ஊதி விளையாடிக் கொண்டிருந்த பலூன்கள் தான் கிடந்தன. பயந்துவிட்டதனால் விபூதி பூசிப்படுக்க வைத்தார்கள். அன்றுடன் போன ஆசை இன்றுவரை பலூன் மீது வந்ததில்லை.

இது மாதிரியாகப் பல இரவுகள் இந்த மரம் எனைக் குலுக்கி, தூக்கி பந்தாடித் தூக்கத்தைக் கொண்டு போனது.

இதற்கு அபூர்வ சக்தி இருக்கின்றதென எண்ணுகின்றேன்.

சுற்றுப் பருமனில் குறைந்தாலும் இதைப் போலவே அந்த மரமும் இருந்திருக்க வேண்டும். ஆனாலும் அவற்றின் வயதுகளைக் கணக்கிட்டுச் சொல்லக்கூடிய வயது எனக்கில்லாதது முதல் பிரச்சினை. இருப்பினும் அரச மரத்துடன் ஒப்பிடுகையில் அந்த மாமரத்துக்கு சக்தி இல்லையெனவே கூறவேண்டும். குறிப்பிடப்பட்ட அந்த மாமரம் எங்கள் வீட்டு மூலையில்தான் இருந்தது. நான் இப்படி ஒப்பிட்டுக்கூறக் காரணமும் இருந்தது.

புயல் வருமாம் என அப்பா சொல்லும்போதே ஆறு மணியளவில் வாசலுக்கு முன்பிருந்த நிழல் மரவெள்ளி சாய்ந்து போனது. எவ்வளவு முயன்றும் எப்போதுமே ஏறமுடியாதிருந்த நிழல் மரவள்ளியின் உச்சிவரை பயணிக்க முடிவதையிட்டு சந்தோசித்தேன். இதன் காய்களைக் குண்டு விளையாடவெனப் பவுடர் டின்னுக்குள் ஆய்ந்து சேகரித்துக் கொண்டிருந்தேன். மழைத்துளி பாரமாக மண்ணுள் பாய்ந்து கொண்டிருந்தது. காற்று துரத்தி வந்ததாலேயேதான் மழை சுறுசுறுப்பாய் மண்ணுள் இறங்கிக் கொண்டிருந்தது. என்னுள்ளும்கூட ஊசியாய் இறங்கியது. அப்பா கூப்பிட்டுச் சத்தமில்லாமல் இருக்கச் சொன்னார்.

நேரத்துடன் சாப்பிட்டுப் படுக்கும்படி அம்மா குசினிக்குள் இருந்து கத்தினாள்.

அம்மா மடிக்குள் படுத்திருந்த எனக்கு மாமா தூக்கும்போது விழிப்பு வந்தது. எங்கள் வீட்டைவிட்டு இன்னுமொரு வீட்டுக்கு ஓடிப்போனோம். ஓடும்போது அக்கா ஆ... எனக் கத்தினாள். கையில் எதுவோ கிழித்து காயத்திலிருந்து ரெத்தம் வடிந்தது. இன்னுமொரு முறை விழிப்பு வந்தபோது அப்பா, மாமா இன்னுமிருவருமாக சீற்றைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். முன்னம் ஓடிய வீடு இல்லை இது. அது குடிசை இது கல் வீடு. இப்படியே அந்த இரவு விழிப்பதும் உறங்குவதாய்ப் போனது.

காலையில் பெரிய அண்ணன் இரவு நடந்த கதையெல்லாம் சொன்னான். அதுதான் சூறாவளி எனவும் அதற்குப் புயலென கூறுவதுமுண்டு. புயல் கோரமானது, எல்லாவற்றையும் வீழ்த்தக்கூடிய சக்தி உள்ளதெனவும் சொன்னான். இதனால்தான் நமது வீடு தரைமட்டமாகிப்போனது என்றான்.

வளவின் மூலையிலிருந்த மாமரம் புடுங்கப்பட்டு கீழே கிடந்தது. அது சும்மா கீழே விழுந்து கிடக்க வில்லை. கீழே சாய்ந்து ஆணிவேர் மையத்தைச் சுற்றி சுழன்று பின்னர்தான் இப்படிக் கிடக்கின்றது. அதற்கான அடையாளங்கள்தான் பக்கத்திலிருந்த சின்னமரங்கள் முறிபட்டும், சுழன்று அடையாளம் மண்ணில் தெரிந்ததும் என அக்கா அழகாய் சொல்லிக் காட்டிக்கொண்டே அவளோடு மாங்காயை எடுத்துக் கொண்டு எனக்கொன்றையும் துடைத்துத் தந்து யாருக்கும் தெரியாமல் உண்ணுமாறு பணித்தாள்.

பெரும்பாலும் எல்லா மரங்களும் வீழ்ந்துதான் கிடந்தன. ஆனால், இந்த அரசமரம் மட்டும் ஒரு கிளையை முறித்து விட்டுக் கம்பீரமாய் நின்றது. அதுகூட சிறிய கிளைதான். மேல் கிளை இடுக்குள் ஒரு குழந்தையை வைத்திருந்தது. அக்குழந்தைக்கு உனையொத்த வயது என்றாள் அம்மா. குழந்தைக்குள் மழைத்துளி நுழைந்து மஞ்சள் கலராய் மாற்றி உப்பச்செய்து இருந்தது.

இடம்பெயர முடியாத இதனால் எப்படிக் குழந்தையை எடுத்துவர முடிந்தது. சிலவேளை கீழே போய்க்கொண்டிருக்கும்போது பறித்து விட்டதோ.

இனிமேல் இதன் கீழால் எனைக்கொண்டு வரவேண்டாமென்று அம்மாவிடமும் எல்லோரிடமும் சொல்ல வேண்டும். கொண்டுவர நேர்ந்தால் இறுக்கிப் பிடித்திருக்கும்படி கூறியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் எனதுயிருக்கு உத்தரவாதமளிக்க முடியாது.

இது நிறையப்பேரைத் தின்று மழையைக் குடித்துவிட்டுத்தான் இப்படி படுத்துக்கிடக்கின்றது. இதற்காகவேனும் இது கிளைபரப்பி வளர்ந்திருக்கின்றது. இதற்கு அபூர்வ சக்தி இருக்கின்றது. இல்லாவிட்டால் எல்லாமரமும் வீழ்ந்து கிடக்க இதனால்மட்டும் எப்படி நிமிர்ந்து நின்று ஜீவிக்க முடியும். எனக்குத் தெரிந்த சகல அறிவுகளுக்கும் எட்டிய வரையில் பருத்த உருவம் அரச மரந்தான்.

மனிதர்களில் கறுப்பாய், வெள்ளையாய் பலர் உலாவிக் கொண்டு திரிந்தார்கள். அப்படியான உருவமொன்றுதான் அதில் கட்டப்பட்டுக் கிடந்தது. மரத்தையும் அந்த உருவத்தையும் சேர்த்துக் கட்ட ஐந்தாறு முடிச்சு கயிறு தேவைப்பட்டிருக்க வேண்டும். சின்னண்ணன் அறிமுகப்படுத்தினான் இது தவராசா மாமா என்று. என்னை அண்ணன் தூக்கி வைத்திருந்ததுபோல குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டும், யாரையும் தூக்கி வைத்திராமல் தனியே நின்று பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த மரத்தைப் புரிய முடியாமலேயே இருந்தது. அவரை எப்படி இழுத்து வந்து கட்டிக் கொண்டிருக்கின்றது. ஏன் அவரை அதற்காகக் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். தன்னைவிட அவர் பருத்து விடுவாரென்ற பொறாமையாக இருக்குமோ?

சுற்றி நிற்பவர்கள் பார்த்துக் கொண்டு மட்டும் இராமல் பல பல அபிப்பிராயங்களையும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள்

கதைப்பது பற்றி சரியான விளக்கம் கிடைக்காவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சம் விளங்கியது.

"துரோகி........................"
"..... இருபத்தையாயிரம்....."
"............ வெட்டி............"

இந்த திடீர் திடீர் சொற்கள் எந்தவித அறிவையும் தராவிட்டாலும் இதைத் தொகுத்து அறிய வேண்டிய நிலைக்குள் இருந்தேன். இந்தப்பெரு மனிதர் இருபத்தையாயிரம் ரூபாய்க்கு இம்மரத்தை வெட்டிவிடத் தீர்மானித்திருக்கலாம். இதனால் கோபமுற்ற மரம் இவரைத் துரோகியாக்கிக் கொண்டிருக்கிறது போலும். இதை வெட்டிப்போட வேண்டுமென என்னுள் துளிர் விட்டுக் கொண்டிருந்த எண்ணம் இவரையும் ஆக்கிரமித்து இருக்கிறது.

என்னுள் சுருண்டிருந்த வெறுப்பு இருவரையும் தொடக்காரணம், சிலவேளைகளில் அந்தப்புயலன்று இது தூக்கி வைத்திருந்த பிள்ளை இவருக்குரியதானதாக இருக்குமோ அதற்காகக் கோபத்தில் மரத்தை வெட்டி இல்லாதாக்க நினைப்பது நியாயம்தான். ஆனாலும் இதனிடம் இவர் எப்படி மாட்டிக் கொண்டாரெனத் தெரியவில்லை. அடுத்து என்னைக் கொல்லத் தீர்மானம் எடுத்திருக்கின்றதோ தெரியவில்லை. எனைவிடவும் அதை வெட்டிவிட வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் வியாபித்திருக்காது.

நான் சின்னவனாக இருப்பதனால் அதுக்கு கொல்லுதல் இலகுவாயிருக்கும். சிறியதொரு கிளையால் ஒரு அடி அடித்தோ, கவர்துண்டொன்றை கழுத்துக்குள் வைத்தோ சிறிய அழுத்தமொன்றால் கொன்று போட முடியும். நான் இப்படி நினைத்துக் கொண்டாலும் எப்படி என்னைக் கொல்வதென்று அது தீர்மானம் எடுத்திருக்கின்றதோ தெரியவில்லை. அதை நினைக்க சரியான பயமாய் இருந்தது.

இந்த நினைப்புகளில் தலைகுழம்பிப்போய் இருக்கும் போதுதான் இடமாற்றமொன்றின் காரணமாக வேறு ஊருக்கு அப்பா எங்களை

அழைத்து வந்தார். அது சந்தோஷத்தை அளித்தது. அந்த மரத்தினால் இடம்பெயர முடியாமையினால் இங்குவருவது சாத்தியமில்லை என்பது சந்தோஷத்தை வர்க்கமாக்கியது.

அதிலும் இந்த ஊர் என்றுமே என் கனவுக்குள் அகப்படாத இடமாக இருந்தது. ஆண், பெண், குழந்தைகள் என எல்லோருமே சுருட்டுக் குடிக்கப் பழகி இருந்தார்கள். அதிலும் காலை வேளைகளில் மண்டான் சுருட்டு எனப்பட்ட மிகப்பெரிய சுருட்டைப் பாவிக்கப் பழகியிருக்க வேண்டும். நிறையப் புகைகளை ஊதித் தள்ளினார்கள். ஆனால் அப்பா சொன்னார் நீ, புகையை வைத்துக் கொண்டு சுருட்டுத்தான் குடிக்கின்றார்கள் எனத்தீர்மானம் எடுத்தது பிழை என்றார். இது குளிரினால் வரும் ஆவி. நீயும் ஊதிப்பார் உனது வாயிலிருந்தும் புகை எனக்கூறிய ஆவி வரும் என்றார். இப்படியாக இந்த ஊர் நிறையக் கற்றுத் தந்தாலும் குளிரைக்காட்டி நடுங்க வைத்துக் கொண்டிருந்தது.

இப்படியாக குளிரில் மட்டும் நடுங்கிக் கொண்டிருந்த எனக்கு பயமும் நடுங்க ஆரம்பித்தது. மறந்து போக நினைத்துக் கொண்டிருந்த அந்த அரச மரத்தை நகரின் அண்டிய பகுதியில் காணப்பட்ட கறுப்பந்தேயிலை எனப்பட்ட யூகலிப்பிரஸ் மரங்கள் ஞாபகமூட்டின. அந்த மரமளவுக்கு தடித்திரா விட்டாலும் ஓங்கி வளர்ந்த இவை பயமுறுத்தின. அந்தப் பயத்தைக்கூட இவை நேரடியாக ஊட்ட வில்லை. அரச மரத்தை ஞாபகமூட்டியே பயத்தை ஊட்டின. சாதுவானதாக கரடுமுரடற்று அழகாய் நீண்டிருந்தாலும் காணும் போதெல்லாம் பழைய நினைப்புகள் எல்லாம் கண்முன் திரையிட்டது. தவராசா மாமா, மஞ்சள் குழந்தை, புயல், எனைப் பிடிக்கக் கிளைகளை நீட்டுவது, வேட்டைப்பல் முயல் எல்லாம் முப்பரிமாணமாகவே தெரிந்ததால் பயம் கூடியது. இதற்குப் பயந்தே பஸ்சில் போக அப்பாவிடம் காசு கேட்டேன். பஸ்சினுள் இருக்கும்போது எப்படியும் இதைக் காணக்கிடைக்காது அல்லது பார்க்க வேண்டியிராது என்பதனாலேயே பஸ்சில் போக நினைத்தேன். சில வேளைகளில் பாடசாலை விடும் வேளையில் பஸ் இராது. எங்களுக்குப் பதினொன்றுக்குத் தொடங்கி நாலரைக்குத்தான் முடியும். மாலை

வேளையாகுவதாலும், இருள் நேரத்துடனேயே கவிழ்ந்து கொள்வதனாலும் இந்தப் பிரச்சினை அடிக்கடி இருந்தது.

நடந்துவரும் வேளையில் அப்பகுதியை நெருங்கும்போது பயம் போக்க என்ன பாடல் பாடினாலும் பயம் மூளையில் குந்தி இருந்து உலுக்கும். இப்படியாக ஒரு நாள் வரும்போது அம்மரப்பகுதியில் இருபாம்புகள் பிணைந்து கொண்டு நின்றன. இதே மாதிரியே அந்த அரச மரத்துக்கு சற்றுத்தள்ளி இருந்த எண்ணம் பாலைக்கருகில் சாரையும், நாகமும் வாலில் நின்றுகொண்டு பிணைந்ததை நானும், அக்காவும் கண்டு பாடசாலை செல்லப் பயந்து திரும்பி ஓடி இருக்கிறோம். இதைப் பார்த்தபோது எண்ணம் பாலையில் இருக்கும் வெள்ளை நிறப்பூவின் மணம் மூக்கைத் தாக்கியது. அன்று மட்டுமன்றி அதன் பின்னாட்கள் ஒவ்வொன்றிலும் அந்தப் பூவின் மணம் வீசியது. பலராய் நடந்து கொண்டிருக்கும் போதுகூட எனக்கு மட்டுமே அந்த மணம் அடிக்கின்றது. அந்த மணம்கூட புலக்காட்சியில் எண்ணம் பாலையையும் அந்தச் சூழலையும் விகாரமாய் அரச மரத்தையும் காட்டியது.

அக்கொலை மரம் தொடர்பான எண்ணங்கள் இப்போது அதிகமாகவே வந்தன. அது எப்படியும் என்னைக் கொன்று விடுமென்ற பயம் தலைதூக்கிக் கொண்டிருந்தது. எப்படியும் சாகத்தானே வேண்டும். எப்போவாக இருந்தாலென்ன எனச்சாந்தப்படுத்தினாலும் பயம் நடுங்கிக் கொண்டுதான் இருந்தது. வரவர இந்த நினைப்பு வலுப்பட்டதே தவிர குறையவில்லை.

ஒருநாள் அக்கா, அண்ணன், நான் எனவும் நாங்கள் இருந்த வீட்டுப் பிள்ளைகளுமாக கொய்யா மரத்தில் காய் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். எனக்குக் கிடைத்தது பெரிய காயாக இருந்ததால் அதைக்கடிக்க வாய் போதைமையினால் வெட்டி உண்ண வேண்டியவனாக இருந்தேன். எனைவிடவும் இளையவனான வீட்டுக்காரப் பையன் மேசைக் கத்தியால் துண்டு துண்டாக்கி உண்டான். எனக்குக் கத்தி கிடைக்கவில்லை. அக்காவிடம் கேட்டபோது புதிதாக வாங்கி இருந்த முனைப்பக்கம் வளைவாக இருக்கும் கோப்பிக் கத்தியைத்

தந்தாள். கையில் வாங்கும் போதே அது பாரமாக இருந்தது. கத்தியைக் காலில் வைத்து அழுத்தக்கூடிய பலம் என்னிடம் இருக்கவில்லை. சற்றுததூக்கி ஓங்கி வெட்டும் போது கத்தியானது இடது கை பெருவிரலின் ஓரத்தில்பட்டு நகத்தின் ஒரு பகுதியை துண்டாக்கியது. ரெத்தம் கீழே ஒழுகிக்கொண்டு காயை, நிலத்தை, சேட்டை சிவப்பாக்கியது. மற்றைய எல்லோருமாய் சேர்ந்து துடைத்ததுடன் கையில் துணியையும் சுற்றிக் கட்டினார்கள். இந்தச் செய்கைகளிலே அக்காவே பெரும் பங்கெடுத்தார். கத்தியை எடுத்துத் தந்த குற்ற உணர்வாக, அப்பா ஏசுவார் என்ற பயமாக, என்மேலிருந்த பாசமாகக்கூட இருந்திருக்கலாம். எனது கோபமெல்லாம் கத்திமேல்தான் இருந்தது. புடி பெரிதாக இருந்ததால்தான் என்னால் சரியாகப் பிடிக்க முடியாமல் நகம் வெட்டுப்பட்டது. அந்தக்கத்தியை வீட்டைவிட்டு தொலைத்தாக வேண்டும் எனப்பட்டது. அப்பாவிடம் சொன்னபோது "ஆடத் தெரியாதவன் மேட கோணல் எண்டு சொன்னானாம்" எனச்சிரித்தார். இது பற்றி வீட்டுக்கார மாமியிடம் சொல்லியிருந்தார். அடுத்தநாள் தற்செயலாக அங்கு வந்த ஒருவரிடம் இதுபற்றி அப்பா சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தார். இந்த அப்பா இப்படித்தான் எல்லா விடயத்தையும் சொல்லிவிடுவார். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. நான் அவர்களை குறுக்கறுக்கும் போது,

"ஏன் தம்பி கத்தியோட கோபமா?"
எனச் சிரித்ததுடன்

"அது நல்ல புடிங்க சேர் அரச மரத்தில் போட்டது."
என்றதும் எனக்குப் பகீர் என்றிருந்தது. முன்னிருந்த அவர் இருகைகளையும் அகல விரித்து இரு காதுகளை நோக்கி அறைந்தது போலிருந்தது. நான் நின்று கொண்டிருக்க தலை மட்டும் சுற்றியது.

அடுத்தடுத்த நாட்களில் அவரைக் கண்டு என் ஊர் அரச மரத்தின் துண்டுதானே அந்தப்பிடி என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென நினைத்தாலும் அது முடியாது போனது. அவரைக் கண்டு கொள்வதென்பது பெருஞ்சிரமமாகவே இருந்தது.

அந்த அரசமரத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமெனப்பட்டது. அது இருக்கிறதா? இல்லையா? அதன் பின்னர் யாரையாவது கொன்றிருக்கின்றதாவென அது பற்றியறிய நாவூறிக் கொண்டிருந்த வேளையில்தான் பெரியம்மாவின் மகன் எனக்கு அண்ணன் முறையானவனை வாகனம் அடித்துக் கொன்றுவிட்டதாகக் கிடைத்த தந்தியை அடுத்து ஊர் சென்றோம்.

இரவோடிரவாக மலையை விட்டிறங்கி சமவெளிப் பிரதேசத்தில் ஓடிக்கொண்டிருந்தோம்.
நிறைய நிறையவே மாறிப்போயிருந்தது ஊர். பாலைவனப் பிரதேசம் போல காய்ந்திருந்தது. வெயில் தோலைச் சுட்டுப் பொசுக்கி விடுமாப் போல இருந்தது. ரெத்தங் கொதித்துக் கொளகொளவென வயிற்றுள் சத்தஞ் செய்தது.

நகரில் இறங்கி ஊர்ப்பக்கம் செல்லும் சிறிய வேனில் சென்று கொண்டிருக்கும் போது, வாவியைக் கடக்கவென அமைக்கப்பட்டிருந்த கறுப்புப் பாலம் பிரமாண்டமாக இருந்தது. அதன்கீழாக சொறிமுட்டைகள் மிதந்து கொண்டிருந்த வாவியில் நிறையத் தோணிகள் நின்றிருந்தது. ஒவ்வொரு தோணியிலும் இருவர் இருவராக இருந்தார்கள். ஒருவர் வலை வீச மற்றவர் துடுப்பினால் வலித்துக் கொண்டிருந்தார். அந்தச் சொறிமுட்டைகள் அழகாய் அசைந்து கொண்டிருந்தன. குடைபோல 'டேல்' பகுதியும், சடைமுளைகளைப் போல கீழ்ப்பகுதியில் நீட்டிக் கொண்டிருந்த பகுதிகளை அசைத்தே நகர்ந்தது. அது உடலில் பட்டால் அரிப்பெடுக்கும். அப்படியான திரவம் ஒன்று அதில் இருந்தது. அதனால்தான் அது சொறிமுட்டையென வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்பாலத்தினூடு முன்னர் பல தடவைகள் பயணித்திருப்பினும் நீண்டகால இடைவெளியின் பின்னர் செல்வது புதிய பிரதேசமொன்றில் பயணித்துக் கொண்டிருப்பது போலவே இருந்தது.

ஆஸ்பத்திரிக்கு முன்னர் வேன் நின்றதும் அப்பா இறங்கச் சொன்னார். நான் மறந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அரசமரத்தைத் தேடிக் கண்கள் தானாகவே திரும்பியது. கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்த

போதுதான் அந்த இடம் வெட்ட வெளியாய்த் தென்பட்டது. எங்கிருந்தென அறியமுடியாத சந்தோசமொன்று என்னுள் இறங்கியதா, பொசிப்பற்றுக் கிடந்தது எழுந்து கொண்டதாவெனத் தெரியாவிட்டாலும் ஒரு மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"அப்பா அரச மரத்த வெட்டித்தாங்க" கைகளைத் தட்டி முழங்காலை மடக்கி உடலைப் பின்னுக்காக்கி நான் சத்தம் போட்டபோது "அதுக்கென்ன சத்தம் போடாம வா, அங்க எல்லோரும் பாத்துத்து இருக்காங்க"

பெரியம்மாவின் ஒழுங்கைக்குள்ளால் நடந்தோம். என்னிடம் எனது உடுப்புக்கள் வைக்கப்பட்டிருந்த சிறிய பேக் மட்டும் இருந்தது. தனித்தனியாக அவரவர் உடுப்புக்களை எடுக்கவும் தனித்தனியே அவரவர் வேலைகளைச் செய்யவுமென அப்பா பழக்கி இருக்கிறார். பேரியம்மா வீட்டுக் கேற்றுக்கு அருகில் நிறையப்பேர் கூட்டமாய் இருந்தார்கள். எல்லார் முகங்களிலும் சோகம் தெரிந்தது. அப்பா, அக்கா, அண்ணா எல்லார் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தேன். அவர்கள் முகங்களும் சோகத்தில் தான் இருந்தது. அண்ணனின் கண்கள் கலங்கி இருந்தது. அவனின் வயதுதானே செத்துப் போன அண்ணனுக்கும். என் முகத்தைப் பார்க்க கண்ணாடி இல்லை. ஆனாலும் சந்தோசமாகத்தான் இருக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அரச மரத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்கின்றேன்.

"ஐயோ அத்தான் புள்ளயப் பறிகொடுத்த பாவியாயித்தனே" பெரியம்மாவின் சத்தம் கேட்டபோதுதான் பார்த்தேன் வாசலுக்கருகில் வந்துவிட்டோம். ஆனால் நான் அரச மரத்தடியிலேதான். பெரியம்மா அப்பாவைப் பார்த்துத்தான் கத்தினாள். அந்த சத்தத்தில் தான் நானும் இங்கு முளைத்தேன்.

பிரபா அண்ணனை தலையில் கெல்மெட் போட்டதுபோல வெள்ளைத் துணியால் கட்டியிருந்தார்கள். புயலில் ஒடிந்து, வீழ்ந்திருந்த அரசமரக்கிளையை இவர்தான் வீட்டுக்கு இழுந்து வந்தவர்.

"கொள்ளிக்குத் தேவதானே நல்லா எரியும்" என்றார்.
இழுத்துக் கொண்டு போவதில் எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் அதை எரிப்பதில் சரியான சந்தோசமாக இருந்தது. அந்த சந்தோசம் இப்போது மேலோங்கி இருந்தது.

பெரியம்மா அருகில் வரும்படி அழைத்தாள்.
"பிரபா மகனே பாருடா தம்பிய, எப்படி வளர்ந்திருக்கிறான், கண்ண முழிச்சிப் பாருடா" என்றவள் என்னை மடியில் அமர்த்திக் கொண்டு,

"உண்ட அண்ணன் போய்த்தானே. நீ பெரியாளா வந்ததப் பாக்கமே போய்த்தானே.... எமன் பஸ்சில வந்தல்லோ கொண்டு போனான். அரிசி வாங்கிவாறெண்ட மகன். அநியாயமாய்ப் போய்த்தானே" என கதைகளைச் சொல்லி சொல்லியே ஒப்பாரி வைத்தாள். என் நினைவுகள் எல்லாம் அரச மரத்திலேயே ஒட்டி இருந்தது.

மெல்ல எழுந்து வெளியே வரும் போது நிறையக் கண்கள் எனைப் பார்த்தன. அவற்றில் சில சோடிகளைத் தவிர பலவற்றை எனக்குத் தெரியும்.

வெளியில் அப்பா யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தார். யாரெனச் சரியாகக் கூறமுடியாவிட்டாலும், பழைய காலமதில் கண்டிருக்க வேண்டுமெனப்பட்டது. இப்படித்தான் நிறையப் பேர் ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். அண்ணனையும் அக்காவையையும் காணவில்லை. அப்பாக்கருகில் சென்று அமர்ந்து கொண்டேன். ஏதோ பாடசாலை சம்பந்தப்பட்ட கதைதான் கதைத்துக் கொண்டிருந்தார்கள். கதைகளின் இடையில் வந்த விடயம்தான் அவர்கள் கதையுள் எனையும் இழுத்தது.

"ரோட்டெல்லாம் பெரிசாக்கி, மதிலெல்லாம் உள்ள தள்ளி, இந்த அரச மரத்த வெட்டி இப்படியே நெடுக..."
இடையில் குறுக்கிட்டேன்.

"அங்கிள் ரோட்டப் பெரிசாக்கத்தான் அரச மரத்த வெட்டினாங்களா"

இடையில் குறுக்கிட்ட என்னை யார் எனக் கண்ணால் கேட்டார். அப்பா சொன்னார் "இதுதான் கடைசி மகன்" பிறகுதான் அவர் பதில் சொன்னார்.
"ஓம் தம்பி"
"வெட்டினதை என்ன செய்தாங்க"
"அதுல எங்க உள்ளுக்குள்ள பொந்து மாதிரி இருந்தது. காய்ஞ்சிபோன கந்துகளைக் கொத்தி எல்லாரும் கொள்ளிக்குக் கொண்டு போய்த்தாங்க"
"அதப் பலகைக்குப், புடி போடுறதுக்குப் பாவிக்கேலாதா"
"அது அப்படிப் பாவிக்கிற நிலையில இல்லப்பன்"
அப்பா குறுக்கிட்டு

"இவன் இப்படித்தான் நிறையவே குறுக்குக் கேள்வி கேட்பான், அந்தா அண்ணாச்சி நிக்கிறாரு அவரோட போ" என என்னை அனுப்பினார். மொத்தத்தில் மரம் இல்லாமல் போய்த்து. அந்தக் கத்திப்புடி இந்த மரத்தில செய்ததும் இல்ல.

மரம் செத்துப் போன மகிழ்ச்சியில் மரம் இருந்த இடத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தபோது அண்ணன் தோளில் கை போட்டு அழைத்துப் போனான்.

**- 2001 -**



# கொள்ளிவாய்ப் பிசாசுகள்

ஏனா. நவரெத்தினராசா குரூஸ்

கிழக்கப் பக்கம் சாய்ந்திருந்த தென்சிலுவைவெள்ளி நிமிர்ந்து நேராக நின்றது. மணிக்கூடு தேவையில்லை. நேரத்தைக் கேட்டால் அச்சொட்டாக சொல்லுவான் செல்லத்தம்பி. வானத்தோடு அவ்வளவு ஐக்கியம் அவனுக்கு. வானத்தோடு மட்டுமா..? இந்த மண்ணோடும்தான். ஏனென்றால் மண்ணை நம்பி வாழ்கின்றவன் அவன்.

தலையைச் சுற்றிக் கட்டி இருந்த துவாய் ஈரமாகிக் கனத்தது. கழற்றிப் பிழிந்தால் தண்ணீர் சொட்டாக ஒழுகும். அவ்வளவு பனி.

களத்துக்குள் கட்டாகக்கிடந்த சாக்கின் மீது சாய்ந்து கொண்டு கண் உறங்காமல் களத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

உள்ளத்தில் உற்சாகம் இல்லை. மூன்று சூடு அடித்தாகிவிட்டது. நான்காவது சூட்டை இன்றைய இரவில் தள்ளி மூன்று மிதியும் முடித்து வாட்டிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், எங்கே இன்றுகூட அந்த சத்தத்தைக் காணவில்லையே? அதிகம் ஒன்றுமில்லை. எட்டுப் பத்து வருசத்திற்கு முன்புதான், சூட்டைத் தள்ளி ஒரு மிதிமிதித்து வாட்டும் போதே எட்டு வேலைக்காரன் கம்புகளின் நுனியில் வளைந்து இருக்கும் இரும்புப் பகுதிகளும் பொலியில் கிளறுண்டு 'கிர்... கிர்...' என்று எழுப்பும் ஓசை... ஒரு உழவனுக்குக் கொடுக்கும் ஆனந்தம் இருக்கிறதே... சொன்னால் புரியாதுஅனுபவித்துப் பார்க்க வேண்டும். பதர் அற்ற காய்... நல்ல வாரி... எல்லாவற்றிற்கும் கட்டியம் கூறும் அந்த கிர்... கிர்... ஒலி... இப்போது எங்கே மறைந்து போனது?

மூன்று சூடு முடிந்து நான்காவது சூடு தள்ளி மூன்று மிதி முடிந்து வாட்டும் போது கூட... இல்லை... இல்லவே இல்லை. அந்த ஓசை எழவே இல்லை.

செல்லத்தம்பிக்குப் புரிந்து போயிற்று... இந்தச் சூடும் அப்படித்தான். முப்பது மூடைகூட இருக்காது. பாடுதான் அதிகம். பொலிமுழுதும் வாட்டியில் குவித்து மலையாக, பொலிக்கும்பம் சிறுத்துப் போகும். சேல்லத்தம்பியின் இந்த வருடத்தைய தொழிலைப்போல...

என்னதான் செய்யவில்லை? செய்வதெல்லாம் செய்தாகியும் இப்படியே பல வருடங்களாய்... நட்டம்... கடன்... கடன்...

தென்சிலுவைவெள்ளி மேற்குநோக்கிச் சரியத்தொடங்கிவிட்டது. பின் இருட்டுக்காலம்... வட்டையைச் சுற்றி இருள்காடு. களத்தில் மட்டும் ஒரு பெற்றோமக்ஸ் எரிந்து கொண்டிருந்தது.

மெசினை நிறுத்தி... பே'f'னைப்பூட்டி... பொலி தூற்ற ஆயத்த மாகும் போது,

தூரத்தில் வரிசையாக இருபதுக்கு மேற்பட்ட தீப்பந்தங்கள் அசையத் தொடங்கியதை செல்லத்தம்பி அவதானித்தான். அவை கொள்ளிவாய்ப் பிசாசுகள் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ஒளிபுகளம். பிச்சைக்கு

வரும் விதவைகள், பிள்ளைகளின் அணிவகுப்புத்தான் அது என்பது அவனுக்குத் தெரியும்.

இந்த வாரிக்குள்ள... இவங்களுக்குப் பிச்சை வேறு... தீப்பந்தங்கள் தன்னுடைய களத்தை நோக்கியே வருவது நிச்சயமாகிவிட்டது.

என்றுமில்லாத வெறுப்பு அவன் மனதில். கொள்ளிவாய் பிசாசுக் கூட்டம் தன்னை நோக்கிப் படை எடுத்து வருவதுபோல ஒரு பிரமை அவனுக்குள். என்ன நடக்கிறது... இந்த விவசாயத் தொழிலுக்கு? என்று யாருக்குமே புரியவில்லை. என்றுமில்லாதவாறு பெயர்கூடத் தெரியாத நோய்கள். பச்சைப்பசேல் என்று செழித்துவரும் வேளாண்மை நிறம்மாறி சிவந்து கருகும்.

என்னதான் உரம் திரும்பத் திரும்ப எறிந்தாலும் பூமியைவிட்டு ஒரு அடிக்குமேல் வளராது நோஞ்சானாய் வயல் முழுவதும் நிற்கும் பயிர்கள் ஈற்றில் ஐந்து ஆறு நெல்மணிகளோடு கதிரைப்பறிய விட்டு ஏமாற்றிநிற்கும் செப்பூசிப் பயிர்கள்.

இற்றைவரைக்கும் வளர்த்த விவசாயியைப் பழிவாங்குவது போல ஏக்கர் கணக்கில் வெண்கதிரை பரப்பிநிற்கும் நன்றி கெட்ட வேளாண்மைப் பயிர்கள்.

எல்லாம்முடிந்து அறுவடைக்கும் தயாராகும் போது கொத்துக் கொத்தாய் நிற்கும் கதிர்கள் அப்படியே குலையோடு முறிந்து வைக்கோலை மட்டும் வாரியாக்கி ஏமாற்றும் 'கழுத்துக்குத்தி' என்ற கொடுநோய். அப்பாடா எத்தனை நோய்...? பெயர் தெரியாத, காரணம் புரியாத நோய்கள்.

குருட்டாம் போக்கில் கடன்கொடுக்கும் நெல்லுக்கடைக்காரன் தனது வசதிக்கும் இலாபத்திற்குமாக பெயர் சொல்லும் அத்தனை மருந்து வகைகளையும் வாங்கி விசிறி முடிவில் கடனையே தனது அறுவடையாகப் பெறும் இந்த விவசாயிகள் செய்த பாவம்தான் என்ன? என்னதான் நடக்கிறது...?

'பச்சைப்பெருமாள், முருங்கக்காயன், எச்போர்' என்று தன்னுடைய குழந்தைப்பருவத்திலே செல்லத்தம்பியின் தகப்பனார் விதைத்த நெல் வகைகள் இப்படி ஏமாற்றியது இல்லையே... ஏமாற்றியது இல்லையே...

இப்போது இருக்கின்ற இந்த நெல்லுவகைகள் மாத்திரம் ஏன் பதராக மட்டும் காய்க்க வேண்டும்?

மழுங்கடிக்கப்பட்ட விதைகள்...! இதுபற்றி எந்த விவசாயிக்குத் தெரியும்? இனி எப்போதும் இவை விளைச்சலைத் தரமாட்டா என்கின்ற பயங்கர உண்மை எத்தனை விவசாயிக்குத் தெரியும்?

நோய்களுக்கே இலக்காகி... செலவைக் கூட்டி விவசாயியை நட்டப்படுத்தும் இந்த வீரியம் அற்ற விதைகளை இனி விதைக்கக் கூடாது என்பது எத்தனை விவசாயிகளுக்குத் தெரியும்?

நான்கில் ஒரு பங்கு அதிகமாக விலை கொடுத்து வாங்கும் யூரியாவில் நாற்பத்தாறு வீதம் நைதரசன் இருக்கிறதா இல்லையா என்று எத்தனை பேருக்குத் தெரியும்?

யூரியா எறியும் போது நடைபெறுவது அகத்துறிஞ்சலா அல்லது புறப்பிரசாரணமா? ஏன்ற சந்தேகம் எத்தனை பேருக்கு எழுந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக இத்தனைக் கொடுமைகளும் மிகத்துல்லியமாக திட்டமிட்டே செய்யப்படுவதும் தனக்கு எதிரான மற்றும் ஒரு வகையான யுத்தம் என்கிற பயங்கர உண்மை எத்தனை விவசாயிக்குத் தெரியும்? கொள்ளிவாய்ப் பிசாசுகளாய்த் தன்னையே நோக்கி நகர்ந்துவரும் தீப்பந்தங்களைப் பார்த்துக்கொண்டே சாய்ந்து கிடந்தான் செல்லத்தம்பி. கடன்... கடன்... இதைத்தவிர இந்தத்தொழிலில் ஒன்றுமில்லை.

"எங்கட ஆட்களும் வேளாண்மை செய்யவேணும்... ஆயிரக்கணக்கா சொந்த வயலை உட்டுப்போட்டு இஞ்சகிடந்து அவனுகள் நெடுமூச்சி விடக்குள்ள... வட்ட எப்படி விளையும்...? என்று கிண்டலாய்க் கேட்கும்

நெல்லுக்கடைக்கார முதலாளி... இந்த முறையோடு கடன் தரமாட்டன் என்று சொன்னாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

நெல்லின் விலையை நிர்ணயிப்பது யார்? கடன் கொடுத்து கொள்ளை இலாபம் ஈட்டும் வியாபாரிகளைத் தவிர வேறு யார்?

அவர் வைப்பதே விலை.. உற்பத்தி செலவு பற்றி யார் கவலைப் படுவார்கள்? இன்னும் எத்தனை வருடங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியும்..?

மிஞ்சி மிஞ்சிப் போனால்இன்னும் இரண்டோ மூன்றோ வருடங்கள்... அதன் பிறகு தந்தையும் யானும் மட்டுமல்ல பாட்டனும் முப்பாட்டனும் மண்வெட்டியும் கலப்பையும் பிடித்து ஆண்ட இந்த வயற்காடு புரம் வயலாகி புல்லும் காடும் மண்டி...

இந்தப் போரில் நாங்கள் தோற்றுப்போவது நிச்சயம்... பெரு மூச்சோடு சரிந்து படுத்தான் செல்லத்தம்பி. கண்ணுக்கு முன்னே சூட்டுக்களம் தூற்றிக்கொண்டிருந்தார்கள். பொலிக்கும்பம் உயரமுடியாமல் தவித்தது. வாட்டியில்பாடு... பதராகக் குவிந்தது. களம்...? போர்க்களமா...? இல்லை சூட்டுக்களமா..?

ஏழு அல்லது எட்டுப் படங்குத் துண்டுகளை விரித்து... வாட்டி, வைக்கோலால் கரைப்பட்டு பொலியைக் குவித்து, தூற்றுவதற்கு இரண்டு துண்டு படங்கைக் கழற்றி எடுப்பதே பொறுப்பாக இருக்கும். ஏனென்றால் அவ்வளவு பொலி.. படங்குத் தலைப்பை இரண்டுபேர் பிடித்திழுக்க.. மிகுதி ஆறு பேரும் படங்கோடு பொலியை உருண்டி குவித்து முடியவே கோழி கூவும். தூற்றி முடிய நல்லா வெயில் ஏறிப்போகும்.

செட்டி கெடுத்தான் வெள்ளியே இன்னும் வரவில்லை. அதற்குள் தூற்றி முடித்துவிடுவார்கள் போல இருந்தது. விடிவெள்ளி காரிக்க ஊருக்குள் போய்விடலாம்.

அதிகப்படியாக முப்பது மூடை... நெல்லு விற்கிற விலையில.. உழவுக்காசும், வெட்டுக்காசும், சூடு போட்ட காசும்மட்டுமெண்டாலும் குடுக்கயும் ஏலாது... மிச்சச் செலவுக்கு என்ன செய்யிற... ஈடெல்லாம் அறுதியாய்ப் போகும்.

செல்லத்தம்பி யோசித்து யோசித்துப் புரண்டு கொண்டிருந்தான். முப்பது மூடையையும் ஏற்றிக் கொண்டு கடைக்குப் போக வேணும். கடன் தந்தவன் விடமாட்டான்.

போகிற வழியில்... "எத்தன மூடை... முப்பது மூடை... முன்னூறு ரூவாக்கட்டு... பேமிற் காசு.. வரக்குள்ள தாறன்.."

"வரக்குள்ள என்ட கத கதைக்க வேணாம்... காசில்லாட்டி மெசினை சைற்றாக்கி நிப்பாட்டு..."

கெஞ்சிக் கூத்தாடி.. வரும்போது தருவதாக சத்தியம் செய்து... மெசினை எடுத்துக் கொண்டு போய் மூன்று மணித்தியாலம் வெயிலில் கிடந்து மூடைகளை இறக்கி ஏற்றி... மீண்டும் மெசினை நகர்த்தி நாநூறு யார் செல்ல...

"லோட்டுக்கு முந்நூறு... நீங்க அறுபது மூடை ஏற்றினாலும் சரி இருபது மூடை ஏற்றினாலும் சரி... எங்களுக்கு லோட் கணக்குத்தான்.." "வரக்குள்ள தாறன்... "றைவர்... ஐடின்ரியைத் தா... காசத்தந்து போட்டு போகக்குள்ள வாங்கித்துப் போ"

மீண்டும் மெசினை நகர்த்தி வளைவெடுத்து மெயின் ரோட்டில் இரண்டு மைல் ஓடி... நிறுத்த..

"எத்தன மூடை... முப்பது... எங்களுக்கு ரெண்டு பல்ப் வாங்கித் தரவேணும் அந்தக் கடையில இருக்கு... வாங்கிவா"

ஓடிப்போய் வாங்கிவந்து கொடுத்து மெசினில் ஏறி... நகரும் முன்னே அந்த இரண்டு பல்ப்பும் மீண்டும் அதே கடைக்கும் போய்விடும்.

இரண்டு பல்ப்பை வைத்துக் கொண்டு ஒரு நாளைக்குள்.. எவ்வளவு உழைக்கலாம்...? நிச்சயமாக விவசாயத்தைவிட அதிகமாக...

வயலுக்கு வந்தாயா.. நாற்று நட்டாயா... மஞ்சள் அரைத்தாயா.. மடு வெட்டினாயா... யார் இவர்கள்..?

செல்லத்தம்பி சிரித்தான் கண்ணை மூடிக்கொண்டு. அது இயலாமையின் வெளிப்பாடு.

மெசினின் சத்தத்தைத நிறுத்தமட்டும் கண்மூடினான்.. அயர்ந்து போனான். கூட்டம் கூட்டமாய் கொள்ளிவாய்ப்பிசாசுகள்... துரத்த, ஓடுகின்றான்... ஓடுகின்றான்... ஓடமுடியவில்லை. கால்களைத் தூக்கி ஓடமுடியவில்லை.. ஆ... ஓட முடியாது.. திடுக்கிட்டு கண்ணைத் திறந்தான்.

எதிரே.. கூட்டமாய்... கொள்ளி.. இல்லை களப்பிச்சைக்காய் தீப்பந்தங்களோடு வந்த கூட்டம். களத்தை அண்மித்து தரித்து நின்றது மெசின் சத்தம் இல்லை.. எல்லாம் முடிந்துவிட்டது. மூடைகளைப் புரைந்து கொண்டிருந்தார்கள்.

சூடு போட்டவன் தீப்பந்தங்களோடு பேசிக் கொண்டிருந்தான். "வாரி கிடையாது. எவ்வளவு பேருக்கு பிச்சை குடுக்கிற.. நான் நினைக்கவில்லை.. போடியார் தருவார் எண்டு..."
"இஞ்சவா" செல்லத்தம்பி கூப்பிட்டான்.

"ரெண்டாம் பொலியை மூடையில் புடிச்சாச்சா.." "இல்ல போடியார்" "எத்தின கட்டும்" "ரெண்டு மூடை கட்டும்" "சரி அதோட ஒரு மூடையைக் கொட்டி வந்த சனத்திற்குப் பார்த்துக் குடு"
"எத்தின மூடை"

"இருபத்தாறு.. ஒண்டு போனா இருபத்தைந்து.." "சரி, மிச்சச் சாக்குகளையும் எண்ணி ஏத்து.." செல்லத்தம்பி பரம்பரை விவசாயி.

எண்ட நட்டம் என்னோட.. களத்துக்கு வந்த கண்பொஞ்சாதிமாரை சும்மா திருப்பி அனுப்பக் கூடாது.. எல்லாருக்கும் விவசாயியோட கோபம். ஆனால் விவசாயிக்கு யாரோடயும் கோபம் இல்லை. அவனுக்கு எண்டைக்கு கோபம் வருகுதோ அண்டையோட எல்லாலஞ் சரி.. அவனுடைய முணுமுணுப்பும் அவனோடுதான்.

பிச்சையை வாங்கிக் கொண்டு பந்தங்களோடு புறப்பட்டவர்கள் நகர.. நகர தீப்பந்தங்கள் கொள்ளி வாய்ப்பிசாசுக் கூட்டமாக நகர்ந்தது.

வீரியமற்ற விதைகளாக.. புகுத்தப்பட்ட நோய்களாக... புரிந்து கெள்ள முடியாத பசளைகளாக.. இன்னும்... இன்னும்.. எத்தனை கொள்ளி வாய்ப்பிசாசுகள்.

சுற்றிக் கிடக்கும் இருள் பின்னணியில்... ஒவ்வொரு பந்தமாக கொள்ளிவாய்ப்பிசாசுகளாக ஊர்ந்து கொண்டே சிறு சிறு நெருப்புப் புள்ளிகளாகி மறைந்து கொண்டிருக்க...

செல்லத்தம்பி எழுந்து வேட்டியை உதறி மடித்துக் கொண்டு மெசினில் ஏறினார். ஏமாற்றத்தோடு.

தெற்குவானில் சிலுவை வெள்ளி மேற்கில் தலைவைத்துச் சயனிக்க, மெசின் மெதுவாக அந்தவழியில் ஊர்ந்து கொண்டிருந்தது.

**- 2001 -**



# நெஞ்சு பொறுக்குதில்லையே

ஆ. தங்கராசா

வேதனையின் முழு உருவமாக முடங்கிக் கிடந்தாள் அவள். அவளது சிதைந்து போன மனம் பருந்தின் வாயில் அகப்பட்ட கோழிக் குஞ்சாகப் படபடக்கின்றது. ஆயிரம் ஆயிரம் மின்னல்களோடு குமுறி முழங்கி அதிரும் இடிமுழக்கப் பேரதிர்வு அவளது நொந்த மனதிலும் கருக்கொண்டு அவளை ஆட்டிப்படைக்கும் பிரளயஅவஸ்தையை அந்த அபலையால் புரிந்து கொள்ள முடியாதுதான். அவள் யாருமற்ற அநாதை. கைம் பெண்ணாக காலம் முழுவதும் வாழ்ந்த குருட்டுத் தாயோடு அந்தக் "கந்தட்டி" வளவுக்குள் மௌன வாழ்வு வாழ்ந்து வந்த பூபதி, தாயின் அஸ்தமனத்திற்குப் பிறகு தனிக்கட்டையாக வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வாழாவெட்டியாக இருந்த அந்த ஏழைக் குமருக்கு அந்த இருட்டில் "குடில்" எத்தனை காலத்துக்கு பாதுகாப்பு அரணாக இருக்க முடியும.

அவள் மிகவும் கஸ்ரப்பட்டுப் போனாள். வாழ நிலமற்ற அகதிகளின் நாடோடி வாழ்வு பூபதிப் பெண்ணுக்கும் சொந்தமாகிப் போய்விட்டது. கிணற்றடியில் மதமதப்பாக வளர்ந்து நிற்கும் செவ்வாழையின் கதகதப்பான பளபளப்பு – பொலிவான ஆவேச வளர்ச்சி பூபதியின்

உருவோடு நிறைவுகண்டு பார்ப்பவர்களின் கண்களை உறுத்தியது. கூட்டுக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கும் கோழிக் குடும்பம் "கூட்டுக் கதவு" திறந்ததும் தாவித்தாவி பறந்து பறந்து அலைந்து அலைந்து உணவைத் தேடிக்கொள்வது போல பூபதியின் கண்விழித்ததும் பரக்கப்பரக்க அந்த வீடு, இந்தவீடு என்று அலைந்து வீட்டு வேலைகள் செய்து, மா இடித்து, வளவுகளைக் கூட்டி, சட்டிபானை கோப்பைகள் பூசி மினுக்கி.. அவர்கள் கொடுக்கும் பழைய பண்டங்களை அவளது குடிசைக்குக் கொண்டுவந்து அதனை உண்டு வயிறுவளர்த்து... அவளது வேலைகளுக்குக் கொடுக்கும் சொற்பப் பணத்தைக் கொண்டு சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் அரைகுறையாகக் காலம் தள்ளி, உறைந்து போய்க்கிடக்கும் கற்பாறையின் விறைப்பு அவளது உணர்வுக்குள் உணர்வாக நிறைந்து முளைகட்ட.. அவுஸ்ரேலியாவின் "கங்காரு" மிருகம் தனது குட்டியைப் பைக்குள் கொண்டு அலைவது போல்... பூபதியும் தனது நிறைவான துயரங்களை தன்னுள் சுமைதாங்கிக்கொண்டு... நிஷ்ட்டையில் உறையும் துறவியாய் அவள் ஆழக் கவலைக்குள் அமிழ்ந்து போகிறாள்.

அவள்தான் என்ன செய்வாள். பகல் முழுவதும் ஊர் மேய்ந்து... இருட்டுச் சேலையைப் பூமிப் பெண் கட்டிக் கொள்ளும் வேளையில்.. அவள் கூட்டை நோக்கிப் பறந்து உறங்குவதற்குச் செல்லும் பறவை போல் அல்லையலில் வாசம் செய்யும் தெரிந்தவர்களின் வீடுகளில் இராப்பொழுதைக் கழிப்பதற்கு வெட்கமும் கூச்சமும் உந்தித்தள்ள, அவள் போய் வருவது நாளாந்தப் பழக்கமாக இருந்தது. அவள் எப்படித்தனிமையில் அக்குடிசைக்குள் உறங்குவது. காலம், காலமாகவா இருக்கிறது. எல்லோரும் மனித நீதிப்படி வாழ்கிறார்களா? ஒரு சில காவாலி, கடப்பழி வேலிபாஞ்சால் என்ன செய்வது? பருவத்தைப் பருகத் துடிக்கும் ஓநாய்கள் நிறைந்த இந்த மண்ணில்... வெட்கத்தைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு பூபதி ஊராரின் திண்ணையிலே இரவிலே முடங்கிக் கொள்வாள். பயங்கரம் அனுமார் உருவமாக விஸ்வரூபம் எடுத்து உலகையே ஆக்கிரமித்து வைத்திருக்கும் இந்தக் கொடிய காலத்தில் இங்கு என்ன நிம்மதியாக வாழ முடிகின்றதா? வெடிஓசை, குண்டுச்சத்தம், செல்அடி அப்பப்பா! ஒரே போர்க காலச் சிந்தனை

மண்ணிலே நர்த்தனமாட அவள் எப்படி தனிமையில் அந்தக் குடிசையில் வாழமுடியும். அதுதான் அவள், தாகத்தைத் தீர்ப்பதற்கு மிருகங்கள் தண்ணீர்க் கரையை நாடுவது போல், பய உணர்வால் மற்றவர்களின் இல்லங்களை நாடுகிறாள். எந்த நேரமும் "கந்தட்டி" வளவுக்குள் நாய்களின் பயங்கர ஊளைச்சத்தம் காதுகளை கொடிய வாள் கொண்டு அறுக்க.. யார்யாரோ தடதடவென்று ஓடும் சத்தம்.. நடந்து போகும் சத்தம்... ஆற்றுப்பக்கம் ஓயாத வெடிச்சத்தம்... துரியோதனன் சபையில் பாஞ்சாலியின் துகில் ஓயாது வளர்ந்து குவிந்து கொண்டிருந்தது போல் பூபதியின் சர்வாங்கமும் ஓயாது துயரத்துகிலால் நிறைந்து போய்க் கிடந்தது. அவள்பட்ட அவஸ்தை... எங்கும் வெடி ஓசை கேம்புப் பக்கமிருந்து ஷெல்அடி... அடித்த ஷெல் ஒன்று 'கந்தட்டி' வளவுக்குள் விழுந்து நிறை கர்ப்பிணியாய் காய்த்துக் குலுங்கிக் கிடந்த இளம் தென்னைகளைச் சிதிலமாக்கி... அவளுடைய காய்ச்சலும் பறந்து மூச்சம் நின்றுபோகப் பார்த்தது. அதன் பிறகு அவள் அந்தக் குடிசையில் தங்குவதில்லை. கழுகு அலைந்து திரியும் இடத்தில் "வெண்புறா"வுக்கு என்ன வேலை?

இப்படியான இந்த அபலைக்கு என்ன நேர்ந்தது? ஓசை அறுந்த குயிலின் மௌன அமுக்கம் இந்தச் சின்னக் குயிலுக்குள் புகுந்தது எதனால்... அவள்: பூபதி சித்தப்பிரமை அமைந்த நிலைக்குத் தள்ளப்பட்டாள். அவள் இப்பொழுது எதையும் சிந்திக்க முடியாத மௌனச் சாமியாகிவிட்டாள். மாயாசால மந்திர வித்தைக்காரன் விதம் விதமான காட்சிகளை உண்டாக்கிக் காட்டுவது போல் பூபதியின் குழம்பிய மனம் விசித்திரம் விசித்திரமான பயங்கரக் காட்சிகளை அறுவடை செய்தது.

அவளை அறியாமல் அவள் மனம் விக்கி அழுதது. அவள் யாரிடம் அனியாயத்தைச் சொல்லி ஆறுதல் பெறுவாள். இது சொல்லி ஆறுதல் பெறும் விடயமா? வாய்விட்டு எவரிடமும் பேசமுடியாத சங்கதி ஆச்சே! அவளைப் பெற்ற குருட்டுத் தாயாவது உயிரோடு இருந்தால்... இந்த இடர் பூக்காமல் இருந்திருக்குமோ? "சீ" என்று ஓசை எழுப்பிக் குடிசைக்குள் இருந்து காறித் துப்புகிறாள்? அவள்தான் என்ன செய்வாள்? அவளது இந்த அவல நிலையை ஊரறிந்தால் அவள் எப்படி உயிர்

தரித்து வாழமுடியும்? "சீ" என்று சமுதாயம் அவளை ஒதுக்கி எறிந்துவிட்டதா? உதவி பதவியற்ற ஏழையின் வாழ்வில் தானா இந்தக் கோரமான இடியேறு விழவேண்டும். மலைக்குன்றின் "இடுக்கால்" நீர் ஓயாது வடிவது போல பூபதியின் பஞ்சடைத்த கண்களால் கண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அக்கம் பக்கத்திற்கும் அல்லயல் சுற்றத்தாருக்கும் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவள் தடுமாறினாள். அந்த ஏமாந்த சோனகிரி என்னதான் செய்வாள். அந்த நயவஞ்சகனின் "அழுங்குப்" பிடிக்குள் அவள் அகப்பட்டு அவளது பழுது படாத கன்னித் தன்மை "எயிட்ஸ்" நோயால் உருக்குலைந்து போகும் மனித மேனிபோல் சிதைவுபட்டு சுக்குநூறாகிவிட்டது. கோடையில் வற்றிக் கிடக்கும் குளம்போல் அவளது உள்மன ரகசியம் வற்றிக் கிடக்கிறது. "பசு" என்று நினைத்தால் அது பசுத்தோல் போர்த்திய புலி என்று பிரகுதானே தெரிந்தது. அவன் மிகவும் நொந்து போனாள். அவளது பிஞ்சு மனம் சிலந்தியாக எண்ணங்களைப் பின்னித் தள்ளுகிறது. அந்த எண்ணச் சிலந்திக்குள் அந்த அபலையின் பேதலித்த "மனக்கொசுகு" புகுந்து சிறைப்பட்டுவிட்டதா?

அவள் அங்கே போகத் தொடங்கியது தனிமையிலிருக்கும் பயத்திலும், வயிற்றைக் கழுவ வேலை செய்வதற்கும் தான். ஊருக்குப் பெரிய மனிதர் கோயில் வண்ணக்கர், மச்சமே சாப்பிடாத பக்திமான், எந்த நேரமும் கோவில் கோவில் என்று வாழ்பவர். ஊரிலே பெரிய பணக்காரர் அரண்மனை போன்ற பங்களா வீடு. மட்டக்களப்பு நகரத்திலும் பல வீடுகளின் அதிபதி. ஆற்றங்கரையோரமெங்கும் அண்டிப் பரந்து கிடக்கும் "கந்தட்டி வளவுகளின்" சொந்தக்காரன். பாடும் மீன் வாவியைக் கடந்து "படுவான்கரைக்குப்" போனால் பலநூறு ஏக்கர் வேளாண்மைப்பூமி அவரது நாமத்தைக் கூறியே கிடக்கும். "மாட்டுப்பளையில்" பொன்விளையும் நெற்பூமிகள், ஒலுவில், பாலமுனையில் இராட்சதத் தென்னந்தோட்டம். இப்படிக்குட்டிச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த பெரிய புள்ளியாம் ஊரின் தலைவர் தான் ஏகாம்பரம். அவர் நடந்தால் புல்லும் சாகாதாம்.. அவ்வளவு பதுமையான மனிதர். ஊரே இரக்க சீலர் என்று போற்றிப் புகழ்கிறது. மொத்தம் நாலு மக்கள். ஆண் இரண்டு பெண் இரண்டு. ஜேர்மன், பிரான்ஸ், கனடா, லண்டன் என்று வாழும் பணக்கார மக்கள். மனைவி செண்பகமோ தீராத நோயாளியாகப் படுக்கையில் கிடக்கிறாள்.

இந்த 'ரிஷி' புங்கர்தான் பூபதியின் கன்னித் தன்மையோடு விளையாடிய ஆசாடபூதி. அவள் பூபதி அதனை நினைத்துப் பார்த்தாலே "ஓங்காளம்" வருவது போல் அவதிப்படுகிறாள். பெரிய மனிசன் தகப்பனுக்குச் சமனானவர். அவர் இந்த அழுக்கு வேலையைப் பார்ப்பாரா? சதா கோயில் கோயில் என்று சாமிக்கோலம் பூண்டு கிடக்கும் ஊர் பெரியவரை நம்பாமல் வேறு எவரை நம்புவது. ஆமிக்கேம்ப் "ஊருக்குள் நிலை கொண்ட பிறகு தனது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தேடிப் பூபதி இந்த வண்ணக்கர் வீட்டைத் தஞ்சம் அடைந்தாள் இளவட்டங்கள் இல்லாத அமைதியான பாதுகாப்பான இடம் என்றுதான் பூபதி அங்கே தஞ்சம் புகுந்தாள். அலையே வீசாத ஆழம் இல்லாத அமைதியான குளம் என்று நினைத்தால் ஆழம் கூடிய சேறும் சகதியும் பாசியும் நிறைந்த மரணக் குளமாகி விட்டதே. அவர் வண்ணக்கர் ஏகாம்பரம் கோவிலுக்குப் போகும் பொழுதே அவர் போடுகிற வேஷத்தைப் பார்த்தால் எவருக்கும் தானாகவே பக்தி ஏற்பட்டு விடும். காவி வேட்டியும் திறந்த மார்பில் திருநீற்றால் அலங்கரித்து அவர் "திரூட்சை" கேட்ட சைவப்புள்ளி அல்லவா? கோயில் கிழமை காலங்களில் "பயன்" சொல்பவரும் கந்தபுராணத்தில் கரைகண்டவரும் தேவார திருவாசகத்தில் முத்துக்குளித்தவரும்.... ஊரே அவரது படிப்புக்குத் தலைவணங்கும். இப்படியான தர்ம கர்த்தாவைப் பற்றி பிழையாகக் கூறினால் ஊரே திரண்டு வந்து, அக்பர் மன்னர் "அனார்க்கலி" எனும் நாட்டிய நங்கைக்குச் சமாதி எழுப்பியது போல் அவளுக்கும் சமாதி எழுப்பாதா? அவள் குடிசைக்குள் இருந்து விம்மி விம்மி அழுகிறாள். அந்த அபலையின் அழுகை எவர் காதைத்தான் சென்று அடையப்போகிறது. இடைவெளி முடிந்து வெள்ளித்திரையில் படம் ஓடுவது போல அழுகை டப்பென அடைபட..... மீண்டும் அவள் புழுப்பட்ட மனம் அந்த "மலக்குழிக்குள்" காலை வைக்கிறது.

அவள் வழக்கம்போல குடிசையை மூடிவிட்டு வண்ணக்கர் ஏகாம்பரத்தின் வீட்டை நாடுகிறாள். தாவி வந்தவள் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து கொள்கிறாள். வழக்கமாக வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு வண்ணக்கரின் மனைவி படுத்துக்கிடக்கும் அறைக்குள் போகிறாள். எலும்புந்தோலுமாக கட்டிலில் கிடக்கும் அந்த அகோரமான

உருவம் பேச்சு மூச்சில்லாமல் கட்டிலில் கிடக்கிறது. அங்கே சென்று அந்த நோய்ப் பெண்ணுக்குக் குளிசைகளைக் கொடுத்துவிட்டுத் தான்படுக்கின்ற திண்ணைக்குள் வருகிறாள் பூபதி. திண்ணையைக் கூட்டிப் பாயைப் போட்டு கண்களை மூடும் பொழுது அவளை நோக்கி ஒரு நிழல் நெருங்கி வருவது போல் ஒரு உணர்வு. பயத்தால் "ஆ" வெனக்கத்த வாயைத்திறக்கும் பொழுது அவளது வாயை ஒரு கரம் மூடிப்பொத்துகிறது. அவள் கையைத் தட்டிவிட்டு திமிறி எழும்புகிறாள். வண்ணக்கர் ஏகாம்பரம், "ஏன் புள்ள பயப்படுறா நான்தான் வண்ணக்கர் ஏகாம்பரம்" என்று கூற "ஏன் வண்ணக்கரே இப்படிச் செய்கிறீர்கள் நான் அபலை. உதவி பதவி இல்லாத ஏழை. நீங்கள் எனக்குத் தகப்பனுக்குச்சமன். என்ன ஒண்டும் செய்யாதீங்க எண்டமானம் போனா நான் எப்படி ஊராரின் கண்ணில முழிச்சுவாழிற. பிறகு சாகத்தான் வேணும்." பூபதி சிணுங்கிச் சிணுங்கி ஒலிகளை வெளியே தள்ளுகிறாள். வண்ணக்கரின் பாசாங்குத்தனம் நாகபாம்பாகப் படம் எடுக்கிறது. அந்த உருத்திராட்சமாலை அணிந்த ஓநாய் "பூபதி நீ பயப்பட வேண்டாம்" நான் தேடிய இந்தச் சொத்துக்கள் எல்லாம் யாருக்கு. பொண்டாட்டியே சாகப்போகிற நோயாளி மக்கள் எல்லாம் தூரத்துப் பச்சைகள். எண்ட ஆசையைத் தீர்த்தயண்டா எல்லாத்தையும் உனக்கே எழுதி வைப்பன். நான் என்ன கிழவனா பயப்படாத புள்ள" வண்ணக்கர் நெருங்கி வந்து அவளது கையைப் பிடித்து அணைக்கிறார். அவள் திமிறி விலக அந்தக்காமப் புயல் அவளை மூச்சில்லாமல் ஆக்கி விடுகிறது. இந்த அந்தகாரப் பொழுதில் இராணுவ நடமாட்டத்தில் வெளியே எங்கேதான் போவாள். அந்தக் கன்னி கழியாத மலர். "காமக்குரங்கால்" பிய்த்து எறியப்பட்டு விட்டது.

அவள் பூபதி சித்தப்பிரமை பூண்டவள் போல் ஆனாள். அந்தக் கிழட்டுப்பூனை தினமும் அவளைப் பதம் பார்த்து ருசிகண்டது. பூபதியோ பசி, நித்திரை அற்று நடைப்பிணமாக வாழ்ந்தாள். வண்ணக்கர் கோவிலை வலம் வந்து உருண்டு பிரண்டு தேவார திருவாசகத்தை ஒப்புவித்து விட்டு வீட்டுக்குள் வரும்பொழுது முற்றத்தின் ஓரத்தில் குந்தி இருந்துகொண்டு பூபதி ஓங்களிக்கிறாள். வண்ணக்கர் அவளை நாடிச்சிரிக்க அந்த அபலை அவரை நோக்கி "நான் எப்படி ஊருக்குள்ள

தலைகாட்டுற. நான் புள்ள உண்டாகித்தன். இனி எண்ட மானம் போயிடும்" "ஏன் புள்ள பயப்படுறா நான் காசுபணம் தருவன். அந்தமூட்ட சுமக்கிற ஊமையனுக்குப் புள்ள உண்டாகித்தன் எண்டு சொல்லு ஊர் நம்பிடும்" ஒரு ஆயாசமுமின்றி அந்தப் பக்திப் பரவசம் ஒப்புவிக்க பூபதியின் உடம்பு ஷெல் விழுந்து சிதறியது போல் ஆனது. செய்ததும் செய்துவிட்டு வண்ணக்கர் "றெக்கோட்டை" மாற்றுவதைப் பார்த்து பூபதிக்கு "டைனமைட்"வைத்துச் சிதறிய மலை உடைந்து சிதறுவதுபோல் நெஞ்சம் சிதறி மண்ணில் உருண்டாள். படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில் என்ற நிலையிலுள்ள வெளிவேடதாரியான ஊருக்கு நல்ல பிள்ளையாக நடித்த வண்ணக்கர் ஏகாம்பரத்தார் அவளை அதட்டி "நான் சொன்னபடி செய்யாவிட்டால் நீ இங்கு இன்று முதல் வரவும் தேவையில்லை. நீ உயிரோடு வாழவும் முடியாது." இடிமுழக்கம் போல் கத்திவிட்டு வண்ணக்கர் கதவைச்சாத்துகிறார்.

பூபதி ஓங்களித்து ஓங்களித்து "யா" எனும் "மசக்கை"யில் உழன்று குடிசையை நோக்கிப் போகிறாள். போகும் வழியில் சின்னாச்சிக் கிழவி நடந்து வருகிறாள். அவள் இராமனை காட்டுக்கு அனுப்பிய கூனியை மிஞ்சக் கூடியவள். கள்ளச் சிரிப்போடு பூபதியைத் தலையிலிருந்து கால்வரை உற்று நோக்கி "என்னடி பூபதி மெலிஞ்சு போய் "யாக்" காறி மாதிரி இருக்கிறா. வண்ணக்கர் பிணந்தின்னிக் கழுகுடி. அவண்ட வலையில விழுந்தையண்டா அதோகெதிதான். நீ வாழ வேண்டிய குமர்ப்பெண். அவன் கொட்டையும் போட்ட கிழட்டு நாய். உண்டகோலம் எனக்குப் புடிக்கல்ல" கிழவிக்கு முன்னே ஒன்றும் பேசாமல் விக்கிவிக்கி அழுதுகொண்டே அந்த இருட்டுக் குடிலுக்குள் படலையைத் திறந்து குப்புறப்போய் விழுந்தாள்.

மறுநாள் அந்த ஊர் கோரக்காட்சியைக் கண்டு முகம் சுளித்துக் கண்ணீர் விட்டது. கழுத்திலே சுருக்குப்போட்டு பூவரசமரக்கிளையில் பூபதி பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தாள்.

**- 2000 -**



# மண்ணாசை

**தங்கன்**

அந்தச்சம்பவத்திற்குப் பிறகு மீராசாய்வு படுத்த படுக்கையாகி விட்டார். வளர்த்த பெண் பிள்ளைகள் மூன்று பேர் கலியாணத்துக்காகக் காத்து நிற்கிறார்கள். ஆண் பிள்ளை இபுறாகிம் கடைக்குட்டி பத்து வயது, அவனால் என்ன செய்ய முடியும்?

இபுறாகிம் அடிக்கடி அவருடைய கட்டில் ஓரத்தில் வந்து உட்காருவான். 'வாப்பா..... வாப்பா.....' மெதுவாக அழைப்பான். மீராசாய்வு மெதுவாக கண்களைத் திறந்து பார்ப்பார். அவன் பால் வடியும் முகத்தைப் பார்த்த பூரிப்பிலே மெதுவாகச் சிரிப்பார். அவன் சிறிய பிஞ்சுக் கரத்தைப் பற்றி மெதுவாக தன் கன்னத்தில் வைத்து அழுத்துவார். அப்போது அவர் கண்கள் தாரை தாரையாக நீரைக் கக்கும். "வாப்பா குழறாத..."என்றபடி அவர் கண்ணீரைத் துடைத்து விடுவான் இபுறாகிம். அந்த ஸ்பரிசத்தினால் மெய்சிலிர்த்து துயர் மறந்து அவர் நெஞ்சம் பூரிக்கும் மெலிந்த தனது வலக்கரத்தைத் தூக்கி அவனது சிறிய தலையைத் தடவி விடுவார். அவன் விசிறியை எடுத்து விசுக்குவான். அது அவருக்கு இதமாக இருக்கும். மெய் மறந்து உறங்கத்

தொடங்குவார். திடீரெனத் திடுக்கிட்டு விழித்துக் கொள்வார். கண்கள் நீரைக் கக்கும், "எண்ட வாப்பா எனக்குத் தந்தார் பரம்பரைச் சொத்து. உனக்கு நான் என்னத்தடா தருவன். அநியாயமாப் பறிச்சிட்டாங்களே பாவிகள்..." விம்மிப் புலம்பத் தொடங்குவார்.

"வாப்பா வாப்பா..." எனத்துயரமாக அவன் அழைப்பான்.

மீண்டும் அவர் அவனுக்காகத் தூங்குவது போல பாசாங்கு செய்வார். அதை உண்மை என நம்பிச் சிறிதுநேரம் வரை விசுக்கிவிட்டு விளையாடப் போய்விடுவான்.

அன்றும் அப்படித்தான் கூட்டாளிகளுடன் வீதியிலே கிட்டி விளையாடிக் கொண்டிருந்தான். ஆலஞ்சருகு மட மட மடண்ண அங்கோர் வண்டி உருண்டுவரச் சோலைக்கிளி யார் பாடி வரச் சொக்கட்டான், சொக்கட்டான், சொக்கட்டான்... பாட்டம் பாடிக்கொண்டு வந்த இபுறாகிம் தொலைவில் கந்தசாமியும் அவன் மகன் பத்மராசாவும் வருவதைக் கண்டான். மூச்சு இரைக்க நின்று அவர்களைப் பார்த்துச் சிரித்தான். "கந்தசாமி அண்ண, இந்த முற நான் சொன்ன மாதிரி பத்மராசாமையும் கூட்டி வந்திற்றயள்...."

"ஓம்.... ஓம்..... நீ வழிக்கு வழி சொல்லி விட்ட எலுவாதம்பி...." வெற்றிலைக் காவி படிந்த பல்லைக்காட்டிச் சிரித்தான் கந்தசாமி.

இபுறாகிம் ஓடிச்சென்று பத்மராசாவின் கையிலிருந்த சோளன் குலைகளை வாங்கிக் கொண்டான். அவன் தோளில் கையைப் போட்டு அணைத்தபடி முன்னால் அழைத்துச் சென்றான். கந்தசாமி பின்னால் நடந்தான்.

"தம்பி இபுறாகிம், இப்ப வாப்பாவுக்கு வருத்தம் எப்படி இரிக்கி..." என்றான் கந்தசாமி.

இபுறாகிம் முகத்தில் சோகம் படர்ந்தது. வேதனையுடன் "இப்ப நெடுக வாய் புலம்புறார். வாப்பா இனி கெதியில செத்துப் போவாரெண்டு

சொல்றாங்க...." கரகரத்த குரலில் சொன்னான். "வாப்பாவுக்கு களவட்டி மண் கரைச்சிப் பருக்க வேணுமாம் எண்டு கதைக்கிறாங்க கந்தசாமி அண்ண, வாப்பா கெதிய செத்துப் போவாரா?" பத்மராசாவின் தோளில் போட்ட கையை எடுக்காமலேயே திரும்பிக் கந்தசாமியிடம் கேட்டான். சின்னப்பையன் இபுறாகிமின் வேதனையைக் காண கந்தசாமிக்கு நெஞ்சே வலித்தது. இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "அப்பிடி எல்லாம் நடக்காது.... ஆனா மண் என்னத்துக்காம்...." என்று கேட்டு வைத்தான். ஆயினும் மண்ணைக் கரைத்து எதற்குப் பருக்குவது என்பது அவனுக்குத் தெரியும்.

"மண் என்னத்துக்குப் பருக்கப் போறாங்க எண்டு எனக்குத் தெரியாது" "மண்ணையும் ஆக்களுக்குப் பருக்கிறதா" இதுவரை மௌனமாக வந்த சிறுவன் பத்மராசா கேட்டான்.

மூவரும் படலையைத் தள்ளிக் கொண்டு வளவுக்குள் வந்தார்கள். மாமர நிழலில் இருந்து அரிசி புடைத்துக் கொண்டிருந்த மீராசாய்பின் மனைவி கதிஜா மரியாதைக்காக எழுந்து நின்றாள். மொக்காட்டைச் சரிசெய்து கொண்டாள். "வாங்க, இப்பத்தான் வாறீங்களா....?" என்றாள். அவள் முகத்தில் சோகம் படர்ந்திருந்தது.

"இப்பத்தான் வாறம்..... வெள்ளாப்புல வெளிக்கிட்ட பயணம். வஸ் கிடைக்கல்ல. புறகு சோறு திண்டு போட்டு, மதியத்தால கிறுகின புறகு வாறம். வேனில கொள்ளிக்கட்டு மாதிரி அடுக்கிறான்.."

"ஊர்ல புள்ளயள் எல்லா?"

"கடவுள் காவலா கிடக்குதுகள். தொழில் தான் ஒன்றும் சரிவரல்ல. கரும்புச் செய்கைக்கெண்டு வெள்ளாமப் பூமிய எடுத்து புறத்தியாருக்குக் குடுத்த பிறகு ஒண்டும் சரிவருகுதில்ல. வெள்ளாம செஞ்சி பழக்கப்பட்ட சீவன். நமக்கு வேற தொழில் ஒண்டும் ஒத்து வரமாட்டனெண்டுது. புள்ள குட்டியளுக்கு வயித்துப்பாடும் பெரிய கயிற்றம்"

"நான் என்னத்தச் சொல்ல. நெஞ்சமெல்லாம் பத்துது. நிலத்தப்பறி குடுத்தாலும் நீங்க ஊசாடித் திரியிறதால புள்ள குட்டிளுக்கு ஒரு தென்பாக இருக்கும். இந்த மனிசன் நிலத்தப்பறி கொடுத்த நாள்ல இருந்து, படுத்த படுக்கையாகிச் சாகக் கிடக்குதே! மருந்து மாயம் செஞ்சி அலுத்துப் போச்சிது. பாருங்க அண்ண கலியாணம் முடிக்கிற வயதில எண்ட புள்ளயள் கூலிக்குக் குத்துதுகள்.."கண்ணில அரும்பிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

உலக்கையை நிலத்தில் ஊன்றிக் கன்னத்துடன் அணைத்துக் கொண்டு இவர்கள் பேசுவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த இரு குமரப் பெண்களையும் சோகத்துடன் பார்த்தான் கந்தசாமி. தவிட்டுத்தூசியுடன் அங்குமிங்குமாய்ப் பறந்த கூந்தல், வியர்வை வடிந்து கழுத்தெல்லாம் பிசுபிசுக்கும் நிலை. முகத்தில் சோகத்தின் கீற்றுகள் கந்தசாமி தெரிந்த காலம் முதல் வெள்ளாமையை நம்பி வாழ்ந்த குடும்பம். ஆனால் செழிப்பாக வாழ்ந்த குடும்பம் இன்று....?

காற்று வாக்கில், பானையில் அவிந்து கொண்டிருந்த நெல்லின் அவியல் மணம், அவன் நாவியினூடே புகுந்து சுவாசத்தை நிரப்பியது. அவன் மௌனமாக நின்றான். அவன் முகத்திலே துயரம் குடிகொண்டிருந்தது.

"பரம்பரைக்கு எதையடா தருவன்? பரம்பரை சொத்தான நிலத்தைப் பறிச்சிட்டாங்களே!" எண்டு எந்த நேரமும் புலம்பல். வாய் புலம்ப கண்ணால் தண்ணி ஊத்திற்றே இரிக்கிது. இந்தப் பரிதாபத்தைப் பாத்திற்று நானும் சீவனோட இருக்கன் இன்னம். அவருக்கு முதல் நான் போயிர வேணும். இன்னம் எத்தின நாளைக்கோ அவர். இசங்கிற்று இருக்கிது...."

"..................................."

"களவட்டி மண் கரைச்சிப் பருக்க வேணும், சீவன் சந்தோசமாக அடங்கும் எண்டு எல்லோரும் சொல்றாங்க...." கதிஜா விம்மி விம்மி அழுதே விட்டாள்.

மீராசாய்பின் கடைசி மகள் பாத்தும்மா. படலையைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள். தலையிலே ஒரு நெல்லுப்பெட்டி. கழுத்து முறிந்துவிடும் போலிருந்தது. "கந்தசாமி அண்ணன் வந்திருக்கார்….." தலையிலே பெட்டியுடன் நின்றபடி சிரித்தாள்.

கதிஜா முந்தானையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு நெல்லுப் பெட்டியை இறக்கி வைத்தாள். "கந்தசாமி அண்ணனுக்கு தேத்தண்ணி வை புள்ள" என்றாள்.

பாத்தும்மா பத்மராசாவின் தலையைத் தொட்டு தடவியபடி அடிப்படிக்குச் சென்றாள்.

"நிலத்த திருப்பி எடுக்கிறதுக்கு எல்லாம் பிட்டிசம் கையெழுத்து வெச்சிக் குடுத்தமே. போன பயணம் மீராசாய்விட கையெழுத்தும் வாங்கிக் குடுத்த… புறகு அதுக்குப் பதில் லொண்டுமில்லையா?" மௌனமாக இருந்த கந்தசாமி கேட்டான்.

"பதில் கிதில் ஒண்டுமில்ல பதில் கிடச்சா இந்த மனிசன் இப்பிடியா கிடக்கும். ஆராரோ பெரியவங்களை எல்லாம் போய்ச் சந்திச்சாங்க. ஊர்ப்பெரியவங்க, அதோட சரி பறிபோனது போனதுதான். இந்த எளிய வெள்ளாமக்காரனுகளைப் பத்தி ஆருக்குக் கவல?"புறந்த மண்ணிலயே அனாதயள் போல. இந்தப் புள்ளயத்தான் எப்பிடி வாழ வெக்கப் போறனெண்டு தெரியல்ல. அவர் இண்டைக்கோ நாளைக்கோ…. "அவருக்கு மண்ணாச" மண் கரச்சிப் பருக்குங்க ஆறுதலா சீவன் போகுமென்றாங்க…. மண்ணாச இரிக்காதா? அழுதபடியே முந்தானையால் துடைத்துக் கொண்டாள் கதீஜா.

"நம்மளக் காப்பாத்த ஆருமில்ல. கடவுளும் கண் துறக்கிறாரில்ல. மட்டக்களப்பில தெரிஞ்ச ஒருத்தரிட்ட ஆயுத்துக்கு எடுத்துச் செய்யலா மெண்டு போனன். ஆனா போற இடமெல்லாம் கயிற்றம் தான். அந்த நிலத்தை எல்லாம் பாதுகாப்பு வலயமாக்கிப் போட்டாங்களாம். வெள்ளாமச் செய்ய ஏலாதாம்"

உள்ள இருந்து முனகல் சத்தம் கேட்டது. மீராசாய்பின்னுடையது. வேதனை கலந்த இதயத்தைப் பிழியும் புலம்பல் ஒலி. "இப்படித்தான் இந்த நரகவேதனை எத்தின நாளைக்குத் தாங்கிறது." – கதீஜா. "அவரப் பாப்பம்...." கந்தசாமி உள்ளே சென்றான்.

மீராசாய்பு சுய நினைவற்றவராகப் பிதற்றிக் கொண்டிருந்தான். "நிலம், மண், மக்கள், பரம்பரை" என்ற வார்த்தைகள் இடையிடையே வெளி வந்தன.

சிறிதுநேரம் மீராசாய்பையே உற்றுப் பார்த்தான் கந்தசாமி. அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து களனி திருத்தியது, வயல் உழுது விதைத்து பயளையிட்டு நீர்கட்டி, காவல்வைத்து, வேளாண்மையை வெட்டிச் சூடடித்த காட்சிகள் மனத்திரையிலே திரைப்படமாக ஓடியது. கண்களிலே நீர் முட்டியது. மெதுவாகக் குனிந்து "மீராசாய்வு, மீராசாய்வு" என அழைத்தான்.

பயன் இல்லை. மீராசாய்வு பதற்றிக் கொண்டே இருந்தான்.
குனிந்து நின்ற கந்தசாமியின் கண்களிலிருந்து உருண்ட நீர் மீராசாய்பின் நெற்றியிலே விழுந்து சிதறியது. அந்த வெப்பத்தின் உணர்ச்சியினால் மீராசாய்பு புலன் பெற்றவன் போல் விழித்துப் பார்த்தான். மிரள மிரள விழித்தான். விழிகள் அங்குமிங்கும் உருண்டன.

"நான் கந்தசாமி, தெரியவில்லையா?...."

மீராசாய்வு அதரங்களைக் குவித்துச் சிரிக்க முயற்சிப்பது போலிருந்தது. ஆனால் விழிகள் அங்குமிங்கும் உருண்டன. சிறிது நேரத்தில் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். மீண்டும் பிதற்றல் ஆரம்பமானது.

வாயைப் பொத்திக் கொண்டு அழுதான் கந்தசாமி. "எவ்வளவு உயிருக்குயிரான சகோதரன். இவன் மண்ணிலே எவ்வளவு மனம் பதித்திருக்கிறான். பரம்பரைப் பூமி என்று எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறான்." கந்தசாமியின் நெஞ்சு குமிறியது.

யாரோ பின்னால் வரும் அரவம் கேட்டுத் திரும்பினான் கந்தசாமி. மீராசாய்பின் மைத்துணன் இஸ்மெயில்தான். "கந்தசாமி எப்ப வந்த...."

"இப்பத்தான்.... மீராசாய்வ பாத்திற்றுப் போகலாமெண்டு...."
"அத்தான் இஞ்ச பாருங்கவன். மச்சானுக்கு நிலம வரவர மோசமாப் போச்சிது...."

"ஓம், ஓம் இப்ப ஆக்களையும் சரியா மதிக்கிறதில்லப்போல ஆள்.... பெரிய மனவேதனையா இருக்கி இஸ்மெயில்...."

"எனக்கெண்டா இனி நம்பிக்கை இல்ல. இந்த வாய் புலம்புறதும் பாக்கப் பெரிய கன்றாவியா இரிக்கு. மண்ணாசயாலதான் இப்ப அவர்ர சீவன் போகாம இசங்கிற்று இரிக்கிதெண்டு நினைக்கிறன். களவட்டி மண் கரச்சிப் பருக்கினா ரெண்டில ஒண்டு தெரியும். தங்கச்சி கதிஜாவிட்ட ஒவ்வொரு நாளும் ஓயாமச் சொல்லுறன். அவ ஒண்டும் பேசாம வாய் துறக்காம இரிக்கா"
"................................."

"ஏன் கந்தசாமி நம்மட ஊர்ல எல்லாம் மண்ணாச பிடிச்சவங்களுக்குச் சீவன் ஆறுதலாகப் போகட்டுமெண்டுதானே மண் கரச்சிப் பருக்கிற.... அதோட இந்தப் பாடுபடுறத எத்தின நாளைக்கு மனிசன்ட கண்ணால பாத்திற்கு இரிக்கிற. பிள்ளையளுக்கும் கயிற்றம் பாருங்க...." காதோட காதாக நெருங்கி வந்து சொன்னான். "படுத்த படுக்கையோட சலம், மலம் எல்லாம். சாப்பாடு தீத்த, துப்பரவு செய்ய... அதுக்குவேற.... வருத்தக்காரருக்கு ஒண்டுமில்ல..... சும்மா கிடப்பாங்க. அவங்களைப் பாத்து மேய்க்கிறவங்களுக்குத்தானே பெரிய கயிற்றம். இதென்ன இனிச் சுகப்படுற வருத்தமா?" எத்தின நாளைக்கு இனம், சனமம் பிள்ளையளும் மாரடிக்கிற.... அதுகளுக்கு ஒரு பெரிய சுமயாய் போச்சுது கந்தசாமி. இப்படியே கிடந்தா கெதில படுக்கப்புண்ணும் வந்திருமாம் எண்டு டாகுத்தர் அண்டைக்குச் சொன்னார். மருந்துக்குச் சுகமாகிற வருத்தமா இது?

“மண்ணாச.... மண்ணாச... இம் மண் பருக்காட்டிச் சீவன் போகாது.....”

“பரம்பரைச் சொத்து, சந்ததி சந்ததியாக் கட்டிக் காத்த காணி. பாடுபட்ட நிலம், பசி தீர்த்த பூமி, நம்பி இருந்த நிலம், மண்ணில் பொன் விளையற பூமித்தாய்.... அதில ஆச இரிக்காதா? அதில என்ன புழை இரிக்கு இஸ்மெயில்....?”

“ம்...... உங்கட பூமியும் தானே பறி போச்சிது. நீ இப்படியா சாப்படுக்க படுக்கிறா? மனிசனாத் திரியறாதானே......?”

“நான் நெஞ்சுக்குள்ள புழுங்கிச் சாகிறது ஒருத்தருக்கும் தெரியாது. பிள்ளையள் ஒரு நாளைக்கு ஒரு தரம் சாப்பிடுறதும் பெரிய கயிற்றம்....”
“கந்தசாமி இந்தக் கிழக்கு மாகாணத்தில அதுவும் குறிப்பாச் சொன்னா.... மல்வத்தையில் இருந்து பொத்துவில் வரயும் எத்தின நூாத்துக் கணக்கானவங்கட நிலம் பறி போச்சுது? அதுகளெல்லாம் இப்பிடியா கிடக்குதுகள்? செத்தா போச்சிதுகள்? கவலப்பட்டு என்ன புண்ணியம்? நம்மட கையாலாகாத்தனம் எல்லாம். நேரத்தோட புழை விட்டுப் போட்டம்....”

“கையாலாகாத்தனமெண்டது உண்மைதான். என்ன செய்யிறது. நம்மட பின் சந்ததி வாழவும் வெள்ளாமச் செய்யவும் நிலத்துக்கெங்க போற? இப்ப நாமளும் பிரிஞ்சி, நம்மட மண்ணும் போய், புள்ளகுட்டியள்ற வருங்காலமும் கயிற்றமாப் போகப்போகுது....” ஆவேசமாகச் சொன்னான் இஸ்மாயில்.

வெளியில் யாரோ பேசும் குரல் கேட்டது. எட்டிப் பார்த்தான் இஸ்மெயில். “மச்சான்ட சாச்சா வந்திருக்கார்” என்றான்.

“என்னம்பி கந்தசாமி வந்திரிக்கியாமே! எப்பம்பி வந்த!” கேட்டுக் கொண்டே வந்தார் மீராசாய்பின் சாச்சா, வெள்ளைத்தம்பி.
“ஓம், இப்பதான் வந்த.... மீராசாய்வப் பாத்திற்று போகலாமெண்டு.....”

"அதேனம்பி சொல்ல. இப்ப நல்லாமோசமாப் போச்சி. தொண்டைக்குள்ள இசங்குது. காணியில அவன் வெச்சிருந்த நம்பிக்க, இப்ப மண்ணாசயா மாறிற்று. மண்ணாச சீவனப்போக விடுகுதில்ல. எத்தன நாளைக்குப் பிள்ளகுட்டியள் கயிற்றப்படுற..... சீவன் ஆறுதலாகப் போனா எல்லாருக்கும் நல்லம். களவட்டி மண் கரச்சிப் பருக்கினா..... சீவன் ஆறுதலாப் போகும். சித்திரவதையும் இல்ல..... ஆனா, இந்தப்புள்ள கதிஜாதான் உடுகுதில்ல ஒண்டுக்கும்..."

கதவு ஓரத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த கதிஜா. "இனி நான் ஒண்டும் சொல்ல மாட்டன் எல்லாரும் சொல்ற மாதிரிச் செய்யுங்க....." என்று அழுகைக்கிடையே சொன்னாள்.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். பயங்கரமான அமைதி நிலவியது.

அமைதியைக் கலைத்தான் இஸ்மெயில்.

"இப்ப களவெட்டி வயல் மண் எடுக்கிறதெண்டா, வீரமுனை வட்டைக்குத்தான் போக வேணும்." என்றபடி கந்தசாமியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

கந்தசாமி எதுவும் பேசவில்லை. ஏதோ நினைத்துக் கொண்டவனாக வெளியே வந்தான். கதிஜாவின் கண்ணீரும் கம்பலையுமான முகத்தைப் பார்த்தான். அவள் அழுகை பீறிடத் தலையைக் குனிந்துகொண்டே அழுதாள். "மயன்ரை" யாவதையும் பொருட்படுத்தாமல் படலையைத் தள்ளிக்கொண்டு வெளியேறினான் வேகமாக.

கந்தசாமி திரும்பி வந்தபோது நன்றாக இருட்டி விட்டது. விறாந்தையில் குப்பி விளக்கு மின்னியது. முற்றத்தில் சிறுவர்கள் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒழுங்கை வழியே வரும் போது காலில் அப்பிக் கொண்ட சாணத்தைத் தென்னை மரவேரில் உரசித் துடைத்துக் கொண்டு விறாந்தையில் ஏறினான்.

உள்ளே பெரிய கூட்டம் கூடி நிற்பது தெரிந்தது. கந்தசாமி சற்று துணுக்குற்றான். "நான் இல்லாத நேரம் இசங்கிக் கொண்டிருந்த கடசி மூச்சி நிண்டு போச்சிதோ....." நெஞ்சு பதைத்தது. "மீராசாய்வு" என வாய்விட்டுக் கத்தவேண்டும் போலிருந்தது. அவனைக் கண்ட இஸ்மெயில் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவனிடம் ஓடி வந்தான். "இஸ்மெயில்" என்று மட்டும் மெதுவாகக் கேட்டுவிட்டு, மேற்கொண்டு பேசமுடியாது நின்றான்.

அதைப் புரிந்து கொண்டது போல "இல்லை" என்னும் பாவனையில் தலை அசைத்தான் இஸ்மெயில்.

ஒரு நெடுமூச்சு கந்தசாமியின் சுவாசத்திலிருந்து வெளிப்பட்டுக் காற்றோடு கலந்தது. கையில் கொண்டு வந்திருந்த கடதாசிச் சுருளைக் கொடுத்தான் இஸ்மெயிலிடம்.

அதைப் பிரித்து முகர்ந்த இஸ்மெயில் "நல்ல பசையான களத்து மண்" என்றான் மற்றவர்களுக்குக் கேட்காமல்.

"மண் பருக்கிர கதை எங்கும் பரம்பிற்றுப்போல........."

"ஓ அதுக்கா குறச்சல் எல்லாம் விடுப்பு"

குப்பி விளக்கை அருகில் இழுத்து வைத்துக் கொண்டு, களத்து மண்ணை ஒரு பெரிய சிரட்டையில் இட்டு இடித்துப் பொடியாக்கினான் இஸ்மெயில். அதிலே நீரை ஊற்றித் தன்விரலை விட்டுக் கலக்கினான் கந்தசாமி. அப்போது நிமிர்ந்து ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்தனர் ஆயிரம் அர்த்தங்கள். இஸ்மெயில் என, நா தழுதழுக்க கண்களில் நீர் மல்க உதடுகளை அசைத்தான் கந்தசாமி. இஸ்மெயில் எதுவும் பேசவில்லை. கண்களில் நீர்மல்க, இடக்கரத்தை எடுத்துக் கந்தசாமியின் தோளை அழுத்திப் பிடித்தான். அவர்களுடைய கண்ணீரும் அந்தச் சிரட்டையிலே விழுந்திருக்க வேண்டும். பின்னர் சுயநினைவு பெற்றவனாக சிரட்டையையும் எடுத்துக் கொண்டு உள்ளே போனார்கள்.

கரைத்த மண் சிரட்டையை கதிஜாவின் கையில் கொடுத்தான் இஸ்மெயில். "முதல் முதல் நீதான் பருக்க வேணும் புள்ள...." என்றான்.

"ஓம்" என்னும் பாவனையில் வெள்ளைத் தம்பி தலையசைத்து இஸ்மெயில் சொன்னதை உறுதியாக்கினார்.

ஒரு சிறு கரண்டியினால் அழுகைக்கிடையே கதிஜா, மண் கரைசலை மீராசாய்வின் உதடுகளுக்கிடையே பருக்கினாள். அவளைத் தொடர்ந்து பிள்ளைகளும் பின்னர் சொந்தக் காரர்களும் பருக்கினார்கள். கடைசியாக கந்தசாமியும் ஒரு கரண்டி.....


மீராசாய்வின் தொண்டைக்குழி இலேசாக அசைந்தது. பின்னர் எந்த அசைவும் இல்லை. அமைதி, பயங்கர அமைதி, மரண அமைதி.

கதிஜா தலையில் அடித்துக்கொண்டு கத்தினாள். பிள்ளைகள் கத்தின. மரண ஓலம்.
"மீராசாய்வு" அலறினான் கந்தசாமி.

யாரும் சற்றும் எதிர்பாராத விதமாக மீராசாய்வின் வாயிலிருந்து கரைசல் மண் நீர்க்குமிழி போல "புஸ்" எனச்சிறப் பாய்ந்து சிதறியது. சுற்றி நின்றவர்கள் முகங்களெல்லாம் பறந்து தெறித்தது. அருவருப்போடு விலகினார்கள்.

மீராசாய்வு தலையைத் தூக்கி முழங்கையை ஊன்றி நெஞ்சை உயர்த்தினான். "இது எண்ட மண் இல்ல. எண்ட நெத்தி வேர்வ சிந்தின மண் எனக்குத் தெரியுமடா. எண்ட மண்ணைப் பறிச்சுப் போட்டு இப்ப என்னை ஏமாத்தப் பாக்கிறீங்களாடா? துரோகிகள்.....!" ஆவேசமாகக் கத்திவிட்டு மூச்சிரைத்தான். நெஞ்சு படபடவென மேலும் கீழுமாக அடித்துக் கொண்டது. சரிந்து நிலை தடுமாறிக் கட்டிலில் இருந்து விழப்போனவனைத் தாங்கிப் பிடித்தான் கந்தசாமி.

- 2000 -



# அரசியின் விருந்து

அ.ச. பாய்வா

அவன் கனவுகளை நம்பியதேயில்லை. சினிமாப் பாடல் காட்சிகளைப் போல சம்பந்தா சம்பந்தமில்லாமல், அவைவெறும் "புலன் உறக்கநிலைச் சஞ்சாரம்" என்று மட்டும்கருதி ஒதுக்கியதேயுண்டு. அத்தோடு இந்தக் கனவுகளுக்குப் "பலன்" கூறுபவர்களோடுகூட அவனுக்கு உடன்பாடிருந்ததில்லை.

ஒரே மாதிரியான கனவை அடிக்கடி காண்பதாக யாராவது சொன்னால் நம்புவீர்களா? இல்லையென்றால் இனி நம்பலாம். அதற்காக அவன் அடிக்கடி காணுமந்தக் கனவினால், கனவின் மீது அவனுக்க நம்பிக்கை ஏற்பட்டு விட்டதாய் அர்த்தமில்லை.

இரவில் கண்ட கனவை காலையிலெழுந்து மீட்டுப் பார்ப்பது போல், யாருமிந்தக் கனவு பற்றித் தெரிந்துவிடக் கூடாதென்று, மிக அவதானமாக மீண்டுமொருமுறை தன்னுள் மீட்டுப் பார்க்கிறான். வேறொன்றுக்காகவு மில்லை, இந்தக் கொம்பியூட்டர் யுகத்திலும் இப்படியொரு 'அரச' கனவா என்றவனை நீங்கள் ஒரு மாதிரியாகப் பார்க்கக்கூடும். ஆனால் பைபிளில் வந்த "பார்வோனின்" கனவுபோல இதையும் அவனால் ஒதுக்க முடியவில்லை அவ்வளவுதான்.

அண்மையில் நடந்தவோர் அயல் நாட்டின் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் வடுக்களின்னும் மாறவில்லை. பிணவாடை எங்கிருந்தோ வீசிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே, சிதைந்து போன உடல்களைக் குவித்து வீரர்களிட்ட திச்சுவாலைகூட இன்னும் ஓயவில்லை. அதற்குள் தனது போர் வெற்றியைக் குறித்து அரசியின் விருந்து தொடர்பான 'ஆணைகள்' புறப்பட்டன.

எங்கு பார்த்தாலும் அரச சைத்திரிகர்களால் தீட்டப்பட்ட ஓவியங்கள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான முகபாவங்களுடன் (கருணை, அன்பு, பாசம்) அவள் வீற்றிருந்தது அனைவரையும் புல்லரித்தது.

ஒரு ஓவியத்தில் 'சரஸ்வதி'யைப் போல் தாமரை மேல் வாளில் வீணை வாசிப்பது போலவும் இன்னொன்றில் வெண்புறாவின் மீதமர்ந்து சவாரி செய்வது போலவும், இன்னொன்றில் போர்க்கவசமணிந்து குதிரை மீது சயனித்துப் போருக்குப் புறப்படும் வீரமங்கை போலவும் சித்திரக்கப்பட்டிருந்தாள். அ(கு)டி மைகள் சிலர் அவளது ஓவியங்களை வணங்கினார்கள். சிலர் விசுவாசம் மீதியால் கண்களில் தொட்டு ஒற்றிக் கொண்டார்கள். சிலர் சூடம் கொளுத்தினார்கள்.

விருந்துக்கான அந்த நாளும் வந்தது. பெருந்திரளாக அ(கு)டிமைகள் அரண்மனை வாசலில் திரண்டனர். அரண்மனை வாசலில் வைத்து, அரசவிருந்துக்கான உடையுடன் வந்திருக்கிறார்களா என்று மட்டும் சோதனை செய்தவர்களை விருந்து மண்டபத்துக்குள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள் வீரர்கள். ஊமையன், செவிடன், குருடனாகியோர், ஒற்றர்களாயிருக்கக் கூடுமென்ற ஐயத்தில் மிகுந்த கவனமாக அரச தோரணையில் சோதிக்கப்பட்டனர்.

போர் வீரர், பிறநாட்டு ராஜதந்திரிகள், அ(கு)டிமைகளென்று அரண்மனை அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்க, அரசியின் சௌந்தர்யத்தை மிக அருகில் பார்த்து விடும் ஆசையில் அ(கு)டிமைகள் தவிக்க, திடீரென்று அரசிக்கும் அ(கு)டிமைகளுக்குமிடையே ஒரு கருந்திரை வந்து விழுந்தது. திரைக்கும் அ(கு)டிமைகளுக்குமிடையில்

போர்வீரனொருவன் நின்று கொண்டிருந்தான். அவனே அரசியின் பக்கம் நடப்பகைவள் பற்றி அ(கு)டிமைகளுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தான் சைகை மூலம்.

அமர்க்களமான இசை முழங்க அரசி செங்கம்பளத்தில் நடந்து வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தாள். சபை மகாமசான அமைதியில் உறைந்தது. அ(கு)டிமைகள் சாமரம் வீச அரசி சிம்மாசனத்திலிருந்தவாறே உரை நிகழ்த்தினாள். போரில் தியாகஞ்செய்த வீரர்கள், அ(கு)டிமைகள் என யாவருக்கும் நன்றி சொல்லிப் பின் அனைவரும் வியக்கும் வண்ணம் "எனது தந்தையை, என்னையிந்த உலகுக்களித்த வீருப்பெருந்தகையை, இன்று முதல் இன்னாட்டின் பிரதம தளபதியாக்குகிறேன்" என்றோர் அறிவிப்பை விடுத்தாள்.

போர் வீரர்கள் சிங்கேறு நடையாக வந்து, மரணத்தின் நிமிடங்களை எண்ணிக் கொண்டிருக்கும், விருத்தாப்பியரும், எலும்புந் தோலுமான அரசியின் தந்தையைக் கட்டிலுடன் துாக்கி வந்தார்கள். அரசியின் துணிவைக் கண்டு, பிறநாட்டு ராஜதந்திரிகள் எழுந்து நின்று வியந்து பாராட்டினார்கள். தங்களுக்குக் கிடைத்த புதிய தளபதிக்காய் உற்சாக மிகுதியால் கை தட்டினார்கள் வீரர்கள்.

விருந்து தொடங்கியது. அரசி மதுக்கிண்ணத்தை ஏந்தினாள். தந்தையின் பெயரால், நாட்டின் பெயரால் இன்னும் என்னவோ பெயரெல்லாஞ்சொல்லி 'அருந்துங்கள்' என்றாள். திரையிடையில் நின்ற போர் வீரன், அ.(கு)டிமைகள் பக்கம் மதுக்கிண்ணத்தை கையிலேந்திப் பருகுவதுபோல் 'பாவனை' செய்ய, அவர்களும் அவ்வாறே செய்தனர். பின்னர் அ(கு)டிமைகளுக்கு இலை பரிமாறப்பட்டது. திரையின் மறுபக்கம் தங்க, வெள்ளித் தட்டுக்கள் தகதகத்தன. மீண்டும் அந்தப் போர்வீரன் 'உண்ணுங்கள்' என்று சைகை செய்ய அவர்களும் உண்பது போல் பாவனை செய்தனர்.

மறுபுறத்திலிருந்து எழுந்த அறுசுவையுணவின் மணத்தால் உந்தப்பட்டுப் பின் பொறுமையிழந்த அந்த நாட்டின் பிறவி ஊமையர்களிலொருவன்

திரையைக் கிழித்துக் கொண்டு அரசியின் பக்கஞ்சென்று யாவரும் திகைக்கும் வண்ணம், 'என்ன அநியாயம். எங்களுக்கோர் நீதி உங்களுக்கோர் நீதியா?' என்று பேசத் தொடங்கினான்.


அவனைக் கைதுசெய்ய வந்த போர்வீரர்களை அடக்கிய அரசி "ஜனநாயகமிந்த நாட்டிலின்னும் செத்துவிடவில்லை என்பதற்கு அதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? பிறவி ஊமையனே பேசுமளவிற்கு இந்நாட்டின் ஜனநாயகம் கொடுத்து வைத்திருக்கின்றது." என்று அரசி பிறநாட்டு ராஜதந்திரிகளைப் பார்த்து உணர்ச்சி மேலீட்டால் மேலுமொரு சொற்பெருக்காற்றி, "இவரைச் சரியான முறையில் கௌரவியுங்கள் பன்னீரில் திணறடித்து, செங்கம்பள வரவேற்பளியுங்கள்" என்றவனை வீரர்களிடம் கையளித்தாள். ராஜதந்திரிகளுக்கு முத்தும் ரத்தினமும் பரிசளித்தாள், விருந்து முடிந்தது.

ஊமையனின் பின்னால் அழுது கொண்டு அவன் மனைவி மக்கள் ஓடினர். அ(கு)டிமைகள் தலையிலறைந்து அழுதனர்.

ராஜதந்திரிகள் அரசியைப் பார்த்து, "பரிசளித்தால் சந்தோசமடைவதை விடுத்து இவர்கள் அழுவதேன்?" என்று கேட்க, அரசியோ, "இந்த அடிமைகளே ஒரு மாதிரியானவர்கள் தான்" என்று சிரித்தாள். ராஜதந்திரிகள் அதனையும் ரசித்துக் கைதட்டினர்.

திடீரெனப் பேரிகை முழங்க, பூமி பிளந்து அரசியை உள்வாங்கிக் கொண்டது. அதிசயமான பூமி இதுவென்று விருந்தாளிகள் ரகசியமாகப் பேசிக்கொண்டனர்.

**- 2000 -**



# இது ஒன்றும் புதிய கதை அல்ல

ஈ. நவரெத்தினராசா குரூஸ்

மாசி பத்திற்குப்பிறகு சிவராத்திரிக் குழப்பத்தை விட்டால் அடைமழை பெய்வதற்கு சாத்தியம் இல்லை தான். ஆனால் இந்த வருடம் மாசி இரண்டாந்திகதி பிரதமையோடு பிடித்த மழை, பன்னிரண்டு நாட்களை தாண்டியும் பெய்து கொண்டுதான் இருந்தது. இருபத்தினாலாம் திகதி சிவராத்திரி. அது மட்டும் பெய்து விட்டுத்தான் ஓயும் போலும்........... நிம்மதி இல்லாத மனத்தோடு ஒப்புக்கு இரா உணவை முடித்தது விட்டு மனைவி விரித்த பாயில் இருந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தார் மணியம் மாமா.

வெளியே மழை துாறலாகப் பெய்து கொண்டிருந்தது. என்ன உண்மையான உறவு முறை என்று யாருமே சிந்திப்பதில்லை. மணியத்தார் எல்லாருக்குமே மாமா தான். கதிரவெளிக் கிராமமே அவரை மாமா என்று தான் அழைத்தது. அவர் பிறந்த பருவம் தெரிந்த நாளிலிருந்து வயல் வாய்க்கால், மாடு கன்று என்று வாழ்ந்து வருபவர். உலக நிர்வாகம், நாட்டு வீட்டு நிர்வாகம் எதுவுமே அறியாதவர்.

மனைவியின் சாமர்த்தியத்தால் வீட்டு நிர்வாகம் ஒழுங்காக நடைபெற தானுண்டு, தன் வயலுண்டு என்று வாழ்ந்து வருபவர். குளத்து வெளிக்குள் மூன்று மாத்தையான் "வீஜிலெவனும்" வெருகம்புலைக்குள் மூன்றரை மாத்தையான "கொழுக்கிக் கொட்டனும்", முகவணைக்குள் மூன்று மாத்தையான் "மாப்பிள்ளையும்" விதைத்து இன்று நூற்று இருபது நாட்களைத் தாண்டிவிட்டன. எல்லாக் கண்டமும் வெட்டிச்சூடு வைத்து அடித்து முழுச்சோலியும் முடித்து "அப்பாடா" என்று இருக்க வேண்டிய நேரம் இது.

ஆனால் மழை தான் எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டுது.......... வெட்டுக்கூட்டம் எல்லாம் வேலையற்றுக் கிடக்குது. ஆனால் மழை விட்டிச்சோ...... ஒரு மனிசரையும் காண ஏலாது. பொங்கலுக்குக் காசுகுடுத்தவனுகளிட வயலேகிடந்துஅழியுது. புதுசாப்புடிச்சி அறுப்பானுகள்..... எல்லா வெள்ளாமையும் பாடத்தில் கிடக்கு, கொட்டுப்பட்டது போக மிச்சம் முளைச்செழும்பும்..... ஆரிட்டப் போற...... இந்த மழை இல்லாட்டி வட்டை இந்தளவில ஒரு மாதிரி கரைப்பட்டிருக்கும்..... எப்ப இந்த மழை ஓயும்....... நீண்ட பெருமூச்சு வெளிப்பட சுருட்டுத் துண்டைத் தூக்கி எறிந்தார் மணியம் மாமா. கண்களை மூடி மழையில் அமிழ்ந்து கொண்டிருக்கும் தனது விளைந்த வயல்களை கனாக்கண்டு கொண்டிருந்தவர் கண் அயர்ந்து போனார்.

சுருட்டுத்தவனத்தில் சாமத்தில் கண் விழத்தவர் வெளியே மழை பெய்யும் அரவம் கேட்காததை உணர்ந்து வாரிச்சுருட்டிக் கொண்டு கதவைத்திறந்து கொண்டு முற்றத்திற்கு வந்து வானத்தை அண்ணார்ந்து பார்த்தார். வானம் வெள்ளி பூத்து வெளித்துக் கிடந்தது. மழை முகில்களைக் காணவில்லை இனி வெளிக்கும். இந்த முறை சிவராத்திரி மழை முன்னுக்குப் பேஞ்சி போட்டு. தன்னை அறியாமலே முணுமுணுத்தார். மணியம் மாமா எப்படித்தான் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் வெளுத்த வானம் இப்படியே வெளுத்து விட்டால் சிவராத்திரிக்கு பத்து நாட்கள் இருக்கிறது. அதற்குள் கரைப்பட்டு விடலாம் என்று கணக்குப் போட்டுப் பார்த்தது அவர் மனம். மீண்டும் படுக்கையில் சரிந்தவருக்குத் தூக்கம்

வரும் என்ற நம்பிக்கை இல்லாது போய் விட்டது. பொழுது கிளம்பப்புறப்படவேணும், பள்ளக் கண்டத்துக்காரனுகள் நாளைக்கு வெட்ட மாட்டானுகள். தண்ணிவடிய நாலஞ்சி நாளாகும். ஆனா திடல் பகுதிக்காரனுகள் எப்படியும் நாளைக்கு வெட்டத்தான் பாப்பானுகள். இந்த நாலஞ்சி நாள் இடைவெளிக்குள்ள எப்பிடி எண்டாலும் ஒரு வெட்டுக்கூட்டத்த அமத்த வேணும். தனக்குள் திட்டமிட்டார் மணியம் மாமா, இவன் சதாசிவம் கூட்டத்திற்கு கனக்கையா வெள்ளாம இல்ல எண்டு கேள்வி, விடிய சதாசிவத்த படுத்தபாயிலேயே அமத்த வேணும். எப்போது விடியும் என்று காத்துக்கிடந்த மணியம் மாமா, நிலம் தெளியும் முன்னமே காலைக்கடன்களை முடித்துவிட்டு மனைவி கொடுத்த தேனீரைக் பருகிக் கொண்டு நிலம் தெரியும் மட்டும் காத்திருந்தார். ஒழுங்கையில் ஆள்நடமாட்டம் தெரிய வேகமாகப் புறப்பட்டு சதாசிவத்தின் வீட்டை நோக்கி நடந்தார்.

அவர் மனம் நிம்மதி இழந்து கிடந்தது. செய்த வெள்ளாண்மைத் தொழில் கைவிட்டுப் போனால் அடுத்த போகத்திற்கு செய்ய முடியாது. பட்டகடனை எப்படிக் கொடுப்பது? யாரிட்டயும் கையேந்த எனக்கு விருப்பமில்லை என்ற அவருடைய கொள்கை அடிபட்டுப்போய் விடும்.

'சதாசிவம்'............ 'சதாசிவம்' ...............
ஓம்............... ஓம்..................
பதில் சதாசிவத்தின் இருப்பைத் தெரிவித்தது,

மணியத்தார் திண்ணையை நெருங்கும் போது, நிளக்காற்சட்டையும், நீளக்கை சேட்டும் அணிந்து வாயில் ஒட்டி இருந்த சீனியைத்தட்டி விட்டுக் கொண்டே வெளியில் வந்தான். வேளாண்மை தரும் அரிப்பைத் தவிர்க்க யாரிடமாவது பழைய நீளக்காற்சட்டை வாங்கி அணிந்து கொள்வது வெட்டுக் காரர்களுக்கு இப்போது வாடிக்கையான விடயம்.

"என்ன அம்மாச்சி............. பொழுது காரிக்கமுன்ன"
என்ன சதாசிவம்............. வெட்டப் போகத்தானோ..........

ஓம்........... இனி ஒரு மாதிரி வெட்டாப்பு. புடிச்ச வயல் எல்லாம் சும்மா கிடக்கு அஞ்சாறு ஏக்கர் உப்பட்டியும் பட்டுத்து. வாங்கின காசும் திண்டொழிச்சி......... வெட்டத்தானே வேணும்?

மணியத்தார் வீடுதேடி வந்த விடயம் விளங்கித்தான் சதாசிவம் போடுகிறான் என்பது மணியத்தாருக்கு விளங்காமலில்லை. இனிப்படுத்தென்ன செய்யிற.... வட்ட கிடந்து அழியுது.... மௌனம்....

இது சிறய இடைவெளிதான் ஆனால் இச்சிறிய இடைவெளிக்குள் பொதிந்திருக்கும் அர்த்தமோ மிக அகலமானது. "வந்திட்டான் போடி வாசலடிக்கு. எண்ட நடப்பை நான் காட்ட வேணும். உருவுறத்துக்கு இதை விட்டால் இனி ஏலாது என்றது வெட்டுக்காரனின் மனம். இந்த நாயிட வாசல் நான் மதிக்க வேண்டி வருஷா வருஷம் வீடு தேடி வருகிற எங்கட பரம்பரை வெட்டுக் கூட்டம் இந்தப்பிரச்சினையால் வராம விட்ட புறகு நமக்கு கணகாட்டுத்தான்... என்ன செய்யிற எப்படியும் வயலை வெட்டிக் கரையேற வேண்டும் என்றது போடியின் மனம்."

"என்ன சதாசிவம் எண்ட வயல் வெட்டிற இல்லையா?"
'ஏன் இல்ல' வெட்டத்தான் வேணும். இல்ல எண்டு சொல்லலாமா?'

'அப்ப எப்ப இறங்கிற எண்ட வயலுக்க'..............?
'எப்ப எண்டு சொல்லுற? இழுத்தான் சதாசிவம்'
'வாற புதன்கிழமை இறங்க ஏலாதா........?'
'புதன்கிழமை......... சிரித்தான் சதாசிவம்.'
மணியத்தார் பேசவில்லை ஆழம் பார்த்தார்.

"நான் மட்டும் செய்யிற வேலையா....... நான் மட்டும் என்றால் சட்டுப் புட்டென்று செய்து தருவன். கூட்டத்தில் பதினைஞ்சி பேர் இருக்கிறான். எல்லாரிட்டையும் கேட்டுத்தான் சொல்லலாம்....." "நீ மோனக்காரன். சொன்னாக் கேக்கத்தானே வேணும் அதெப்பிடி காசு வாங்கின வயல் எல்லாம் சும்மா கிடக்கு....... சரி எனக்கும் ஒரு நாளச்சொல்லி, நாளுக்கு இண்டைக்கு வந்து அறுத்துப் போட்டு வா.........."

"சே......... கூட்டக்காரனிட்ட கேக்கணும். ராவைக்கு வாங்க. முடிவு சொல்லுறன்." சுதாசிவம் தீர்மானமாகக் கூறிவிட்டான்.

மணியத்தாரின் நெஞ்சம் குமுறியது. "கூலிக்கார நாய்..... என்னிட்ட நடப்புக்காட்டுது........ வெட்டு முடிஞ்சால் மம்பட்டியோட நக்கித்திரியும்......... இவ்வளவுக்குள்ளையுந்தான் இவண்ட நடப்பு. இருந்தாலும்.........."

அவரது தேவை ஆத்திரத்தை அடக்கியது. "சரி சதாசிவம். கேட்டுவை ராவைக்கு வாறன்" மணியத்தார் திரும்பி விட்டார். இந்தநாயை மட்டும் நம்ப ஏலாது. அவரது மனம் அவரை எச்சரித்தது. வெட்டுக்கூட்டத்தின் தலைவன் மோனைக்காரன் ராவுக்கு வா என்றால் அதன் அர்த்தமே வேறு என்பது மணியத்தாருக்குத் தெரியும். தனது முல்லைக்காரனிடம் அரைப்போத்தல் வடிசாராயத்தைக் கொடுத்து சதாசிவத்தின் வீட்டிற்கு அனுப்பிய அரைமணி நேரத்தில், இருட்டையும் பொருட்படுத்தாமல் எழுந்து சதாசிவத்தின் வீட்டைப் போயடைந்தார் மணியம் மாமா.

போடியாரைக்கண்ட முல்லைக் காரன் எழுந்து மரியாதையாக ஒதுங்கிவிட, "வாங்க, அம்மாச்சி," என்று அழைத்தான் சதாசிவம். நல்ல பருவம் அவனுக்கு.

"இருங்களன்"
'நேரமில்லை....... சாப்பாடு போட்டாப்பில கிடக்கு.......'
"எங்களுக்கு பதினைஞ்சு தான் கிடக்கு, எப்பிடியும் ஐஞ்சி நாளையில் முடியும். பொறுத்ததோடு பொறுத்துக்குங்க, வாற சனிக்கிழமை கட்டாயம் உங்கட வயலில் தான் இறங்கிற...... ஆனா முப்பது மரைக்கால்.......... தந்திடனும்" சிரிப்பு அவனுக்குள். வாற சனியெண்டால் இண்டைக்குத் திங்கள்.............. ஏன் சதாசிவம் அதுக்கிடையில் இறங்க ஏலாதா......... முப்பது மரைக்கால் கூலி அவரது இதயத்தை முள்ளாய் குத்தியது.

“ஏலாது அம்மாச்சி..... எதுக்கும் இடையில் பாப்பம், ஒவ்வொரு நாளும் அரைப்போத்தலுக்கு அடிகோலுகிறான் சதாசிவம் என்று மணியத்தார் புரிந்து கொண்டார். சரிவாறன்” என்று புறப்பட்டார் மணியம் மாமா.........

அவர் மனம் வேதனையில் கனத்தது. ஆனால் சதாசிவம் நிறைவெறியில், அழியட்டும் அப்பதான் தெரியும் இவனுகளுக்கு எங்கட அருமை. சிரித்தான் சதாசிவம். எவ்வளவு குடுத்தெண்டாலும் சித்தாண்டிக் கூட்டத்தையாவது பிடிச்சி எண்ட வெள்ளாமையை வெட்ட வேணும்......... அதுக்குப் புறகு காட்டுறன் நான் ஆர் எண்டு. மனதுக்குள் கறுவிக்கொண்டு நடந்தார் மணியத்தார். ஒரு கிழமையாக ஓடி, ஓடி எல்லா வெட்டுக் கூட்டத்தையும் விசாரித்தும், கெஞ்சியும் தோற்றுப் போய் கடைசியாக இரண்டாயிரம் ரூபா ஏக்கருக்குக் கொடுத்து வயல் முழுவதையும் வெட்டியும் முன் மாரியில் நட்டப்பட்டுப் போனார் மணியம் மாமா.

பொல்லாத ஆத்திரம் மனதுக்குள். திட்டம் போட்டு தன்னுடைய பிழைப்பில் மண் போட்டு விட்டார்கள் என்று நினைத்தார் அவர். ஊரிலே யாருமே உதவி செய்யவில்லை. இனிமேல் நானும் யாருக்கும் உதவி செய்வதில்லை. வரம்பு வேலைக்கு இனி ஆள் வெளியில் இருந்தே கொண்டு வர வேண்டும்.

முன் மாரிக்குத்தான் இந்த சேட்டை. சித்திரைக்குப் பிறகு மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு தன்னிடம் தான் வரவேண்டும். காலப்போகப்பாய்ச்சல் காணி தனக்கே அதிகம் என்ற பிடிமானத்தில் சிந்தித்தார் மணியத்தார்.

சித்திரை வருடம் கொண்டாடிய கையோடு முல்லைக்காரன் வந்து நின்றான்.

‘போடியார், வரம்பு வேலைக்கு சதாசிவம் ஆக்கள் வாறானுகளாம் நாளைக்கு ஆக்கள இறக்கையா............?’

“ஆரு சதாசிவம் கூட்டமோ......... ஆத்திரம் தெரிந்து.........”

“ஓம் போடியார் தொழில் இல்லாம கஷ்டப்படுறானுகள், சித்தாண்டி ஆக்கள் வேலைக்கு வந்தவனுகள், நாட்கூலியாக நூற்றைம்பது

கேக்கிறானுகள்........ சதாசிவம் ஆக்கள் என்றால் நூற்றி இருபத்தஞ்சி ரூபா," பேசாமல் இருந்தார் மணியத்தார்.

சிறிய இடைவெளிக்குப்பின் திரும்பவும் கேட்டான் முல்லைக்காரன் "சதாசிவம் ஆக்கள நாளைக்கு வரச்சொல்லயோ," அவன் முகத்தைப்பாராமலே 'ம்'........... என்று சம்மதம் தெரிவித்தான்.

சுதாசிவம் கூட்டம் வருடம் முழுவதும் உழைப்பதுமில்லை, வருடம் முழுவதும் சாப்பிடுவதுமில்லை. அவர்கள் உழைப்பதும் வயிறு நிறையச்சாப்பிடுவதும் குடிப்பதும் வருடத்தில் கொஞ்ச நாட்கள் தான். இந்த ஞானம் ஏற்பட்டதால் மணியத்தார் சரி என்று சொல்லவில்லை.. முன்மாரி நட்டத்தை எப்படியும் காலபோகச் செய்கையில் ஈடு செய்ய வேண்டும். ஆத்திரம் என்னவோ மாறாமல் இருந்தது.

ஊரின் அடுத்த மூலையில் நாளைக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சதாசிவம் தன் மகனை சுந்தரத்தின் கடைக்கு அனுப்பினான், ஒரு கொத்தரிசி கடனாக வாங்கி வர.

**- 1999 -**



# யாருமிங்கு தீர்ப்பிடலாம்

ச. எ. சித்தார்த்தன்

இரவின் அந்தகாரமும் இருளின் இறுக்கமும் எங்கும் வியாபித்து என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்க, தனிமை, என்னை விழுங்கிடுமாப்போல் தன் அகன்ற வாயைத்திறந் தென்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

எல்லோரும் அழுது, அல்லது அழுவதுபோல் பாவனை செய்து ஓய்ந்துபோக, நான்மட்டும் இன்னுமென் அப்பாவுக்காக அழாமலிருக்கிறேன். அந்தப் பெட்டிக்குள் உயிரற்று நீட்டி நிமிர்ந்து கிடக்கும் அவரை, அவர் இறந்த பிறகு நானின்னும் பார்க்கவில்லை.

அவர் இரத்தம் என் உயிரில் இரண்டறக் கலந்துவிட்ட அத்வைதம். அவரே நானாக வாழும் போது, அவர் மரணிப்பதாவது. அப்பாவை "உரிச்சி வச்சமாதிரி," என்று என்னைப்பற்றிச் சொல்லப்பட்டவைகள் இன்னும் என்காதுகளில் ஒலிக்கின்றன.

திருகோணமலையிலிருந்து வந்த உறவுகளெல்லாம் பஸ்ஸிலிருந்து இறங்கி வந்தவுடனே ஆராவாரமாய் அழுதார்கள். பல உறவுகளில் அவர், அவர்கள் அழுகைகளில் கரைந்தார்.

நீண்ட பயணத்தின் அலுப்பால் அல்லது சோக மிகுதியால் அழுதகளைப் பால் அநேகர் அம்பிட்ட இடத்தில் உறங்கிப் போயினர். இனி அவர்கள் அப்பாவின் பிரேதம் எடுக்கும் போது ஒரு தரம் அழுவார்கள். சிலர் 'அவசர அலுவல்கள் நிமித்தம்' அடுத்தநாள் புறப்படுவது, சிலர் எட்டுக்கழியும்வரை பல்லைக் கடித்துக் கொண்டு நிற்பது, அதற்குள் சமைத்தல் அல்லது காசாகக் கொடுத்தல் போன்ற சம்பிரதாயங்கள் கடமைகள் நிறைவேற்றுவது என்றானதன் பின் உறவுச் சங்கிலியிலிருந்து அப்பா என்கிற வளையம் கழன்றுபோக சகலதும் சமாப்பதியாகும். ஏனென்றால் அப்பாவால் அவர் குடும்பத்துக்கு எதுவித பிரயோசனமும் கிட்டவில்லை என்று சொல்லக்கேள்வி.

தெரிந்திருந்தால் அவரின் சாவைத் தடுத்திருப்பேன் என்கிற தோரணையில் 'சாய்... தெரியாமல் போச்சி' என்றவர்களும், (சவம் மணக்கத் தொடங்கிற்று இன்றைக்கே எடுத்திருக்கலாம் என்று மூக்கைப் பொத்திக் கொண்டு விமர்சித்தவர்களும் இவர்கள் தான்) படலையின் விளிம்புவரை சுவாரஸ்யமாகச் சிரித்துப்பேசி, முகத்தில் ரெடிமேட், சோகத்தைத் தேக்கிக் கொண்டு வந்தவர்களையும், 'நல்ல மனிசன்', என்று நெஞ்சார ஒரு பொய்யை நான் கேட்கும்படி சொன்னவர்களையும், ஒருசில ரூபாய்களால் தந்தி மூலம் சோகத்தைப் பிழிந்து அனுப்பியவர்களையும், இதே வேடதாரிகளிடமிருந்து தன்னைப் பிய்த்துக் கொண்டு, மரண வீடுகளுக்கே செல்லாது, அபூர்வப் பிரேதத்துக்குப் பிடிமண்போட்டு விட்டு வரும் அப்பாவையும் எண்ணிப்பார்க்கிறேன்.

மனிதர்களைப்பற்றி அறிய, நானின்னும் வாழ்ந்ததோ, அனுபவித்ததோ போதாதென்று எனக்குத் தோணுகின்றது.

அப்பாவைப்போல் என்னால் வாழமுடியுமா? கண்டதை உண்டு, கிடைத்ததை உடுத்து, பட்டினிகிடந்து, எந்தவிதச் சூழலுக்கும் ஏற்ற விதமாய்ப் பழகாமலே வாழ்ந்த அந்தப் பிரகிருதி வாழ்வுக்கு நானின்னும் என்னைத் தயார் செய்யவில்லை. அவர் சொல்வதுபோல், நானும் இன்னொரு போலியாய் சமூகத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறேனோ தெரியாது.

கண்ணீரஞ்சலி, நோட்டீஸ் என்றெல்லாம் என்னிடம் வருபவர்களுக்கு நான் மறுப்புத் தெரிவிக்கிறேன். தனக்குத் தெரிந்தவர்களைத் தெரியாதது

போல், எதுவித விளம்பரமும் அற்று வாழ்ந்த அவர் மரணமும், விளம்பரங்களால் கொச்சைப்படக் கூடாதென்பது என்னெண்ணம்.
“மரணமும் ஜனனத்தைபோல் வாழ்வினுட் கரைதல் தான். ஆகவே மரணமும் கொண்டாடப்பட வேண்டியதே. அது, உடலின் வழியனுப்பலின்றி வேறொன்றுமில்லை ஒருவனின் நினைவுகளை யாரும் புதைத்துவிட முடியாது” என்று அப்பாவை மரண வீடுகளுக்குச் செல்லுமாறு வலிந்துரைக்கும் போதெல்லாம் அவர்கூறும் வார்த்தைகள் தானிவை.

இனிநான் அழ வேண்டும். எங்கிருந்து என்னழுகை தொடங்குவது! அப்பாவை இறந்த பிறகு மிக அண்மையில் நின்று பார்க்கிறேன். அந்த இரவிலும் அவர் முகத்தில் ஓரிரு ஈக்கள். அந்த முகத்திலிருந்த உணர்வை என்னால் புரிய முடியாதிருக்கிறது. என்தோழன் நெஞ்சிலே கைவைத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான். அந்த விரல்களைத் தடவிப்பார்க்கிறேன். ஸ்மரணையற்று விறைத்துக் கிடக்கும் அந்த விரல்கள் எத்தனை பேரை இசையால் மகிழ்வித்திருக்கும், எத்தனை பேருக்கு இசையைக் கற்றுக் கொடுத்திருக்கும், எத்தனை பேரின் கண்ணீரைப் போக்கியிருக்கும், எத்தனை பேரிடம் கை நீட்டியிருக்கும்

“உன்நெஞ்சின் வடுக்களை உன் ஒரே மகன் காணக்கூடாதென்றா கைகளால் மறைத்து வைத்தாய்!” நான் புலம்புகிறேன் எனக்கவர் செய்தவைகளைச் சொல்லிச் சொல்லி அழுகிறேன்.

மீண்டும் வெளியேவந்து கதிரையில் அமர்கிறேன். இந்த அழுகையும், இனி அவர் நினைவுகளும் நிரந்தரமானவையல்ல என்பதும் எனக்குத் தெரியும். இன்னும் ஓரிரு மாதங்களில் நானென் இயல்பு நிலைக்குத் திரும்பி, சந்தோசங்களில் அவர் நினைவுகளைத் துறந்து, எப்போதாகிலும் துக்கங்களில் அவரை நினைத்து, இப்படியாக இனியவர் நினைவுகள் எப்போதாவது ஒரு தடவை நிகழப்போகிறவொன்றாக ஆகப்போகிறதே என்கிற வெப்புசாரமும் எனக்குள்.

எங்கள் வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவில் அந்த வேப்பமரம். பகல் முழுவதும் எந்த மரத்தைப் பார்க்கக் கூடாதென்றிருந்தேனோ அந்த மரத்தை வேண்டுமென்று பார்க்கிறேன். இருளில் தன் சுயத்தை மறைத்துக்

கொண்டு மூளியாக நிற்கிறது. பெரியதொரு இரகசியத்தை மறைத்துவைத்துக் கொண்டு எனது முகத்தைப் பார்க்க முடியாமல் அவஸ்தைப்படுவது போல் தெரிகிறது.

ஒரு மரம் நாட்டு வைபவத்துக்காகத் தனக்குத் தரப்பட்ட அந்த மரத்தை ஒரு பெப்ரவரி நாலில் நட்டு அதற்குச் 'சுதந்திரம்' என்றும் பெயரிட்டிருந்தார். நமக்குக் கிடைக்காதவொன்று, பெயரளவிலேனும் ஒரு ஜடமாகக் கிடக்கட்டும் என்ற நோக்கத்திலும் அப்பெயரை இட்டிருக்கலாம்.

அநேகமாக அந்த மரத்துக்குத் தெரிந்திருக்கும் அப்பாவின் சாவுக்கான காரணத்தை. அந்த மரத்தின் அடியில்தானே அவரின் குண்டு துளைத்த உடல் கிடந்தது. அவரூற்றிய தண்ணீரை மட்டுமல்ல, அவருடைய நேற்றையக் குருதியையும் குடித்து நிற்குமது, வாய்திறந்த சொல்லாதோ அப்பா நிரபராதியென்று.

அப்பாவுக்கு ஆயுதம் வைத்திருக்கும் எவரையும் பிடிப்பதில்லை. ஆயுதத்தோட வருகின்றவர்களுக்குத் தன் மோட்டார் சைக்கிளைக் கொடுப்பதுமில்லை, அவர்களை அதில் ஏற்றுவதுமில்லை. "தெரியாதாக்களுக்கு ஒரு பொருளக் குடுக்கிறதும், தெரியாதாக்கள வாகனத்தில ஏத்துறதும் குற்றம். அதனால இதுரெண்டையும் நான் செய்யப் போறதில்லை. எந்தக் கொம்பனெண்டாலும் பயமில்ல" என்று சொல்வார்.

இப்படித்தான் நான் அவருடன் ஒருதடவை மோட்டார் சைக்கிளில் செல்லும்போது, பக்கத்துச் சென்றியில் நின்றவன் பைசிக்கிளைக் கேட்க, அவனுடன் தர்க்கம் புரிந்து விட்டு பொலிசிலும் அறிவித்தவர். சென்றியைக் கடந்து சென்ற பெண்பிள்ளை ஒருவருடன் தகாத முறையில் பேச எத்தனித்த ஒருவனுடனும் தர்க்கப்பட்டதாகக் கேள்வி.

ஒரு மாலை, இனந்தெரியாத சிலரால் அவர் கூட்டிச் செல்லப்பட, நாங்கள் அழுது எழுப்பிய கூச்சல்களால், அவரை விட்டுச் சென்றனர். அவரை எந்தவித இணக்கத்துக்கும் கொண்டுவர எம்மால் இயலாமலிருந்தது.

"எத்தனைபேர இவனுகளால கொல்லேலும். முளுத்தமிழனையுமா?" அவரது வாதமும் நியாயமானதுதான்.

ஆனால் முந்திய தினம் நடந்தது கொடுமைதான். மாலையில் வழமைபோல் பாண் வாங்கச் சென்றவர் திரும்பவில்லை. 'இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டமை' என்கிற வழமையான வாசகத்துடன், பத்தோடு பதினொன்றாய் அவர்கதையும் முடிந்திருந்தது.

துடைத்து விட்டாற் போலிருந்த வானம் திடீரென்று சூல்கொள்ளத் தொடங்கியது. சவ அடக்கத்தை மழைக்கு முன்னர் நடாத்த வேண்டுமென்று அங்கலாய்த்தவர்களை அடக்குகிறேன். அடக்கு முறைக்கெதிராய் குரல் கொடுத்த அவருக்காய் மனிதர்கள் அழாவிட்டாலும், இயற்கையாவது அழுதந்த அழுக்கைப் போக்க வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

கல்வாரிமலையில் யேசுபிரான் இறந்தபோது கொல்கொதாவைக் குளிப்பாட்டிச் சென்ற மேகம் போலொன்று இந்த மண்ணையும் குளிப்பாட்டத் தொடங்கியது. காற்றும் மழையும் சேர்ந்து ஒரு பிரளயம் நிகழ்ந்தது. குழையடித்த பூசாரிபோல் மரங்கள் உன்மத்தங்கொண்டாட, என்கண்முன்னே அந்த வேப்பமரம் மண்ணோடு சாய்ந்து அப்பாவின் சாவுக்குச் சாட்சி சொல்லிக் கொண்டிருந்தது.

இந்தத் தீர்ப்போன்றே எனக்குப்போதும். நல்லாக்கள் செத்தா மழை பெய்யுமெண்டு சொல்வாங்க. இது வெறும் மழையில்ல பிரளயம். அப்பிடியெண்டா அப்பா ஒரு மிச்சம் நல்லாளாத்தான் இருந்திருக்க வேணும்.

**- 1998 -**



# அப்பா

அ.ச. பாய்வா

உருவம் வெறும் கோடுகளின் ஸ்திதியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் என் அப்பாவின் அந்தச் சட்டம்போட்ட புகைப்படத்தைப் பார்க்கிறேன். காலவிழுதுகளின் ஆக்கிரமிப்பால் காரை விழுந்த எங்கள் பழம் வீட்டுச் சுவரைப் போலவும், அப்பா என்கிற உணர்வே, செல்லாதவெறும் சம்பவங்களாய் எஞ்சியது மாதிரியும், என் அப்பாவின் அந்தப் புகைப்படமும்.

அவர் எடுத்திருந்ததே ஓரிரு புகைப்படங்கள் தானென்றாலும், அவைகளின் பின்புறத்தில் திகதியும் சம்பவமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கும். எங்களிடம் எஞ்சிய அந்தப் புகைப்படமும் ஐம்பதுகளில் எடுக்கப்பட்டதற்கான குறிப்புகளை என்றோபடித்திருக்கின்றேன். தனது ஆர்மோனியத்துக்கு முன்னால் ஒரு பகவதரைப்போல் உட்கார்ந்து "போஸ்" கொடுத்துக் கொண்டிருந்த அப்பாவும், அவர் எங்களுக்கடுத்தாய் நேசித்த அந்த ஆர்மோனியமும் இன்றில்லை.

அப்பாவுக்கு அப்படியொரு சாவு நிகழ்ந்ததே பெரிய அநியாயந்தான். எங்கோ நடந்த ஒரு குண்டு வெடிப்புக்கு, எங்கோ தனியாகவந்த அப்பா பலியாகிச் சிதறு தேங்காய் போல் கிடந்ததை நான் பார்த்திருக்கவே கூடாது.

இறந்தவன் குடும்பத்துக்கு ஒரு தொகையைக் கொடுத்துத் தன் பாவத்துக்குப் பரிகாரம் தேடிக்கொள்ளும் அரசாங்கமும், கொலையைக் கண்டித்துப் பெயருக்கு அறிக்கைவிடும் அரசியல்வாதிகளும், திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் தள்ளிவிடப்பட்ட உணர்வில் சனங்களும், இதுதான் இந்தத் தேசமென்பதைத் தோலுரித்துக் காட்டிக் கொண்டிருக்க, பாதுகாப்பாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் மட்டும் தேசியம் பேசிக்கொள்வார்கள்.

அப்பா அடுத்ததாய் நேசித்தது மாவலிகங்கையை, அவருக்கு அதில் வாஞ்சையென்றே கூற வேண்டும். பொல்கொல்லை வழியாய் ஆற்றுப்படுத்தப்படுமுன் அதன் பிரவாகமும், வெருகலம்பதியானை வழியில் நீராட்டிப் புனிதம் பெற்று முகத்துவாரத்தில் அதன் சங்கமும், கிளை ஆற்றில் பாய்ந்து கதிரவெளியின் குளங்களைச் சீராட்டி வளங்கொழிக்கவைத்த அதன் ஆளுமையும், அப்பா சொல்லித் தெரிந்தவைதான். இப்போதோ, சோமாலியத் தாயின் வரண்டுபோன மார்பகம் போல் மாவலியும், திட்டம் போட்டுத் தீட்டுப்படுத்தப்பட்ட, மூர்த்திதலம், தீர்த்தமென்று புகழப்பட்ட வெருகலம் பதியும், அவர் காணக்கூடாதவையாக இருக்க வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

எண்பதுகளில், நதிப்படித்துறையில் என்னையும் அருகில் வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் அதன் பிரவாகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார். மரங்களிலிருந்து பிரிந்து சுவாதீனமாகப் பறந்து கங்கையில் விழும் இலைகள், நீரருந்தவரும் எருமைகள், மீன்கொத்திப்பறவைகள் என யாவுமே அவருக்கு விருந்துவைப்பனவாம். எங்கள் பேச்சு எங்கெல்லாம் சென்றாலும் அவர் பார்வை நதிமீதுதானிருக்கும். அப்பொழுதெல்லாம் படிப்பு, உழைப்பு எலலாவற்றையும்விட இயற்கையை ரசிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்று. இயற்கையை ரசிக்கத் தெரிந்தவனால் அழிவு வேலைகளில் ஈடுபட முடியாது என்பதில் அவருக்கு ஆழந்த நம்பிக்கை, அவ்வேளைகளில் அவரது குரல் அமானுமஷ்யமாய்க் கேட்கும்.

இப்படியான ஒரு வேளையில் ஒரு தடவை நான் அவரிடம், நீரெல்லாம் ஒன்றுதானே...... நதிகளுக்கு ஏன் பெயர் சூட்டினார்களென்று கேட்க, முதலில் என்னை அற்பனைப் போல் பார்த்து விட்டுப் பின் பதிலும் சொல்லிருக்கிறார். அதுவெறும் நதியல்ல....... கங்கையென்று சிவனின் முடியிலிருந்து உதித்து இந்தப் பூமியைக் கழுவிச் செல்லும் புனித நீரென்று. நானும் அந்தக் கங்கையை அப்பாவைப்போல பலமுறை நேசிக்க முயற்சித்து தோற்றிருக்கிறேன். இன்று வரை எனக்கோ நதி ஒரு குறியீடாக ஓடிக்கொண்டிருப்பதாய்த்தான் பட்டது.

இடையில் ஓரிரு வருடங்களாக கல்வி நிமித்தம் கிராமத்தில் இல்லாததால் என்னில் ஏற்பட்ட மாற்றங்களும், ஊரில் ஏற்பட்ட மாற்றங்களும் எத்தனையோ இருந்தாலும், அப்பா மட்டும் மாறவில்லை. வயதால் கொஞ்சம் உடல் தளர்ந்துபோக....... இப்படித்தான் இறப்பதற்கு முந்தியதினம், அப்பா என்னை கங்கைப் பக்கம் தன்னை அழைத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டார். அவர் எதைக் காணக்கூடாதென்று ஆசித்தேனோ, அதனையே அவருக்குக் காட்டும்படி, அவரது வைராக்கியத்தின் முன் நான் தோற்றுப்போனேன்.

நாங்கள் முன்பு சென்றமரும் படித்துறை இராணுவ முட்கம்பிகளால் தடுத்துவைக்கப்பட, அதனை அண்டிய புன்னை மரமும், மதுர மரமும் சென்றிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. அப்பா இவைகளைக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அது தான் சலனமற்றிருந்தாரோ? தூர நின்றபடியே, 'அந்த மரங்களை உனக்கு ஞாபகமிருக்கிறதா'வெனக் கேட்டார். நான் தலையாட்டிக் கொண்டேன். பின் பேசமுடியாத வெப்புசாரத்தில் சிறிது மௌனம். எனக்கு ஒன்றுமட்டும் புரிந்தது அவர் என்னிடம் எதையோ யாசிக்க விரும்புகிறாரென்று.

தொடர்ந்து எங்கள் பேச்சும், இறுகிப்போன இரு மனோராஜ்யங்களை இணைக்க முயலும் ஒரு நூலைப்போலிருந்தது. அந்தப் பேச்சிலும் அப்பாதான் ஆக்கிரமித்தார். ஒரு நீண்ட பெருமூச்சின்பின் சொன்னார். "நானென்டா நினைக்கல்ல........ நாமெல்லாம் கனகாலம் சீவிப்பமெண்டு. இந்தக் கங்கையைப் பாக்கக்குள்ள எனக்கெண்டா ஏக்கமாயிருக்கு.

எத்தின தரம் இதில நான் ஒரு வெறியோட குளிச்சிருப்பன். ஆனா ஒவ்வொரு தடவையும்........ இந்த மாவலி என்னப் புதுத்தண்ணியால தான் குளிப்பாட்டிருக்கு. இதையும் பிரியத்தானே போறன். நான் மட்டும் கவிஞனா இருந்திருந்தா....."

சொன்னவர் கண்கள் பனித்தன. எனக்குள் ஏதோவொன்று நெக்குவிட்டுப்போன உணர்வு. அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டேன். இவ்வளவு நேரமும் கங்கையையே பார்த்துக் கொண்டிருந்தவர், முதன் முறையாக என் பக்கம் திரும்பினார்.
"எனக்கொண்டு செய்வியா மனே"

நான் அதற்கு மறுமொழி கூற முன்னர் அவரே தொடர்ந்தார்
"அந்தப் படித்துறையில நானொருக்காக் குளிக்கணும். கொட்டியாரத்துக் குமாரசாமிய ஒருக்காப் பாக்கணும்"

எனது இத்தனை வருட வாழ்வில் அவர் என்னிடம் கேட்ட முதலும் இறுதியுமான கோரிக்கை இதுவாகத்தான் இருக்க வேண்டும். முதலாவது,

இடையில் ஓரிரு வருடங்களாக கல்வி நிமித்தம் கிராமத்தில் இல்லாததால் என்னில் ஏற்பட்ட மாற்றங்களும், ஊரில் ஏற்பட்ட மாற்றங்களும் எத்தனையோ இருந்தாலும், அப்பா மட்டும் மாறவில்லை. வயதால் கொஞ்சம் உடல் தளர்ந்துபோக....... இப்படித்தான் இறப்பதற்கு முந்தியதினம், அப்பா என்னை கங்கைப் பக்கம் தன்னை அழைத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டார். அவர் எதைக் காணக்கூடாதென்று ஆசித்தேனோ, அதனையே அவருக்குக் காட்டும்படி, அவரது வைராக்கியத்தின் முன் நான் தோற்றுப்போனேன்.

நாங்கள் முன்பு சென்றமரும் படித்துறை இராணுவ முட்கம்பிகளால் தடுத்துவைக்கப்பட, அதனை அண்டிய புன்னை மரமும், மதுர மரமும் சென்றிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. அப்பா இவைகளைக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அது தான் சலனமற்றிருந்தாரோ? தூர நின்றபடியே, 'அந்த மரங்களை உனக்கு ஞாபகமிருக்கிறதா'வெனக்

கேட்டார். நான் தலையாட்டிக் கொண்டேன். பின் பேசமுடியாத வெப்புசாரத்தில் சிறிது மௌனம். எனக்கு ஒன்றுமட்டும் புரிந்தது அவர் என்னிடம் எதையோ யாசிக்க விரும்புகிறாரென்று.

தொடர்ந்து எங்கள் பேச்சும், இறுகிப்போன இரு மனோராஜ்யங்களை இணைக்க முயலும் ஒரு நூலைப்போலிருந்தது. அந்தப் பேச்சிலும் அப்பாதான் ஆக்கிரமித்தார். ஒரு நீண்ட பெருமூச்சின்பின் சொன்னார். “நானென்டா நினைக்கல்ல........ நாமெல்லாம் கனகாலம் சீவிப்பமெண்டு. இந்தக் கங்கையைப் பாக்கக்குள்ள எனக்கெண்டா ஏக்கமாயிருக்கு. எத்தின தரம் இதில நான் ஒரு வெறியோட குளிச்சிருப்பன். ஆனா ஒவ்வொரு தடவையும்........ இந்த மாவலி என்னப் புதுத்தண்ணியால தான் குளிப்பாட்டிருக்கு. இதையும் பிரியத்தானே போறன். நான் மட்டும் கவிஞனா இருந்திருந்தா.....”

சொன்னவர் கண்கள் பனித்தன. எனக்குள் ஏதோவொன்று நெக்குவிட்டுப் போன உணர்வு. அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டேன். இவ்வளவு நேரமும் கங்கையையே பார்த்துக் கொண்டிந்தவர், முதன் முறையாக என் பக்கம் திரும்பினார்.
“எனக்கொண்டு செய்வியா மனே”

நான் அதற்கு மறுமொழி கூற முன்னர் அவரே தொடர்ந்தார்
“அந்தப் படித்துறையில நானொருக்காக் குளிக்கணும். கொட்டியாரத்துக் குமாரசாமிய ஒருக்காப் பாக்கணும்”

எனது இத்தனை வருட வாழ்வில் அவர் என்னிடம் கேட்ட முதலும் இறுதியுமான கோரிக்கை இதுவாகத்தான் இருக்க வேண்டும். முதலாவது,


நிச்சயம் என்னால் செய்ய இயலாதவொன்று. தமிழனென்றாலே எதிரியாக எண்ணும் இந்த இனவெறியர்களுக்கு என் அப்பாவின் ஆத்மா புரியாது. இரண்டு, குமாரசாமியும் அப்பாவும் இரவில் வெகுநேரமாகியும் பேசி, வாடபோடா வென்று தங்கள் ஆப்த நட்புக்குள் தங்களையே மறந்திருந்த நாட்களை நான் கண்டிருக்கிறேன். இந்தத் தனிமையை விட, என்னுடன்

பேச இயலாத எத்தனையோ விடயங்களைக் குமாரசாமியுடன் மனந்திறந்து பேசிக்கிடைக்குமந்த அபூர்வ ஆனந்தத்துக்கு நான் தடையாயிருப்பவனல்ல. ஆனால் அப்பா, உயிருடன் இருப்பதாய்க் கருதிக்கெண்டிருக்கும் குமாரசாமியும், மணல் சேனையில் சுடப்பட்ட அறுபதுபேரில் ஒருவரென்பதை இவரால் தாங்கிக் கொள்ள இயலுமா என்பதைத்தான் நான் யோசிக்க வேண்டியவனாயிருந்தேன்.

அப்பாவைப் பார்க்காமலேயே ஒப்புதலுக்கு ஆமென்று தலையசைத்தேன். அப்போது அவரிடத்தில் உண்டான பிரகாசம் என்னை என்னவெல்லாமோ செய்தது. அவர், ஆறும் குமாரசாமியும்,...... நானும், வேறு எதுவும் நிரந்தரமில்லை என்பதை உணர்ந்துதான் இதையெல்லாம் யாசித்தாரோ! இலேசாய் தூறல்போடத் தொடங்கியது. சருகுகளில் தூறலின் சப்தஸ்வரங்கூட இதமாகத்தான் இருந்தது. தூறலிலிருந்து அவரது தலையை மறைக்க நான் முயற்சித்த போது, 'என்னை நனையவிடு' என்பதுபோல பாவனை செய்து, தூறலைக் கைகளால் ஏந்தி ஏந்திப் பரவசப்பட்டது அந்தக் குழந்தை.

அப்பாவும் நானும் நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்த அந்த இறுதி மாலையின் இருள், ஒரு மாயையைப் போலப் பரவி எங்களை மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

**- 1997 -**



# ஆசாரங்கள்

அ.ச.பாய்வா

சோளகம் தன் ஆங்காரத்தின் இறுதிவரிகளை எழுதிக் கொண்டிருக்கும் ஓர் புரட்டாதி மாதம். மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கெல்லைக் கிராமமான கதிரவெளியின் ஓர் ஓலை வீட்டுக்குள், வேதக்கார வாத்தியாரென்றும் சின்னத்துரை வாத்தியாரென்றும் அழைக்கப்பட்ட உலகத்தை சுருட்டித்தன் சுங்கானுக்குள் வைத்திருந்த குருசு வாத்தியார் ஆறடிப் பலகையில் தன் இறுதிப் பயணத்துக்காகப் படுத்திருக்கிறார். சராசரி தமிழாசிரியனாய் சொற்ப சம்பளத்தில் வாழ்ந்த அவரின் பொருளாதாரம், பெரிதாய் சாதிப்பதற்கு இடந்தரவில்லை என்பதற்கு அவரது சிறிய மண் வீடே சாட்சியாயிருந்தது. சித்திரை வருடத்துக்கு வெளிச்சவர் மீது இரண்டு பிரிவாகப் பூசப்பட்டிருந்த வெள்ளை, சிவப்புக்களியும், அதன் மீது ஆங்காங்கே வரையப்பட்டிருந்த சிறிய கோலங்களும், வாத்தியார் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாபுரத்தைச் சேர்ந்தவரென்றாலும், கதிரவெளியில் திருமணமானதன் பின் அதன் கலாசார, பாரம் பரியங்களுக்குள் எவ்வாறு இரண்டறக் கலந்தாரென்பது இன்றுவரை அவரை அறிந்த யாவருக்கும் அதிசயமாயிருந்தது.

"கொட்டியாபுரத்தில் இருந்து என்ர ஆக்கள் வந்து எனக்கெல்லாம் செய்வானுகள். நீ தங்கம் ஒண்டுக்கும் கவலப்படாத" என்று சாவதற்குமுன் சேடம் இழுக்கும் நேரத்திலும் மனைவியிடம் கூறியதும், 'மீன் செத்த அன்றே சினையும் செத்துப்போச்சு" என்று அவரால் மிகவும் நேசிக்கப்பட்டமருமகன் செல்லப்பாக்கியம் உட்பட ஓரிரு உறவுகள் வந்ததும் தெரியாது' போனதும் தெரியாது என்ற நிலையிலும் அந்த ஏழைக்கிராமமே வாத்தியாரைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

தான் இறுதியாகக் கற்பித்த கதிரவெளியில் அவரது மனைவி இறந்து அவர் தபுதாரனானதும், அதே ஊரில் விதவையான அன்னமுத்துவைக் கைப்பிடித்து தன் பிள்ளைகள் போலவே அவளது பிள்ளைகளையும் நேசித்து வளர்த்ததையும் யாரால் தான் மறக்க முடியும். அது தவிர பாடசாலைக்கு வராத பிள்ளைகளை வீடுவீடாயத் தேடிச்சென்று கூட்டி வந்து எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்ததையும் ஊரால் மறக்க முடியுமா? இன்று கூட கையெழுத்துப் போடும் ஒவ்வொருவனும், "இது குருசுவாத்தியாரிட்ட பிச்சை" என்றுதான் சொல்வார்கள்.

வேட்டியும், ஆள்வாரமும் சால்வையுமாக இரண்டு கைகளையுயம் வீசிக் கம்பீரமாக நடக்கும் அவரைப்போன்ற அந்தநாள் ஆசிரியனை நினைத்துப் பார்ப்பவர்களால் இந்த நாள் ஆசிரியர்களை ஏதோ ஏற்றுக்கொள்ள இயல்வதில்லை. அந்தக் கம்பீரம் எல்லாம் அந்நாட்களுக்குச் சொந்தமானவைதான்.

தலைமழைக்கு முன்னர் பழஞ்சேனை வெளியாக்குவதிலும் புதுக்காடு பற்ற வைப்பதிலும் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் சாவியளங்கேட்டு, மாலையானதும் அதிக எண்ணிக்கையில் வரத்தொடங்கினர். வீட்டுக்குள் ஒன்றும் வெளியில் ஒன்றுமாக பெற்றோமெக்ஸ் விளக்குகள் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. வாத்தியாரின் குழந்தைகள் அழுதகளைப்பாலும் பசிக்களைப்பாலும் உறங்கிப் போயின. அன்னமுத்து மட்டும் தலைமாட்டில் உட்கார்ந்து ஓயாது அழுது கொண்டிருந்தாள். தனக்குக் கிடைத்த இரண்டு வாழ்க்கைகளும் தன்னைவிட்டுப் போனதன் ஆற்றாமை அவளவது ஒவ்வொரு ஒப்பாரியிலும் பிரதிபலித்தது.

'எங்களைத் தனியா விட்டுட்டுப் போறீங்களே' என்றவள் பிலாக்கண மெடுக்க, "நாங்கெல்லாம் இருக்கக்க, ஏனக்க தனியாப் போனியென்டு கத்திற......" என்றவள் தங்கை காளி சொல்லியும் அன்னமுத்து எதையும் ஏற்றுக்கொள்வதாய் தெரியவில்லை. அன்னமுத்து என்ன, தான் பிறந்த ஊரைப்பற்றித் தெரியாதவளா இல்லை தங்கள் குடும்பங்களையே கொண்டு நடாத்த வக்கில்லாத இனசனத்தால் தன்னையும் தன் குடும்பத்தையும் எப்படிப் பராமரிக்க இயலுமென்பதை அறியாதவளா? ஆனால், "அத்தான் செய்த புண்ணியங்க ளெண்டாலும் உன்ட குடும்பத்தக் காப்பாத்தும் அக்க" என்று அவள் தம்பி போதையில் சொன்னாலும் அதற்கு அர்த்தமிருப்பதாக உணர்ந்து கொண்டாள்.

புண்ணியங்களென்றதும் அன்னமுத்துவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. வீடுதேடி யார் எந்த நேரத்தில் வந்தாலும் 'குடுறி குடுறி ஏழைச்சனங்கள்', என்று எதையாவது கொடுத்து விடுவாரே.

குருசுவாத்தியார் அன்னமுத்துவைக் கைப்பிடித்த புதிது. கதிரவெளியிலி ருந்த சிறிய உபதபாற்கந்தோருக்குப் பாடசாலையிலிருந்து நாள்தோறும் கடிதங்கள் பார்க்கப்போவோர். அங்கு அந்த நாட்களில் தபாற் சேவகர் என்று எவருமில்லை. முத்திரை குத்துவதிலிருந்து தபால்பஸ்சுக்கு தபாற்பை கொடுப்பதுவரை சகலமும் உபதபாலதிபர்தான் செய்ய வேண்டும்.

அப்படிச் சென்று தபால் வண்டியை எதிர்பார்த்து நின்ற ஒருநாள், கதிரி கந்தோருக்கு அருகில் இருந்த பொதுக் கிணற்றடியில் வெகுநேரமாக குடமொன்றை வைத்துக் கொண்டு நின்றதைக்கண்டு அருகிற்சென்று விசாரித்த போதுதான், அவள் வண்ணார் அம்பட்டர் கிணற்றுத் துலாவைத்தானும் தொடக்கூடாதென்றும், தங்களைத் தவிர்ந்த ஊரார் எவராவது வந்து

தண்ணீரள்ளித் தரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டுமெனக் கூறித்தெரிய வந்தது.

இது வாத்தியாருக்குப் புதுமையாகவும் வேதனையாகவுமிருந்தது. ஆக மங்கள் என்று சொல்லி, அறியாத சனங்கள் வேறுவிதமாய் அவற்றுக்கு அர்த்தங் காண்பிக்கிறார்களென்பதால் ஒரு பக்கம் இந்தப் படிப்பறிவற்ற சனதத்தின் மீது ஆத்திரமும் வந்தது அவருக்கு. யூதர்கள் கீழ்த்தரமாக மதிக்கும் அந்தச் சமாரியப் பெண்ணிடமே தண்ணீர் வாங்கிக் குடித்த இயேசுவை வணங்குபவரல்லவா அவர்.

'யூதனாகிய நீர் சமாரியப் பெண்ணான என்னிடம் தண்ணீர் கேட்பதெப்படி?' என்றவள் கேட்க 'கடவுளுடைய கொடை இன்ன தென்பதையும் உன்னிடம் தண்ணீர் கேட்பவர் இன்னாரென்பதையும்....' எனவிரிந்து செல்லும் பைபிள் வசனங்கள் அவர் படித்தவை மட்டுமல்ல, பரீட்சித்தவையுங்கூட, மூன்று பிள்ளைகள் பெற்றும் மசுவாது என்ற நிலையில் வாழ்ந்தாராயினும், எந்தச்சந்தர்ப்பத்திலும் தன் திரிகாலச் செபங்களையோ, இராச்செபங்களையோ சொல்ல மறந்தவரல்லர். அதே போன்று இந்துக்களுக்குச் சமானமாக தேவாரம் திருப்பாசுரங்களை மனைஞ் செய்து உருக்கமாகப் பாடவும் வல்லமை பெற்றிருந்தார்.

இவரா இந்தச் சிலரின் வைராக்கியத்துக்குப் பலியாவார்? கட்டாடிக் குடிக்குக் கிணறு அமைத்துக் கொடுத்ததற்கு நன்றியாகக் கதிரி, வாத்தியாருக்கு மிகவும் விருப்பமான புகையிலையை எப்போதாவது கொண்டு வந்து கொடுக்கத் தவறுவதில்லை. அந்தக் கதிரிகூட வாத்தியாரின் கால்மாட்டில் ஊனுறக்கமின்றி அழுத வண்ணமிருந்தாள்.

விடிந்ததும் சவஅடக்கத்துக்கான முஸ்த்தீப்புகளில் மைத்துனன் சீனி இறங்கினான். இந்துகளின் முறைப்படி வாழை, தென்னங்குருத்து முதலியன கொண்டு பாடையும் தயாரானது. என்ன நினைத்தாளோ அன்னமுத்து வெளியில் வந்து, 'சுவாமியாரும் வரமுடியாதெண்டு சொன்னாலும் அவர அவர்ர வேத முறப்படித்தான் தாக்க வேணும் ஆராவது வாகரைக்குப் போய் அங்க வேதக்காறாக்களுக்கிட்ட எப்பிடிப் பாட செய்யிறதெண்டு விசாரிச்சு வாங்க நம்மட முறைப்படி நான் செய்ய உடமாட்டன். எல்லோரும் என்ன மன்னிச்சுக்குங்க' என்று முடிவாகக்கூறி வீட்டினுள் சென்று விட்டாள். அதனை

எதிர்க்க யாருக்கும் திராணியில்லாததால் பாடை பிரிக்கப்பட்டது. ஒரு வேளைமூதூர் வேதக்காரர் குருத்தைக் கோவிலுக்குள் கூட அனுமதிப்பதில்லை என்கிற ஐதீகத்தை வாத்தியார் அன்னமுத்துக்கு எப்போதாகிலும் கூறியுமிருக்கலாம்.

எனவே வாகரையலிருந்து விபரங்கள் அறிந்து, தட்டி தயாரிக்கப்பட்டு முதிரையாற் செய்யப்பட்ட பெட்டியில் பெயர், பிறப்பு, இறப்பு ஆகிய முகாந்திரங்கள் எழுதப்பட்ட சிலுவை முன்செல்ல, கதிரவெளிக் கிராமத்துக்கு முற்றிலும் புதிதான ஓர் பிரேத ஊர்வலம் ஊர்மயானத்தை நோக்கி நகர்ந்தது.

அடுத்து என்ன செய்வதென்பதறியாத அன்னமுத்து தனது சமய முறைப்படி மூன்றாம் நாட்கிரியைகளைச் செய்யத் திராணியற்று, ஓரிருவருடன் வாத்தியாரின் மிகவும் பிரயமான மகன் நவரெத்தினராசாவை சவக்காலையை தரிசித்து விட்டாகிலும் வருமாறு அனுப்ப, சவக்குழியில் நடப்பட்டிருந்த சிலுவை உடைக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டுக் கிடந்ததைக் கண்டு, தந்தை இறந்ததைவிட மேலும் துக்கமடைந்து அன்று முழுவதும் அழுதான்.

அன்னமுத்துவுக்குத் தெரியும் இதையார் செய்திருப்பார்களென்று. ஆசாரங்களுக்குப் பலியான ஒருவரின் புதிய சரிதம் அங்கு எழுதப்பட்டதை அங்கீகரிக்காத அன்னமுத்து மகனிடம், பென்சன் எடுத்த முதல் வேலையா அப்புவுக்கு கல்லால் கல்லற கட்டுவம் என்று சொல்ல, தனது அப்பாவுக்கு அழிக்க முடியாத கல்லறை ஒன்று அமையப் போகின்றதென்ற அசையாத நம்பிக்கையில் நவரெத்தினராசா உறங்கிப்போனான்.

**- 1996 -**



# உரம்

செ. குணரெத்தினம்

கடற்பரப்பை நோட்டம் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல ஒரு சிறிய குடிசை.

குருத்து மணலில் கால்களைப் புதைத்தவாறு சின்னானும் கடலையே பார்த்துக்கொண்டிருக்கிறான்.

கடல் ஈரடியாகக் கிடக்கிறது.

கொஞ்ச நாளாக அவன் தோணி தள்ளவில்லை.

குசினிப் பக்கம் அவன் மனைவி செண்பகம் எதையோ சட்டியில் போட்டு, வேகவைத்துக் கொண்டிருக்கிறாள்.

கடல் வெறிச்சோடி அந்தக் கிராமத்தைப்போல அடங்கிக் கிடக்கிறது.

மருந்துக்குத்தானும் ஒரு தோணிக் கறுப்பையும் காண முடியவில்லை.

சிலுசிலவென்ற மெலிதான கடல் காற்று திடீரென உருவாகிப் பக்கத்தில் நின்ற தாழை மரங்களைக் கலகலப்பாக்க, சின்னான் பெருமூச்செறிகிறான்.

"என்னது விடிஞ்சசாமத்துக்கு ஒரே பெருமூச்சி? ஒழும்பித்து வாங்க சாப்பிட" என்று செண்பகம் அவனை அழைத்ததும் மெல்ல எழுந்து, கால்களில் அப்பிப்பிடித்திருந்த குருத்து மணலைத் தட்டி விட்டுக்கொண்டு அவளுக்குப் பக்கத்தில் போய் குந்திக் கொள்கிறான். இரெண்டு ஆட்டாமா ரொட்டியும், பழைய சூடைமீன் குழம்பும் அவன் முன்னால் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றன.

"என்னடி செண்பகம் எத்தனை நாளைக்குத்தான் இப்படி இந்த ரொட்டியத் திண்டுற?"

"தின்னுங்க! தின்னுங்க! இன்னம் ரெண்டொரு நாளையில் குழப்பம் தீந்துபோகும், பிறகு கடலுக்குப் போக உடுவானுகள், நல்ல செல்லாபத்தியமாக உழச்சித் தின்னலாம்."

எனக்கெண்டால் நம்பிக்கையில்ல. இந்த நாட்டுக் குழப்பம் இண்டைக்கு நாளைக்குச் சரியா வராது. கிடக்கிற ஆமிமாரெல்லாரையும் கொண்டு வந்து குமிச்சிக் போட்டானுகள். இந்த நாளையில் அவனுகள் ஒழும்பிப் போவானுகளெண்டு நான் நினைக்கல்ல!

"நீங்க ஒண்டுக்கும் யோசிக்காதீங்க. நாளைக்கிண்டைக்கு நிலம சீராப்போகும். ஊர்ச்சனம் மட்டுமில்ல ஆமிக்காரனுகளும் மீனில்லாமச் சரியான கஸ்டப்படுறானுகளாம்."

சின்னானும் செண்பகமும் பேசியபடியே காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டார்கள்.

* * *

சின்னானுக்கும் செண்பகத்திற்கும் இரெண்டு பெண் பிள்ளைகள். இருவரையும் அவர்கள் வாழ்ந்த கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டு, இவர்கள் கடற்கரைப் பக்கமாகக் கொடுத்த கொலணி வளவுத்துண்டில் வந்து குடியேறி ஆறு வருடங்களுக்கும் மேலாகப் போய்விட்டது.

இந்தக் கடற்கரைக் கொலனி வளவிற்கும் அவர்கள் முன்னர் வாழ்ந்த அந்தக் கிராமத்துக்கும் அவ்வளவு தூரம் இல்லை. வேகமாக நடந்தால் ஒரு பதினைந்து இருபது நிமிடங்களில் போய்ச் சேர்ந்து விடலாம்.

இரண்டு பிள்ளைகளின் மாப்பிள்ளை மாரும் சின்னச்சின்ன உத்தியோகம். ஒருவன் கச்சேரியில் பீயோன், அடுத்தவன் காகிதத் தொழிற்சாலையில் வைக்கோல் வெட்டும் இயந்திரப் பகுதியில் வேலை.

அக்கம் பக்கமாக இருவரது வீடுகளும் இருக்கின்றன. "ஒண்டடிமண்டாடி" யாகக் கிடக்க சின்னான் விரும்பவில்லை. இரெண்டு மருமக்களும் குடிகாரர்கள். மாமன் மாமி என்ற மரியாதை இல்லாமல் பேசுவார்கள். குடித்தால் மாத்திரம் தான் இப்படி, இல்லாவிட்டால் வீட்டில் அவர்கள் நிற்பதுகூட எவருக்கும் தெரியாது. நமக்கேன் வீண்வம்பு கலியாணத்தைக் கட்டிக்கொடுத்தால் அவர்களுக்குத் தானே பிள்ளைகள் சொந்தம். அடித்தாலும் எல்லாம் அவர்களோடு இருக்கட்டும் என்ற எண்ணத்தில் சின்னான் செண்பகத்தையும் கூட்டிக்கொண்டு இங்கே இந்தக் கடற்கரைக் கொலணிக்கு வந்துவிட்டான்.

கடற்தொழில் செய்வதில் சின்னான் விண்ணன். வயது போய்விட்டாலும் வாலிபனைப் போல் தோற்றம். தலை நரைத்திருந்தாலும் அலைபாயும் கடலில் இவனைப்போல தோணிவிட எவராலும் முடியாது. தனியாகவே தோணியேறித் தொழில் பார்ப்பான். ஒன்றைவிட்டு ஒரு நாளொன்றாலும், பிடிக்கும் மீன்களில் இரெண்டு பிள்ளைகளுக்கும் கொண்டுபோய்க் கொடுத்து, பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்த்துவிட்டு வரும்போது தேவையான கறிபுளி அரிசி சாமான்களை வாங்கிக் கொண்டு வருவான். பிள்ளைகளைப் பார்க்காமல் இருக்கவே மாட்டான்.

பிள்ளைகளைப் பார்க்கப்போனவிடத்தில் மருமக்கள்மார் ஏதாவது முஸ்பாத்திக்கு வாங்கிக் கொடுத்து ஓவராகிவிட்டால் செண்பகம் ஓடிச்சென்று கூட்டிக் கொண்டு வருவாள். கிராமத்தில் இவர்களுக்கு சீவிய உருத்து வைத்து எழுதப்பட்ட ஒரு சிறு துண்டுப் பூமி கிடக்கிறது. அதற்குள் இரண்டு தென்னைமரங்களும் ஒரு வெள்ளைக் கொழும்பான் மாமரமும் நிற்கின்றன. வருசாவருசம் மாமரம் காய்த்து, ஏதோ ஒரு சிறு செலவைச் சமாளிக்க சின்னானுக்கு வழிகொடுக்கும். நாட்டில் குழப்பம் ஏற்படுவதற்கு முன்னர், ஒரு முறை சின்னான் வழக்கம் போல பிள்ளைகளுக்குக் கறிகொண்டு போன போது நன்றாகக் காய்த்துக் கிடந்தது. இப்போது நன்கு முத்தியிருக்கும்.

நாட்டில் குழப்பம் வந்ததால் பிள்ளைகளைப் போய்ப் பார்க்க முடியவில்லை, மாமரத்தைப் பார்த்துவர இயலவில்லை. தொழிலும் தடைப்பட்டு விட்டது.

முத்திரைக் கூப்பனுக்கு அரிசி, மா வாங்குவதற்கும் கோப்பிறட்டி திறக்க வேண்டுமே.

மயான அமைதியாக எல்லா இடங்களும், இல்லாத பயத்தை எல்லோருக்கும் உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

* * *

ரொட்டியும், பழைய கறியும் வயிற்றை நிரப்பிக் கொண்டது.
அணைத்து வைத்திருந்த சுருட்டைத் தட்டியெடுத்து சின்னான் பற்றவைத்துக் கொண்டான்.

செண்பகமும் குசினியை ஒதுங்கவைத்து விட்டு அவன் பக்கத்தில் குந்திக் கொண்டாள்.

வெயில் சுள்ளென்று எறித்தது.
தூரத்தில் கடற்கரைப் பக்கமாக இரெண்டோரு வெடிச் சத்தங்கள் கேட்டன.

"கடவுளே ஆரோ எவரோ தெரியாது! சுட்டுப்போட்டானுகள் போல கிடக்கு" என்று பதறியபடி எட்டிப் பார்த்தாள் செண்பகம்.
"அவனுகள் புள்ளுச் சுடுறானுகள். அந்தாபார் கிழக்குப் பக்கமா அஞ்சாறு புள்ளுப் பறக்குது" என்றான் சின்னான்.
"ஓ புளுத்தான் சுடுறானுகள்" என்றாள் செண்பகம்.
"ஒவ்வொரு நாளும் இதே கததானா உனக்கு? நான் என்னத்தையோ யோசிக்கிறன். நீ என்னத்தையோ சொல்லிப் பயம் காட்:டுறா."
"என்னத்த யோசிக்கிற? நீங்க ஒருக்கா அங்கபோய்..."
"எங்க"
"அங்கதான் நம்மட மாமர வளவுக்க போய் கிடக்கிறத ஆருக்கெண்டாலும் ஆஞ்சி குடுத்துப் போட்டு அரிசியப் புளிய வாங்கித்து பிள்ளைகளையும் பார்த்துத்து வாங்க!"
"போய் வாறத நினச்சாத்தான் எனக்கு கிருமி கலங்குது!"
"உங்கள ஒண்டும் செய்ய மாட்டானுகள், இப்ப அந்த ஆமிமாரு நம்மட சனங்களோட நல்லம். அதனாடிப் பயமில்லாமப் போகலாம்."

"ம்.. சரி போற உசிர் ஒரு நாளைக்குத் தானே போகும். எங்கந்தத் துவாய்? எடு ஒருக்காப் பெயித்து வாறன். செண்பகம், மாமரத்தோட சேர்த்து விக்கவா இல்லாட்டி ஆஞ்சி பெட்டிக் கணக்கில குடுக்கவா?"

"இந்த நாளையில் அப்பிடியெல்லாம் ஆர் வாங்கப்போறா? நீங்க போற வழியில இவன் நம்மட சந்திரன்ட கடையில போய் மாங்கா ஆஞ்சி பழுக்கவெச்சித் தாறம். எடுப்பீங்களாண்டு கேட்டுப்பாருங்க, அவன் எடுப்பான். அப்பிடியெண்டால் முத்தல் மாங்காயெல்லாத்தையும் ஆஞ்சி, மூத்தவள்ற வீட்ட மடுவெட்டிப் பழுக்கப்போட்டுத்து, சந்திரனிட்ட மாங்கா விக்கிற காசில கழிக்கலாம் எண்டுபோட்டு கறிபுளிச் சாமான்கள் வாங்கித்து வாங்க."

"இதென்ன ஊரோணப்பட்ட வேல? ஏனக்கேலாது. நீயும் வா. ரெண்டு பேரும் போனாத்தான் கெதிபண்ணி வரலாம்."

"சரி சரி வாங்க போவம்"

சின்னானும் செண்பகமும் குடிசையைச் சாத்தி மூடிவிட்டு நடந்தார்கள். தெரு நீளத்திற்கும் ஒரே காக்கிச் சட்டை நிறங்கள் தான். என்றாலும் சனநடமாட்டம் இருந்தது.. அவர்கள் பயந்த அளவிற்கு எதுவும் பெரிதாக இல்லை.

இளைக்க இளைக்க இருவரும் நடந்து சென்று சந்திரனின் கடைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சந்திரனின் முகத்தில் அதே சிரிப்பு. "என்ன சின்னாண்ண, கனநாளைக்குப்பிறகு ஜோடியாகக் கால்மாறி வந்திருக்கிறயள்?" என்று சிரித்து சிரித்துக் கேட்டான்.

சின்னானும் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு விசயத்தைக் கக்கினான்.

"அதுக்கென்ன நீங்க பழுக்கவச்சிக் கொண்டுவாங்க. இப்ப உங்களுக்கு என்ன வேணும்?"

"நாங்க மாமரத்துப் பணிவிடைகள முடிச்சுப் போட்டு வரக்குள்ள வாறம் சந்திரன்"

"ஓமோம் நீங்க வாங்க"
அந்தளவில் அவர்கள் இருவரும் கடையைவிடடு வெளியேறிக் கடைக்காரச் சந்திரனைப் போற்றிப்புகழ்ந்தபடியே மாமர வளவிற்குள் வந்து சேர்ந்தார்கள்.

மாமரம் சொலித்துப் போய்க்கிடந்தது.
"வா மூத்தவளிட்டப் போய் 'துறட்டிய' வாங்கிக் கொண்டு வருவம்" என்று செண்பகத்தை அழைத்துக் கொண்டு சினானனும் செண்பகமும் உள்ளே நுழையும் போதே "அம்மம்மா, அம்மப்பா" என்றபடி பேரப்பிள்ளைகள் ஓட்டத்தில் வந்தார்கள்.

"எங்கபிள்ளைகள் அம்மாவைக் காணல்ல?"
"அம்மா, சின்னம்மா வீட்ட அரிசி வாங்கப் போயிருக்கா"
அவ்வளவுதான் தெரியும் மாமரத்தில் யாரோ எறியும் சத்தம் கேட்டது.

"எவண்டாவன்" என்றபடி சின்னான் ஓடினான். இரெண்டு மூன்று பெடிகள் மாமரத்தல் ஏறிக்கொண்டிருக்க கீழே இன்னும் சில பெடிகள் நின்று மாங்காய்களை எறிந்து விழுத்திக் கொண்டிருந்தார்கள்.
காய் பிஞ்சென்று கொட்டுப்பட்டுக் கொண்டிருந்தன.
சின்னானுக்கு உதிரம் கொதித்தது.
"எவண்டா மாமரத்தில! இறங்கடா! மாமரக்காறாக்கள் நாங்க இருக்கிறம், எங்கட்ட ஒருவாத்த கேக்காம ஆர்ரா உங்கள இப்பிடிப்போட்டு உதுத்தச் சொன்னவன்?'
எல்லாப் பொடிகளுமே அந்தக் கிராமத்துப் பொடிகள்தான். வயதிற்குக் கூட ஒரு மரியாதை கொடுக்காமல் நீ யென்று பேசினார்கள்.
"தம்பிமாரே தயவு செய்து இறங்குங்க. இல்லாட்டி செய்வன் வேல!" என்றான் சின்னான்.
"இஞ்ச, வெருட்டாத கண்ணயோ, மரத்தில மாங்கா இருந்தா ஆயத்தான் செய்வம். நீ காவல் என்னவும் காத்திருக்க வேணும். அதப்போய் கொண்ட கட்டின பொலிசுட்ட சொல்லு." ஒருவன் சொல்ல மற்றவர்கள் சிரித்தார்கள்.
"இப்பிடியா போட்டு பிஞ்சி காயெல்லாத்தையும் உதுத்திற. எனக்கிட்டக் கேட்டிருந்தா நல்ல முத்தல் காயாப் பாத்து நோகாமல் ஆஞ்சி தந்திருப்பனே!"

"டேய் மச்சான், இவனுக்கு சரியான பாடம் படிப்பிக்க வேணும்! டேய், பிடிடா கிழவனை. செய்வம் வேல. சும்மா கிடக்கிற மாங்காய நாங்க திண்டா என்னடா" என்றதும், சின்னானுக்குக் கோபம் ஏறியது. சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த செண்பகம், "உட்டுப்போட்டு இஞ்சால நீங்க வாங்க!" என்று கூப்பிட்டாள்.

இதற்கிடையில் அரிசி வாங்கப் போன சின்னானின் மூத்தவளும் அங்கே வந்துவிட்டாள்.

"ஏனப்பு நீங்க அவனுகளுக்கு ஏசின நீங்க. இந்தக்காலத்துப் பிள்ளையளோட கதைக்கலாமா? அதோட நம்மட இவருட சொந்தக்காரனுகள் எலுவா" என்டாள் மூத்தவள்.

“சொந்தமும் பந்தமும்! ஏவனென்டாலும் இப்படி வேல செய்யிற முறையா? இவனுகள்ற வளவுக்க நான் போய், மரத்தில ஏறலாமா? அது நீதியா?”

“நீதி நியாயம் பாக்கிறதுக்கு இது காலமல்ல. என்ன கொடும செய்தாலும் பாத்துக் கொண்டு இருக்க வேணும்.”

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே டப்டப் பென்ற சத்தத்தோடு சிலர் ஓட்டத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

“எங்கடா அவன்?” என்னவென்று புரிந்து கொள்ளமுடியாத நிலையில் ஒரே கூட்டம். “பிடி. அவன்தான் அவன்தான்” என்ற குரல்கள். காக்கிச் சட்டைகளின் இடையே சின்னான் இரத்தம் உறைந்து போன நிலையில் நின்றான்.

செண்பகம் அவள்மகள், பேரப்பிள்ளைகள் எல்லோருமே அழுதழுது சின்னானை விடுவிக்க முயற்சித்தார்கள். எதுவும் எடுபடவில்லை.
சின்னானை அடிக்குமட்டும் அடித்து உதைக்குமட்டும் உதைத்து இழுத்துக் கொண்டு போய் அவன் வளர்த்த மாமரத்தில் கயிற்றால் வரிந்து கட்டினார்கள். இடையே ஏற்பட்டது என்னவென்று புரியாத குழப்பத்திற்கு மத்தியில், சின்னானை அடித்து உதைத்த காயங்களிலிருந்து வடிந்த இரத்தம் மாமரத்திற்குப் பசளையாக இறங்கிக் கொண்டிருந்தது.

**- 1995 -**



# நட்பொன்று நாடகமாகிறது

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

"சுந்தரி மாமி... சுந்தரி மாமி..." மோகன் கூப்பிட்ட குரலுக்குச், சுந்தரி இவ்வளவு நேரம் சுணங்கமாட்டாள். ஒன்றில் அவள் வெளியில் போயிருக்க...

கொல்லைப் பக்கமாக இருந்துவந்த தேவகி அவன் கண்ணிற் பட்டாள். அவன் சிந்தனை தடைப்பட்டது.

"தேவகி"

அப்போதுதான் அவளும் அவனைக் கண்டாள். வாயில் விரல் வைத்துச் சத்தம் போடாமல் இருக்கச் சைகை காட்டினாள். அவனுக்குப் புதுமையாக இருந்தது.

'என்ன விஷயம்?' என்று அவனும் பரிபாஷையிலேயே கேட்டான். கொண்டுவந்த விளக்குமாறை அருகிலிருந்த மாமரத்தில் சாய்த்துவிட்டு அருகில் வந்தாள். அவனும் இரண்டடி நெருங்கினான்.

"சத்தம் போடாதீங்க... அம்மாவுக்கு இண்டைக்கு ஏறிற்றுது! என்ன மாராயமோ தெரியல்ல... அண்ணா சாப்பிட வந்த நேரம் சம்பல் ஏச்சு... அவன் சாப்பிடயும் இல்ல... வெளிக்கிட்டுப் போனவன் இன்னும் வரயில்ல... இவவுக்கு இன்னும் கொதிப்படங்கல்ல... படுக்கிறா..."

"என்னது எண்டைக்குமில்லாத புதினமாக அல்லோ இருக்கு..."

"எனக்குந்தான்... ஒண்டுஞ் சொல்லுறாவும் இல்ல... ஊர்சுத்துறான்... கூத்தாடுறான்... நாடகமாடுறான்... இதுதான்கத... இதென்ன... புதுசா...? இண்டைக்குப் பேசுற அளவுக்கு என்ன நடந்திச்செண்டுதான் விளங்கயில்ல..."

"இப்ப அவன் எங்க போயிருப்பான்? அங்க எல்லாரும் காத்துக் கொண்டு நிக்கிறான்கள்... இவனே எல்லாத்தையும் தொடங்கிப் போட்டு இப்படிச் சொல்லாம கொள்ளாமல் போறதெண்டால் எப்படியாம்?"

"பாவம் அண்ணா... அவன் எதிர்பார்க்கயில்ல... அம்மா என்னவோ எல்லாம் சொல்லி ஏச... அவன் ஏங்கிப் போனான். நானும் மனுசி இப்புடி ஏசினத முன்ன கேட்கவேயில்ல..."

"அவன் எங்கே போயிருப்பானெண்டும் தெரியுதில்லியே... இவ்வளவு நடந்தும் வீட்டுக்குக் கூட வர இல்ல... ஒரு வார்த்த சொல்ல இல்ல..."

தேவகி ஒன்றுமே பேசவில்லை... அவள் மனதுக்குள் இலேசான ஒரு அச்சம் கவனமாகத் துளிர்விடத் தொடங்கியது. அதை வளரவிட அவள் விரும்பவில்லை... அவன் மடத்தனமான வேலை செய்யமாட்டான். அவளுக்கு அவ்வளவு தூரம் அவனில் நம்பிக்கை இருந்தது.

மோகனுக்கும் அங்கு நிற்கமுடியவில்லை. நாடகம் பழகவென்று கூட்டம் சேர்ந்து அங்கேகாத்து நிற்கிறது. ஒன்றில் பழகவேண்டும், இல்லையென்றால் நேரத்தை வீணடிக்காமல் வீடுகளுக்குப் போய்விட வேண்டும். இந்த நாட்களில் அனாவசியமாக...

"எதுக்கும் முதல் நான்போய் காத்துக்கொண்டு நிற்கிறவங்களை எதையாவது சொல்லி அனுப்பிப் போட்டு... இவனப் பாக்கிறன். சைக்கிளிலயா போனவன்?"

"ஓம்"
"தேவகி... தேவகி..."
"ஐயோ... அம்மா! எழும்பிற்றாவு போல இருக்கு... நீங்க ஓடுங்க... பிறகு உங்களிலையும் தாவிடும்..." அவள், அவன் நிற்கிறானா? போகின்றானா என்று பார்க்கக் கூட நிற்கவில்லை.
"வாறனம்மா" என்று பதில் கொடுத்துக் கொண்டே உள்ளே ஓடிவிட்டாள். மோகனும் 'கேற்'றைத் திறந்து கொண்டு, சைக்கிளில் ஏறிப்போனான்.

* * *

அவனுக்குத் தெரிந்த தகவலோ சொற்பம். அதற்குள் இவன்களுக்கு விபரம் சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் அவர்கள் அத்தனை பேரும் சங்கரில் பெருமதிப்பும், நம்பிக்கையும் கொண்டிருப்பது அவனுக்குப் புரியும். எனவே மேலோட்டமாக எதையும் சொல்லி சமாளிக்க முடியாது.

சங்கரின் நாடகங்களுக்கு ஊரில் மட்டுமல்ல வெளியிடங்களில் கூட நல்ல மதிப்பு உண்டு. அதை அவன் தனியே சாதித்ததாக எண்ணிக் கொள்வதில்லை. இது எல்லோருடைய வெற்றி என்று தான் பாராட்டுவான். சிலசமயங்களில் நாடகங்கள் நடத்தினால் வருமானங் கிடைக்கும். கோயில் திருவிழாக்கள்... பரிசளிப்பு விழாக்கள் என்று வரும்போது இந்த மாதிரி காசு கிடைக்கும். ஆனாலும் கிடைக்கிற பணத்தையெல்லாம் ஏதாவது ஒரு வகையில் நாடகங்களுக்குத்

தேவையானதை வாங்கிச் சேர்க்கவே அவன் பயன்படுத்துவான். இதனால் கிடைத்த முன்னேற்றம் முழுக்குழுவுக்குமே ஒரு உற்சாகத்தை, ஆர்வத்தைக் கொடுக்கவே செய்தது.

"சரியான பிரச்சினை என்னவெண்டு விளங்கவில்லை... நாங்க நாளைக்கு இதே நேரத்துக்குக் கூடுவம் என்ன...? நான் ஒரு தரம் சங்கரப் பார்த்துப் பேசிப்போட்டுத்தான் வீட்ட போவன்... சிலநேரம் அவன் எங்கட வீட்ட போயிருப்பானோ தெரியாது"

எல்லோரும் ஒருநாள் வீணாகிவிட்ட ஆதங்கத்தில் கலைந்தபிறகு மோகன் சனசமூக நிலைய் கட்டிடத்தைப் பூட்டித் திறப்பைப் பக்கத்தில் சோமண்ணன் வீட்டில் கொடுத்து விட்டு,

"என்னதம்பி...? வசனம் ஒண்டும் கேக்கயில்ல... நாடகம் பழகல்லியா?" என்ற அவரது விசாரணைக்கெல்லாம் பட்டும் படாமலும் பதிலளித்துவிட்டுப் புறப்பட்டான். அவன் சிந்தனையெல்லாம் சங்கரைச் சுற்றியபடி 'எங்க போயிருப்பான்?..."

அவன் ஒரு சில மீற்றர் தூரம் போயிருக்கமாட்டான். சைக்கிளில் சங்கர்!

"டேய்! சங்கர்!... நாசமாப்போக நில்லுடா!"
இவன் கூப்பிட்ட குரலுக்குத்தான் சுயநினைவடைந்தவன் போல, சைக்கிள் நிலைதடுமாறித் தத்தளிக்க ஒருவாறு கால் குத்திச் சமாளித்தவனாக 'பிரேக்' போட்டு நின்றான் சங்கர்.

"மோகன்!... நீ எங்க போறா?... நாடகம்?... எங்க ஆக்கலெல்லாம்?"

"எல்லாரும் போயாச்சு! பொழுதுபட்ட பிறகுதான் நாடக நினைப்பே வருகுதாக்கும்!"

"ஏன்... ஏழு மணி வரைக்கும் பழகிறவங்கதானே? பிறகென்ன ஆறரையோட கிளம்பினது?"

"தேவதாண்டா! நீ கேட்கத்தான் வேணும்! ஏன்டா? ஆறரை வரைக்கும் வராத நீ... ஏழுக்குள்ள வருவாயெண்டு சாத்திரமா பாக்கிற?... ஒரு சொல்லுச் சொல்லிற்றுப் போனியா?... எங்கடா போயிருந்த நீ...?"

அவன்தான் என்ன சொல்லுவான்? அவன் போன இடங்கள் அவனுக்கு உணர்விலே பட்டிருந்தால்தானே? கால் உழக்கியது, சக்கரம் சுழன்றது. அவன் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு 'குப்பைக் கரத்தைபோல' இதோ பழகின இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறான். இந்த இலட்சணத்தில் எங்கே போனான் என்று எப்படிச் சொல்லுவது?

"சரி... சரி... நீ வீட்ட போ... அவள் தேவகி பதறினபடி இருக்கிறாள்... இனிமேல் இந்த மாதிரி மட வேலைகளைப் பாராத... போற வாற இடத்தைச் சொல்லாமல் இந்த நாளையில புறப்படலாமடா?... நாளைக்காவது இந்த மாதிரி செய்யாம வேளைக்கு வா... எல்லாரும் வருவான்கள்..."

சங்கர் அசைந்தமாதிரித் தெரியவில்லை. சைக்கிளைத் திருப்பிக் கொண்டு புறப்பட முனைந்த மோகன் சற்றுச் சூடாகவே கேட்டான். "ஏன்டா டேய்! சோல்லுறது விளங்கயில்லியா?... என்ன குத்துக்கல்லாட்டம் நிக்கிறாய்? திரும்பு... திரும்பு... வா வீட்ட போவம்... நானும் வந்து விட்டிற்றுப் போறன். இந்த நாளையில இப்பிடி விசரன் போல திரியாதடா! வா... வா.."

ஏதோ முணுமுணுப்புத்தான் கேட்டது... என்ன என்று விளங்கவில்லை.

"என்னது?... என்ன சொல்லுறாய்?... ஒண்டும் விளங்கயில்ல... வா... போவம்... என்னச் சுணக்க வேணாம்"

"நீ போ... நான் தனியாகப் போவன்..." கல்லுளி மங்கனாய் நின்றவன் சைக்கிளைத் திருப்பினான்.

"பறவாயில்லை... நானும் வாறன்... விடு சைக்கிள... வீட்ட போவம்"

"என்ன வெறிகாரன் எண்டா நினைச்சுக் கொண்டாய்!.. நீ போ மோகன்... நான் தனியாப் போறன்"
"வீட்டதானே போறாய்?"
"வீடா?... எனக்கு வீடா?... நரகம்" அரையும் குறையுமாகத்தான் மோகன் காதில் விழுந்தது.
தேவகி சொன்ன தகவலுக்கு இது ஒன்றும் புதினமான பதிலில்லை என்பது அவனுக்குத் தெரியும். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்புடன் சங்கரின் பின்னாலேயே அவன் வீடுவரை போய்த் திரும்பினான் மோகன்.

* * *

"அம்மா... அண்ணாக்கு சாப்பாடு"
"சாப்பாடா... மண்ணத் தின்னச் சொல்லு..."
"அம்மா... இந்த விசர்க்கதய நிப்பாட்டப் போறீங்களா இல்லியா? இப்ப என்ன நடந்ததெண்டு புதுசாக் கொம்பி அடிக்கிறீங்க?"
"புதுசாத்தான் இருக்கு உங்க ரெண்டு பேருக்கும்... அவர்ட நாடகமும், கூத்தும் தான் அவருக்கு உயிர்... வீட்டில் ஒரு குமர்...! சோறு தண்ணிக்கு வழி... கொஞ்சமாவது எண்ணம் கவல இருக்குதா? வேளைக்கு... வயிறு நிரம்புது இல்ல?"
"அம்மா... தேவையில்லாத கதைகளைக் கிளப்பி அவனைச் சாப்பாடு இல்லாமல் படுக்கவைக்கப்போறீங்க.."

"படுக்கட்டும்... எனக்கென்ன...? வீடுவாசலில ஒரு அக்கறையில்ல... ஒரு ஆனமான தொழிலத் தேடுவம் எண்டில்ல... அந்த மனுசன்ட பென்சன் காசும் இல்லாட்டால் நானும் நீயும் ரோட்டில... கொஞ்சமாவது யோசிக்கிறானா? இவன்ட நாடகமா இங்க சோறு போடுது?..." அவள் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு நடப்பதை வேடிக்கை பார்க்குமாப் போல் தேங்கி நின்றது.

"ஏனம்மா? எண்டைக்குமில்லாம... இண்டைக்கு மட்டுமா அவன் தொழிலில்லாம இருக்கிறது தெரிஞ்சுது...? ஏன் சும்மா அவன

திட்டுறீங்க... அவன் வேணுமெண்டா இப்பிடி இருக்கிறான்? தொழில் எண்டால் 'அப்ளிகேஷன்' போட்ட கையோட தூக்கித் தந்திடுவான் எண்டா நினைச்சீங்க... அவனும் தெண்டிச்சுப் பாக்கிறான்தானே... சும்மா தறுதலையா ஊரச்சுத்தித் திரியாம ஒழுங்கா நாலுபேரச் சேர்த்து உருப்படியான காரியம் பாக்கிறது உங்களுக்கே ஒத்துவர இல்லியா?"

"ஓம்... அவனக் குறையவிடாத... அவர்ட உருப்படியான வேல ஊருக்குத்தான்.. வீட்டில புஸ்வாணம்... நாளைக்கு உனக்கொரு வழியப் பாக்கிற இல்லியா?... அங்க பார்... அவள் மாலதிக்கு கலியாணம் சரிவந்திற்றாம். பாஸ்கரன்தானே ஓடித்திரிஞ்சு அலுவல் பாத்திருக்கான்.. ஏன் அவனும் நாடகம் போட்டுத் திரியாம இந்த வேல பாக்கிறான்?... அவனுக்கு அறிவு போதாது போலிருக்கு..."

"அடி சக்கண்டானாம். யாரு சொர்ணம் மாமியா வந்தவ...? கூடக்கணக்கில புளுகிக் கொட்டியிருப்பாவு... அதத் தூக்கி மடியில கட்டிக் கொண்டு நீங்க ட்ராமா காட்டுறீங்களா?... நல்லாயிருக்குது... இங்கு கலியாணம் கட்டித்தா எண்டு யாரும் உங்களக் கெஞ்சின வங்களோ? ஏன்மா வானத்தால போற பிசாச ஏணிவைச்சு இறக்கி தலையில தூக்கிவைக்கிறீங்க... ஐயோ... மாலதியிட கலியாணம் தானா இவ்வளவுக்கும் காரணம்..."

"ஓம் அவள் கேட்டுத்தான் இவங்க ஏற்பாடு பண்ணினாங்க... நானும் நீ சொல்லும் வரைக்கும் பொறுக்கிறன்...எங்களுக்கு எண்டு ஒரு எண்ணங் கலவ இருக்கக்கூடாதாக்கும்... பெத்து வளர்த்து விட்டிற்றம் பாரு... பேசுவீங்க..."

தேவகிக்கு அளுவதா சிரிப்பதா தெரியவில்லை. அவளால் ஊகிக்க முடியவில்லை. எந்த அளவுக்கு சொர்ணம் மாமி அம்மாவுக்குத் திரி வைப்பாள் என்று ஆறுதலாகச் சொன்னாள்.

"அம்மா... மாலதிக்கு காலம் வரவும் காரியம் கைகூடுது... எதுக்கும் காலம் வரைக்குள்ள அதது வராமலா போகும்?... நீங்க அழுது

மாரடிச்சிறா மட்டும் அண்ணாக்கு வேல கிடைச்சு எனக்கும் கலியாணம் வந்திடுமா? சும்மா ஏனம்மா அண்ணாவைத் திட்டுறீங்க?... ... நாளைக்கு மனசு தாங்காம ஏதும்...' கலங்குவது இவளது முறையாயிற்று!

அங்கே ஒரு அமைதி! சுவர்ககடிகாரத்திலே எழும்பிய 'டிக்', 'டிக்' ஓசையைத தவிர ஒரு சத்தமும் வரவில்லை.

அவள் கேட்ட கேள்விக் குறியில்லாத கடைசிக் கேள்வி தாய், மகள் இருவர் மனத்திலும் ஒரு தாக்கத்தைக் கொடுக்கவே செய்தது.
"அவன வந்து சாப்பிடச் சொல்லு"
தேவகிக்கு சிரிப்புத்தான் வந்தது. "அம்மா... அம்மா...! ஏசியும் கொள்ளுவீங்க... சாப்பாடும் போடுவீங்க..."

"அதான் பெத்த மனம் பித்து எண்டு சொல்லுறாங்க"
"அண்ணா... அண்ணா... போச்சுடா!" அறைக்குள் சென்று சாப்பிடச் சொல்லிக் கூப்பிட்டுவரப் போனவள் அவன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கக் கண்டாள். கட்டிலின் அருகிலிருந்த மேசை மீது தண்ணீர்ப் போத்தல் வெறுமையாகக் கிடந்தது.

அவளுக்குத் தாயோடு பேசவும்மனமிருக்கவில்லை. "அந்தா அவன் சாப்பிடாம படுக்கிறான்... எனக்கும் இங்க பசிக்கயில்ல..."

"வெறும் வயித்தோட படுக்காத... அவனுக்குத்தான் ஆங்கார மெண்டால்... நீ ஏன் வெறும் வயித்தோட படுக்கவேணும்?"

தேவகி சாப்பிடமாட்டாள் என்று அவளுக்குத் தெரியும் 'ஏன்தான் மதியம் வாய்விட்டோமோ' என்று இப்போதுதான் ஆதங்கப்பட்டாள்.

ஒருவேளைக்குத் தான் பேசியது சரியென்று பட்டது. இப்படியான நேரங்களில் தான் கணவனையும் அவள் நொந்து கொள்ளவே செய்தாள். படிப்பிக்கிற பாடசாலைகளெல்லாம் அவர் இருக்குந்தனைக்கும் நாடகப் போட்டிகளில், இசைப் போட்டிகளில் முதலிடம்தான். ஓய்வு நேரங்களில்

கூட 'டியூசன்' கொடுத்தாவது உழைப்போமென்று நினைப்பதில்லை. எங்காவது, எதற்காவது நாடகம் என்றும், பாட்டு என்றும் மாணவர்களை ஊரில் அண்டை அயல் பையன்களை வைத்து ஏதாவது பண்ணிக் கொண்டே இருப்பார். வீட்டு அலுவலெல்லாம் அவளது தலையில்...! பெண் ஒருத்தி வயசுக்கு வந்து காலமாயிற்றென்றாவது நினைத்து ஒரு செப்புக் காசுகூடச் சேர்க்கவில்லை.
இவனோ அப்பனுக்குத் தப்பாமல் பிறந்தவனாக கூத்து, நாடகம்...!

எவ்வளவு நேரம் அப்பயே யோசித்தபடி இருந்தாளோ தெரியவில்லை. திடீரென்று சுயநினைவு பெற்றவள் வயிறு நிறைய தண்ணீரைக் குடித்துவிட்டு, எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டு படுக்கப் போனாள்.

* * *

"ஏன் சங்கர்... நீ காலையிலயும் சாப்பிட இல்லியாமே...? ஏண்டா வீணா வைராக்கியம் காட்டுறா... அந்த மனுசியும் ஏதோ ஆத்திரத்தில பேசிப்போட்டுது எண்டால்!... நீயென்னடா... ஒரு வகையில அவ சொல்லுறதிலயும் நியாயம் இருக்குதடா!"

"என்னடா நியாயம்...? நான் வேணுமென்டா தொழில் இல்லாமத் திரியிறன்..? நீயறிய எத்தன 'அப்ளிகேசன்' போட்டிருப்பன். எத்தன பேரக் கெஞ்சியிருப்பன். தங்கச்சிட அலுவலப்பத்தி கவலப்படாம நான் ஒண்டும் குதிச்சுத் திரியல்ல... எனக்கு கவல இருக்கு... அதுக்காக மூலையில போய்க் குந்திக் கொள்ளவா?"

"என்ன இருந்தாலும் நீ இந்த நாடகம், அது இது எண்டு செலவளிக்கிற நேரத்தக் கொஞ்சம் குறைச்சுப் போட்டு தொழில் விஷயத்தில கொஞ்சம் கூட கவனம் செலுத்துறது நல்லமடா... பொறு, பொறு அவசரப்படாத நாங்களும் கொஞ்சம் யதார்த்தமாக இருக்கவேணுமடா..! எங்கட பகுதியில இந்தமாதிரி கலையால வளந்தவங்க யார்டா இருக்கிறாங்க? யாருக்கடா நாடகமும், கூத்தும், பாட்டும் சோறு போடுது? எங்கட சனங்கள் காசு கொடுத்து நாடகம் பார்த்து ஆதரிக்கிற மனப்பக்குவத்துக்கு

இன்னம் வரயில்ல.... சிங்களப் பகுதியப் பார்..... அங்க வேறு கத.....
எல்லா வசதி வாய்ப்பும் இருக்குது..... ஏட்டிக்குப் போட்டியா நாடகம், இசை, நடனம் எண்டு எல்லா இடத்திலயும் நடக்குது! நல்ல கூட்டமும் சேருது..... வருமானமும் நிறைய...... இங்க அந்த நில வரும்.... ஆனா காலம் எடுக்கும்டா.... அதுவரைக்கும்....." மோகன் முடிக்க முன்னமே சங்கர் குறுக்கிட்டான்.

"டேய் மோகன்.... அதுவரைக்கும் காலம் சரிவரட்டும் எண்டு ஒதுங்கவா சொல்லுகிறாய்! இது.... இது காசுக்காக..... வருமானம் பார்த்து நான் செய்யிற என்ட இரத்தத்தில ஊறினதொண்டுடா!..... என்னால இத வச்சுக் கொண்டு சும்மா இருக்க முடியாது..... இதில தான்டா எனக்கு மனநிம்மதி கிடைக்குது..... சந்தோஷம் கிடைக்குது."

"எனக்கும் தெரியுமடா! ஆனாலும் வீடு வாசல் என்டொரு பொறுப்பையும் மறக்க ஏலாதே..... காலையில அம்மா ஒவ்வொண்டா..... ஒவ்வொருத்தராச் சுட்டிப் பேசைக்குள்ள..... என்னால மறுக்க முடியல்ல..... பாஸ்கரன் எப்படியெல்லாமோ சிரமப்பட்டு மாலதிக்கு ஒரு வழி பண்ணி இருக்கிறான். விசு..... வெளியில....... இப்ப வீட்டு வேலயும்.... 'ஸ்டைல்' இதெல்லாம் மனிசி அறியக்குள்ள தன்ட வீட்டு நிலமய யோசிக்காதா.....? ஆத்திரத்தில் பேசாதா....? அது சரி..... விசு உனக்கு உதவி செய்வேனெண்டு எழுதியிருந்தானாமே போன கடிதத்தில.... அவனக்கேட்டு நீயும்கூட வெளியில போவன்..... நாலுகாசு கையில சேர்த்து இதவிட நிரந்தரமா ஒரு 'க்ரூப' வைச்சு நாடகம் நடத்தவும் முடியுமல்லவா....? ஏன் கேட்கயில்ல நீ.....?"

"அத வேற சொன்னாவா?..... நான் அவனிட்ட இந்த நாடகப்போட்டியப் பத்தி எழுதி காசு இருந்தால் நல்லதா உடுப்பெல்லாம் ஆயத்தப்படுத்தலாமெண்டு சொன்னன்...... அதான் அப்படி எழுதியிருந்தவன்.... அடுத்த லெட்டரில ஒரு சந்தோசமான செய்தி வரும் எண்டும் எழுதியிருந் தான்.... நான் நினைக்கிறன் காசு ஏதும் அனுப்பி வைப்பான் எண்டு...."

"அடுத்த கடிதம் வரமுதல் நாடகப்போட்டி முடிஞ்சிடும்.... பின்னேரம் வேளைக்கு வருவியா? இல்ல....."

"வருவன்.... யார் என்ன கதைச்சாலும் எனக்குக் கவலயில்ல.... நான் நினச்சதச் சாதிச்சே தீருவன்...."

"கேட்க நல்லா இருக்கடா..... ஆனா இதே வேகம் வீட்டு விசயத்திலயும் இருக்கட்டும்.... தொழில் தேடுற விசயத்திலயும் வேகம் வேணும்"

சங்கர் பதிலேதும் தரவில்லை. வேதாளம் முருங்கையில் ஏறாதவரைக்கும் சரிதான் என்று புறப்பட்டுப் போனான் மோகன்.

* * *

நாடகப் போட்டியில் பெற்ற வெற்றி வீட்டில் ஓரளவு சுமுக நிலையைக் கொண்டு வந்திருந்தது.

ஊரெல்லாம் கோயில் திருவிழா தொடங்கும் காலம்..... எனவே அவனது நாடகத்தைக் கேட்டு இரண்டு மூன்று வேண்டுகோள்கள். அதைப்பற்றிச் பேசவும் முடிவெடுக்கவும் மோகனும், சாந்தனும், திருநாவுக்கரசுவும் வந்திருந்தனர்.

எத்தனையோ பேர் கேட்டாலும், எவ்வளவுதான் கேட்டாலும் நாடகத்தைப் போட்டுச் சக்கையாக்க விரும்பவில்லை. தேவையென்றால் வேறு நாடகங்களைப் பழகியெடுக்கக்கூட அவன் தயாராக இருந்தான்.

மற்ற மூன்று பேரும் இதையே ஆமோதித்தார்கள். முடிவு எடுப்பது சிரமமாயிருக்கவில்லை. அப்போது பார்த்து தபால்காரனும் கடிதத்துடன் வந்தான். தேவகிதான் ஓடிப்போய் வாங்கி வந்தாள். வெளிநாட்டுக் கடிதம். அவனுக்கு எழுதக்கூடிய ஒருத்தனென்றால் விசு மட்டும்தான்.

நிச்சயமாகக் காசு அனுப்பியிருப்பான். நல்ல தேவைக்குத்தான் வந்து சேர்ந்திருக்கிறது. இது வரைக்கும் நடத்தாத அளவுக்கு ஆடம்பரமாக

நல்ல "செட்டிங்"களுடன் இந்தமுறை திருவிழாவில் நாடகம் நடத்த வேண்டும்..... பதைக்கின்ற உள்ளத்துடன் அவசர அவசரமாக உறையைக் கிழித்து கடிதத்தை எடுத்துப் பிரித்தான். 'செக்' ஒன்றுங் காணும்..... திரும்ப உறைக்குள் ஊதிப்பார்த்தான். ம்கூம்! ஏமாற்றமாகிப் போய்விட்டான்.

வெளியில் அதைக் காட்டாமல் கடிதத்தைப் படிக்க முற்பட்டான். அவனை அக்கறையோடு பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அவனில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த மாற்றம் அதிசயமாயிருந்தது.

"டேய்! மோகன்..... அம்மா.....! என்ன எழுதியிருக்கிறான் பாருங்க......"
"என்னப்பா அது"
"நாசமாப்போக..... நான் தொடக்கத்தில என்னமோ ஏதோ எண்டு நினைச்சன்......"
"டேய் சஸ்பென்சக் கூட்டாதடா! என்ன எழுதியிருக்கிறான்?"
"அம்மா.... டேய் மோகன்......"தன்னை நிதானத்துக்குள் கொண்டுவர முயற்சித்தவனாக "அம்மா.... விசு.... அப்பாட்டத்தான் படிச்சவனாம்...... தன்னில இருந்த திறமைய அவர்தான் கண்டுபுடிச்சி வளர்த்தவராம்.... அதால......"
"அதால.....?"
"அதால...... தேவகிய அவன் கலியாணம் பண்ண விரும்புகிறானாம்......"
பிறகென்ன? அங்கே ஒரே ரகளை தான்.
சங்கரின் மனக்கண்ணில், திருவிழா மேடையில், விசுவை முன்வைத்து நாடகம் உருவாகிக் கொண்டிருந்தது.

**- 1994 -**




பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனைவடக்கு - மட்டக்களப்பு

Printed by : New Selection - Akkaraipattu 067 2278855